தனிப்பிரதி விலை அணா 0—1—6.
Reg. No. M. 3066. 1937 மார்ச்சு 1.
PAHUTHARIVU ("REASON")
மலர் 2. திதி 11.

பகுத்தறிவு.

பல அறிஞர்களின் அறிவியல் ஆராய்ச்சிகள், விஞ்ஞான விளக்கம், பெண்கள் முன்னேற்றம், உடற் பயிற்சி, சுகாதாரம், வைத்தியம், பாட்டுகள், கட்டுரைகள், நாவல்கள், உலக விசேஷதங்கள், சிறு கதைகளும் நிறைந்து விளங்குவது

வருட சந்தா

உள் நாடு ரூ. 1—0—0.	வெளிநாடு ரூ. 1—8—0.
தனிப்பிரதி 0—1—6.	தனிப்பிரதி 0—2—6.

சந்தாதாரர்களுக்கு

"பகுத்தறிவு"க்கு எந்த மாதத்தில் சந்தாதாரர்களாகச் சேர்ந்தாலும் வருட சம்பந்தமாகிய மே மாதம் முதலிலிருந்து பத்திரிகைகள் அனுப்பப்படும். கொஞ்சம் பிரதிகளே கையசமிருப்பதால் எல்லோரும் முந்திக்கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

"பகுத்தறிவு" சந்தாதாரர்களுக்கு முதல் வருடபைண்டு வால்யம் (12 பிரதிகள் சேர்ந்தது) ஒரு ரூபாய்க்குக் கொடுக்கப்படும். தபால் சார்ஜ்வேறு. சொற்பக் காப்பிகளே இருப்பதால் உடனே ஆர்டர் கொடுங்கள்.

புதிதாகச் சந்தா சேருபவர்கள் சந்தாத் தொகையை முன்னதாகச் செலுத்திவிடவேண்டும்.

சந்தாதாரர் பத்திரிகை சம்பந்தமாய்க் கடிதம் எழுதும் போது சந்தா நம்பரைக் குறிப்பிட வேண்டும்.

விஷய அட்டவணை பக்கம்.

புது உலகம் (பாட்டு) (தி. வே. அ.)	1
சீர்திருத்த மார்க்கம் (இங்கர்சால்)	3
இவ்வுலகை யார் படைத்தார்? (ஜோஸப் மெக்கேபி)	17
மதம் ஏன் ஒழிபவேண்டும்? (ஈ. வெ. ரா)	27
நவீன வாழ்க்கை (M. S.)	39
மாதரும் மதமும் (எப். ஜெ. கௌல்டு)	46
மானங்கெட்ட தன்மைபோனால் மனிதத்தன்மை தானேவரும். (கைவல்யம்)	56

பகுத்தறிவு.

அறிவை வளர்க்கும் ஓர் மாத வெளியீடு.

(○)

அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார்
என் உடையரேனும் இலர். (குறள்.)

மலர் 2. } ஈரோடு 1937. மார்ச்சு 1. { இதழ் 11.

புது உலகம்.

(தி. வெ. அ.)

கும்மி.

(1) அச்சம் ஒழிந்திடும் ஆண்மை வளர்ந்திடும்
அடிமை தொலைந்திடுமே—பல
இச்சகம் பேசியே உழையாது உண்பவர்
வாழ்க்கையும் இற்றிடுமே.

(2) சாஸ்திரம், வேதம், சமயமென்றே சொலும்
சாலங்கள் ஓய்ந்திடுமே—ஒரு
மாத்திரையில் அவர் மாய முழுவதும்
மாண்டு மறைந்திடுமே.

(3) உண்மை யறிவெனும் நன்மை தருஞ்சுடர்
உலகினிற் றோன்றிடுமே—பல
புன்மை வாதமும் பொருந்தாச் செய்கையும்
புதையுண்டு செத்திடுமே.

(4) கோயில் குளமென்று கொள்ளை யடித்தவர்
குந்துவர் மூலையினில்—தங்கள்
மாயமினிச் செலமாட்டாதென வெண்ணி
வாளா விருப்பர் வைதீகர்களே.

(5) பாலர் மணம் பொருந்தா மணமிவை
பாரில் மறைந்திடுமே—பல,
கோல முறுங்காதல் கலப்புமணமிவை
கோடி பெருகிடுமே.

(6) மூடச் சடங்கொடு வேதக் கட்டளை
முழுவதும் மாய்ந்திடுமே—தினம்
ஓடியுழைப்பவன வறுமையும் புன்மையும்
ஓடி மறைந்திடுமே.

(7) சாதி சமய மெனும் பித்துத் தீர்ந்திடத்
தக்கன தோன்றிடுமே—அவை
மாயமெனச் சொலி மக்கட்குணர்த்துநல்
மாண்பு வளர்ந்திடுமே

(8) மக்கட் கிதந்தரும் யாவையும் நன்மையாம்
மற்றவையாவையும் தீமையெனத்
தக்கவர்சொல்லும் நன்மொழி செய்கையில்
தழைத்து வளர்ந்திடுமே

(9) தத்துவந்தன்னையுணராத கொள்கைகள்
தானாய்மடிந்திடுமே—அவை
எத்திசை செல்லினும் ஏலாதெனத்தள்ள
ஏங்கிவிழுந்திடுமே

(10) வறுமை, பகை, பிணி, தீயவை யாவையும்
மாண்டுமடிந்திடுமே—நல்
அறிவொடு நற்கலை பல்தொழிலென்றிவை
அகிலத்திற் பரவிடுமே.

சித்திரத்த மார்க்கம்.

(இங்கர்சால்)

III

வேறொரு வீண் செலவு.

நான் ஒளிமறைவின்றிப் பேசுகின்றேன். நாம் உண்மையை ஆராய்கிறோம்; மக்கள் க்ஷேமத்தை விருத்தி செய்யும் மார்க்கம் காணமுயல்கிறோம். எனவே எனது உண்மையான—அந்தரங்க சுத்தியான அபிப்பிராயத்தை நான் கூற வேண்டியது தான். உண்மையைக்கூறும்படி என்னைக்கட்டாயப்படுத்த உங்களுக்குஉரிமையுமுண்டு. நானும்எனது ஆத்மாவின் கோர்மையை—கௌரவத்தைக்காப்பாற்றிக் கொள்ள வேண்டும்.

வேறொரு வழியிலும் மக்களின் சக்தியும் செல்வமும் பாழாகின்றன. சரித்திரகால ஆரம்ப முதல் நாளிதுவரை தெய்வ அருளை நாடுவதே மக்களின் வாடிக்கையாக இருந்து வந்திருக்கிறது. பன்னூற்றாண்டு காலமாக காணமுடியாத சக்தியின் அருளைப் பெறும் பொருட்டே நமது செல்வம் பாழ்படுத்தப்படுகிறது. நம்முடைய அமெரிக்க தேசத்தில் மாத்திரம் 100 கோடி டாலர் ஆலயச் செலவுகளுக்குத் தான மாக வழங்கப்பட்டிருக்கிறது. இதற்கு வருஷா வருஷம் வட்டி வருமானம் 500 லக்ஷம் டாலர். அந்த நிதியை நிர்வாகம் செய்கிறவர்களுக்கும் மக்களுக்கு கடவுளருளை வாங்கிக் கொடுக்கும் தரகர்களுக்கும் ஏராளமான தொகைச் சம்பளம் கொடுக்கப்படுகிறது. எனவே நம்முடைய நாட்டில் வார மொன்றுக்கு சராசரி 20 லக்ஷம் டாலர் வீதம் ஆலயங்களுக்காக வீண் செலவு செய்யப்படுகிறது. ஒரு வேலை நாளுக்கு 10 மணி வீதம் கணக்குப்போட்டுப் பார்த்தால் ஆலயச் செலவுக்கு ஒரு நிமிஷத்துக்கு 500 டாலர் செலவாகிறது.

இவ்வாறு செலவு செய்யப்படும் தொகைக்குக் கிடைக்கும் பிரதிபலனோ மிகச் சொற்பம். அதனால் கிடைக்கக் கூடிய நன்மை அவ்வளவு பெரிதாகவும் இருக்க வில்லை. குற்றங்கள் அதிகமாகக் குறையவில்லை. அதர்மம், அநாசாரம், வறுமை முதலியனவும் பாராட்டத்தக்க முறையில் குறையவில்லை. சமய வாதிகள் முயற்சி இந்நாட்டில் முழுத் தோல்வியடைந்திருக்கையில் வெளிநாடுகளில் போய் மதப்பிரசாரம் செய்யவும் ஏராளமான பணம் செலவு செய்யப்படுகிறது. வாரத்தில் ஆறு நாள் நமது ஆலயங்கள் மூடப்பட்டிருக்கின்றன. வாரத்தில் ஒரு நாள் மட்டும் சில மணிநேரம் ஆலயங்கள் திறந்திருக்கின்றன. ஆலயங்களையோ திருச்சபைகளையோ ஒழிக்க வேண்டுமென்று எவரும் விரும்பவில்லை அவைகளினால் உலகத்துக்கு உருவான நன்மை யேற்படவேண்டுமென்பதே எனது விருப்பம். மூவாயிரம் அல்லது நாலாயிரம் பேர் வாழும் நமது நகரங்களில் நான்கோ ஐந்தோ ஆலயங்கள் இருக்கின்றன; சில இடங்களில் ஐந்திற்கு மேற்பட்ட ஆலயங்களுமுண்டு. இந்த ஆலயங்கள் சாரமற்ற வேற்றுமைகளை ஆதாரமாகக் கொண்டு ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. ஞானஸ்நானம், மதச்சடங்குகள், ஆலயச் சொத்து நிருவாகம், விதி, சிந்தனா சுதந்தரம் முதலிய சில்லறை விஷயங்களில் உள்ள அபிப்பிராய பேதமே பல திறப்பட்ட ஆலயங்கள் தோன்றுவதற்குக் காரணம். இவ்விஷயங்களைப்பற்றி நீண்டகாலமாக விவாதங்கள் நடைபெற்றுவருகின்றன; சாதகபாதகமாக வண்டிக்கணக்கான ஆதாரங்களும் காட்டப்பட்டிருக்கின்றன. எனினும் விவாதம் ஒழியவில்லை; சமயவாதிகளுக்குள் ஒற்றுமையேற்படவில்லை. இன்றும் விவாதங்கள் நடைபெற்றவண்ணமே இருக்கின்றன; யுகாந்தகாலம் வரை நடைபெற்றுக்கொண்டிருக்குமென்றே தோற்றுகிறது.

நாலாயிரம் அல்லது ஐயாயிரம் மக்கள் வாழும் நகரங்களில் ஒரே ஒரு ஆலயம் மட்டும் இருந்தால் அதிக நன்மையுண்டாகக்கூடுமென்று நினைக்கிறேன். அது ஞாயிற்றுக்கிழமை மட்டும் திறந்திருந்தால் போதாது. வாரம் ஏழு நாளும் திறந்திருக்க வேண்டும். அந்த ஆலயத்தில் நகரமக்களுக்குப் பொதுவாக ஒரு நூல் நிலையமிருக்க வேண்டும். நூல் நிலையத்தில் ஒரு வாசிப்புச்சாலையும் இருக்க வேண்டும். வாசிப்புச்சாலைக்கு முக்கியமான பத்திரிகைகள் எல்லாம் வரவழைக்கப்பட வேண்டும். ஆலயம் ஒரு நாடக

அரங்குபோலவே அமைக்கப்பட்டிருக்க வேண்டும். திறமை யுடையவர்கள் எல்லாம் சேர்ந்து வாரந்தோறும் காடகங்கள் நடத்த வேண்டும். பஜனை அல்லது சங்கீதக்கச்சேரிகளும் நடத்த வேண்டும். விரும்பும்போதெல்லாம் நகர ஜனங்கள் ஆலயத்தில் கூடவேண்டும். பெண்கள் ஆலயங்களுக்குச் சென்று தையல் வேலைகளும் செய்து கொண்டிருக்க வேண்டும். சதுரங்கச் சீட்டு விளையாட்டுகளுக்கும் அங்கு வசதியிருக்க வேண்டும். எல்லாருக்கும் இன்பமளிக்கக்கூடிய முறையில் ஆலயக்காரியாதிகள் நடத்த வேண்டும். அந்த ஆலயத்துக்குச் செல்வதை நகர ஜனங்கள் எல்லாம் ஒரு பெருமையாக மதிக்க வேண்டும். ஆலய மாடங்களைச் சிலைகளாலும் சுவர்களைச் சித்திரங்களாலும் அவர்கள் அலங்கரிக்க வேண்டும். அது அறிவுவளர்ச்சிக்குதவிபுரியக்கூடிய ஒரு ஞானாலயமாயிருக்க வேண்டும். மக்களுக்கு சாசுவதமான நன்மை பயக்கும் விஷயங்களைப்பற்றி அறிவாளிகள் ஞாயிற்றுக்கிழமை தோறும் பிரசங்கங்கள் செய்யும்படி ஏற்பாடு செய்ய வேண்டும். நகர ஜனங்கள் பாதிரிமாரைப் பார்த்து "வாரம் முழுதும் நாங்கள் எங்கள் தொழில்களில் ஈடுபட்டிருக்கிறோம். அந்தக் காலத்தில் நீங்கள் படிக்க வேண்டும்; ஞாயிற்றுக்கிழமை, நீங்கள் படித்துக்கண்டறிந்த உண்மைகளை எங்களுக்குத் தெரிவிக்க வேண்டும்" என்று கூற வேண்டும்.

அப்பேர்ப்பட்ட பாதிரிமார் சரித்திரம், தத்துவ ஞானம் கலை முதலிய விஷயங்களைப்பற்றித் தொடர்ச்சியாகப் பல பிரசங்கங்கள் நடத்தட்டும். அற்புதமான இனிய எகிப்திய தத்துவ சாஸ்திரங்களைப் பற்றியும், புராணங்களைப் பற்றியும் கூடார்த்தக்கதைகளைப்பற்றியும், மத விஷயங்களைப் பற்றியும் அவர்கள் பிரசங்கம் செய்யட்டும். உலக தத்துவ சாஸ்திரிகள், ஞானிகள், கவிராயர்கள், கலைஞானிகள் கடிகர்கள், நாவலர்கள், புதுக்கருவிகளைக் கண்டு பிடித்தவர்கள், கைத்தொழில்முதலாளிகள், முன்னேற்றப்போர் வீரர்கள் முதலியவர்களைப்பற்றி அவர்கள் நகரமக்களுக்கு அறிவுபுகட்ட வேண்டும். ஞாயிற்றுக்கிழமை தோறும் அவர்கள் சிறுவர்களுக்கு தாவர சாஸ்திரம், பூச்சி புழு சாஸ்திரம், பூகர்ப்ப சாஸ்திரம், முதலியவைகளைப்பற்றி சிறு பிரசங்கங்கள்மூலம் அறிவுபுகட்ட வேண்டும்.

கவிபரர்களைப் பற்றியும், இலக்கிய அழகுகளைப் பற்றியும், சுத்த வீரர்களைப்பற்றியும் தியாகிகளைப்பற்றி

யும், வள்ளல்களைப்பற்றியும் அவர்கள் சிறுவர்களுக்கும் பிரசங்கம் செய்யட்டும்.

இவ்வாறு கொஞ்ச காலம் கடைபெற்றால் நகர ஜனங்கள் எல்லாம் பெரிய அறிவாளிகள் ஆகிவிடுவார்கள் என்பது நிச்சயம்.

உண்மை யென்னவெனில் பழம்புராணங்களைக் கேட்டுக் கேட்டு மக்கள் அலுத்துப்போய் விட்டார்கள். அற்புதங்களிலும் தெய்வீகத்திலும் அவர்களுக்கு நம்பிக்கை குறைந்து விட்டது.

அறியாமையைத் தவிரவேறு இருளில்லை.

அறிவைத்தவிர வேறு ஒளியில்லை.

பொய்யை ஒழித்து மெய்யை உணரும் தோறும் நாம் முன்னேறிச் சென்று கொண்டே இருக்கிறோம்; உலகஞானச் செல்வத்தையும் விருத்தி செய்கிறோம். இவ்வழியாகத் தான் உலகத்தின் எதிர்கால க்ஷேமத்துக்கும் மனித சமூக நாகரிகத்துக்கும் நமக்கு அடிகோல முடியும்.

நான் எவன் மீதும் குற்றம் சாட்டவில்லை;எவனது அந்தரங்க சுத்தியைப்பற்றியும் நான் சந்தேகம் கொள்ளவில்லை. எப்படி நடக்க வேண்டுமோ அப்படியே உலகம் இதுகாறும் நடந்து வருகிறதென்பதை நான் ஒப்புக்கொள்கிறேன்.

ஆனால் தற்காலத்தவர் அறிவே எதிர்காலத்தவர் நம்பிக்கைக்கு ஆணி வேராக இருக்கிறது. மனிதன் தன் கைவசமிருக்கும் சாதனங்களைப் பாழாக்காமல் பாதுகாக்க வேண்டும். அசாத்தியமானவைகளைச் செய்ய முயன்று தனது சக்தியை அவன் பாழாக்கக்கூடாது.

இயற்கைச்சக்திகளைப் பயன்படுத்திக்கொள்ள அவன் முயல வேண்டும். கல்வியில் அவன் நம்பிக்கை வைக்கவேண்டும். ஐம்புலன்களையும் சரியாக உபயோகப்படுத்தி, பிரபஞ்சப் பொருள்களைக் கூர்ந்து நோக்கி, ஆராய்ச்சி செய்து காரிய காரண விசாரணை நடத்தி அறிவை விருத்தி செய்ய வேண்டும். மாமூல் தளைகளையும் தப்பபிப்பிராயத் தளைகளையும் தகர்த்தெறிய வேண்டும். எல்லா விஷயங்களிலும்

தன் சொந்த அபிப்பிராயத்தை தாராளமாக வெளியிட அவனுக்கு மனவுறுதி யிருக்க வேண்டும். மகிழ்ச்சிக்குரிய வழிகளைக்கண்டு விவேகத்துடன் நடக்க வேண்டும்.

IV.

வறுமையை— கொடுமையை குறைப்பதெங்ஙனம்?

உலகத்தைதச் சீர்திருத்த எவ்வளவோ செய்யப்பட்டிருக்கின்றன. எத்தனையோ புதுப் புதுக்கருவிகளும் யந்திரங்களும் தோன்றியிருக்கின்றன; இயற்கைச் சக்திகள் அநந்தம் மக்களுக்கு அடிமைத் தொழில் செய்கின்றன; விவசாயம், சிற்பம், கைத்தொழில் முதலியனவும் எவ்வளவோ வளர்ச்சியடைந்திருக்கின்றன. மக்கள் வாழ்க்கைக்குரிய எல்லாத் துறைகளிலும் எவ்வளவோ முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. இருந்தாலும் வறுமையும் கொடுமையும் ஒழியக் காணோமே?

சிறைச்சாலைகள் எல்லாம் நிரம்பியிருக்கின்றன; நீதிஸ்தலங்களிலும் எக கூட்டம்; வக்கீல்களுக்கும் பூச்சுவிடரோமில்லை; குற்றங்களும் குறையவில்லை.

சிறைத்தண்டனை, சித்திரவதை, அங்கபங்கம், மரணதண்டனை முதலியன மூலம் மக்களைச் சீர்திருத்த பல்லாயிர வருஷமாக முயற்சி செய்யப்பட்டு வந்திருக்கிறது; எனினும் மக்களைச் சீர்திருத்தத் தண்டனைகளுக்குச் சக்தியில்லை யென்றே உலக சரித்திரம் கூறுகிறது. குற்றங்களைக் குறைப்பதற்கு உதவி புரியக்கூடிய பெரிய—பயங்கர தண்டனைகளைக் கண்டு பிடிப்பதும் சாத்தியமான காரியம் என்றே தோற்றுகிறது.

அநேக நாகரிக தேசங்களில் கொஞ்சகாலத்துக்கு முன் வரை சிறு திருட்டுகளுக்குக் கூட மரண தண்டனை வழங்கப்பட்டு வந்தது; எனினும் திருடர்களும் இதர குற்றவாளிகளும் விருத்தியடைந்து கொண்டே வந்திருக்கிறார்கள்; வருகிறார்கள்.

துரோகிகள் தூக்கிலிடப்பட்டார்கள்; துண்டு துண்டாக வெட்டப்பட்டார்கள்; குதிரைகளால் மிதிபட்டுச்

சின்னாபின்னமானார்கள். எனினும் துரோகங்கள்வளர்ந்து கொண்டே இருக்கின்றன.

இத்தகைய எத்தனையோ கொடிய சட்டங்கள் ரத்துச் செய்யப்பட்டு விட்டன. எனினும் குற்றங்கள் பெருகவில் லை. குற்றங்களைக் குறைக்க நாம் இப்பொழுதும் தூக்கு மரங்களையும் சீர்திருத்தச் சிறைகளையும் பற்றே கானாக் கலையுமே நம்பிக்கொண்டிருக்கிறோம். ஒரு கொலை நடந் தால் கொலை செய்தவன் தூக்கிலிடப்படுகிறான்; அல்லது மின்சாரத்தால் தாக்குவித்து ஒழிக்கப்படுகிறான்; அல்லீது சித்திரவதை செய்யப்படுகிறான். அடுத்த நிமிஷத்தில் வேறொரு கொலை நடக்கிறது; அந்தக் கொலை பாதகனுக் கும் மேலே கூறிய கதியே ஏற்படுகிறது. சிலர் திருடுகிறார் கள். உடனே அவர்கள் ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு சிறைக்கூடத்துக்கு அனுப்பப்படுகிறார்கள்; அங்கே மிருகங் களைப்போல் நடத்தப்படுகிறார்கள்; அடிக்கடி தண்டிக்கப் படுகிறார்கள். தண்டனை காலம் முடிந்ததும் அவர்கள் வெளியேற்றப்படுகிறார்கள். வெளியேறும்போது ஊர்போய்ச் சேர பிரயாணச் செலவுக்கு மட்டும் பணம் கொடுக்கப்படு கிறது. உலகத்திலே அவர்களுக்கு நண்பர்களுமில்லை; சுற் றத்தாருமில்லை; பிழைப்புக்கு வழியுமில்லை. அவர்கள் சிறைத்தண்டனை யனுபவித்த குற்றவாளிகள். எனவே ஒருவரும் அவருக்கு உதவிபுரிய மாட்டார்கள். அவர்களை யெல்லாரும் வெறுக்கிறார்கள்; சந்தேகிக்கிறார்கள்; அண்ட பயப்படுகிறார்கள். எங்கேனும் ஒரு வேலை கிடைத்தாலும் அவர்களது சிறைவாசக்கதை வெளியானதும் அவர்கள் வெளியே அனுப்பப்படுகிறார்கள். மாறுபேரும் மாறு வேட மும் பூண்டு தமது சகோதர மக்களின் மதிப்பைப்பெற அவர் கள் தம்மாலானவரை முயற்சி செய்கிறார்கள். யோக்கிய மான முறையில் வயிற்றுப்பாட்டுக்கு வழிதேட சாத்தியமில் லாமலாகும்போது மீண்டும் அவர்கள் திருடத்தொடங்கு கிறார்கள்; மீண்டும் கோர்ட்டுக்கு இழுத்துச் செல்லப்படு கிறார்கள்; சிறைக்கு அனுப்பப்படுகிறார்கள். எனவே சீர்திருந்த அவர்களுக்கு சந்தர்ப்பமே கிடைப்பதில்லை; புதிய நண்பர்களைப் பெறவோ, காலட்சேபத்துக்கு வகை தேடவோ முடியவில்லை.

இது மிக மானங்கெட்ட—வெறுக்கத்தக்க—வருந்தத் தக்க நிலைமையல்லவா? மக்களைச் சிறைக்கு அனுப்பவே கூடாது. ஏனெனில் மனிதன் சுதந்தரனல்ல. அவனது

செயல்கள் எல்லாம் சந்தர்ப்பத்தைப் பொறுத்தவை. இயற்கை எப்பொழுதும் உத்தமர்களைச் சிருஷ்டிக்கவில்லை. மனித வர்க்கத்திலே பெரும்பாலார் தோல்வியடைந்தவர்களே. சில சந்தர்ப்பங்களில், சில மாதிரி மனப்போக்கும் ஆசாபாசங்களுமுடையவர்கள்—சில மாதிரி மூளை அமைப்பும் உடையவர்கள் திருடத்தான் செய்வார்கள்; கள்ளக் கையெழுத்துப் போடத்தான் செய்வார்கள்; ஏமாற்றத்தான் செய்வார்கள். எனவே சந்தர்ப்பங்களில் — நிலைமையில் மாற்றமுண்டுபண்ணி மக்களைச் சீர்திருத்தமுடியுமா என்று பார்ப்பதே முக்கியமான பிரச்சினை. குற்றவாளி, ஜனசமூகத்துக்கு ஆபத்தானவனே. எனவே அவனால் தொந்தரவுண்டாகாமல் ஜனசமூகத்தைக்காப்பாற்ற வேண்டியதும் அவசியமே. குற்றவாளியை அடைத்து வைக்கவேண்டும்; அல்லது சாத்தியமானால் சீர்திருத்தவேண்டும். சீர்திருத்தச்சிறை ஒரு பள்ளிக்கூடமாக இருக்கவேண்டும்; இங்கே குற்றவாளிகளுக்கு கல்வி புகட்டப்படவேண்டும். கைதிகள் வேலைசெய்யவேண்டும்; அவர்கள் செய்யும் வேலைக்கு நியாயமான கூலியும் கொடுக்கவேண்டும். சிறைச்சாலை அதிகாரிகளாக நல்லவர்களைத் தேர்ந்தெடுத்து நியமிக்கவேண்டும். சிறைச்சாலை அதிகாரிகள் பரோபகாரிகளாகவும் ஞானிகளாகவும் இருக்கவேண்டும்; அவர்கள் மக்களின் இயற்கைக் குணங்களையறிந்தவர்களாக இருக்கவேண்டும். கைதிகளுக்கு சுமார் 5 வருஷ காலமாவது சிறைக்கூடங்களில் போதனையளிக்கவேண்டும்; ஒழுக்கத்துக்கு அடிப்படையான கொள்கைகளையும் நற்குணங்களின் மேம்பாட்டையும் இழி தன்மைகளையும் அவர்கள் மனத்தில் பதியும்படி எடுத்துக்கூறவேண்டும். அவர்களை வெறுக்கவில்லையென்றும் அவர்களைத் தண்டிக்கவோ, அவமதிக்கவோ, அவர்களது உரிமைகளைப் பறிமுதல் செய்யவோ எவரும் விரும்பவில்லையென்றும் அவர்கள் நம்புமாறு விளக்கிக்கூறவேண்டும். அவர்கள் செய்த வேலைக்கு நியாயமாகக் கொடுக்கவேண்டிய கூலியை அவர்கள் சிறையிலிருந்து வெளியேறும்போது அவர்களுக்குக் கொடுக்கவேண்டும். அவர்களது பெயரைமாற்றி மாறு பெயருடன் வாழ்க்கை நடத்தவும் சட்டப்படி அவர்களுக்கு அநுமதியளிக்கவேண்டும். இவ்வாறு செய்யப்பட்டால் நாம் நல்லவர்களாகிவிட்டோம் என்ற உணர்ச்சி அவர்களுக்கு உண்டாகும். சிறையில் நியாயமாகவும் கருணையாகவும் நடத்தப்பட்டதாக அவர்கள் உணர்ந்தால் அவர்கள் உள்ளத்து ஒரு நம்பிக்கை

யும் உண்டாகும். சிறையை விட்டு வெளியேறும்போது கையில் கொஞ்சம் பணமிருந்தால் மீண்டும் திருட்டுத்தொழிலில் ஈடுபட அவர்களுக்குத் தூண்டுதல்ஏற்படாது. வேலை கிடைக்கும் வரை தம்மைத்தாமே காப்பாற்றிக் கொள்ள அவர்களுக்கு வசதியும் சக்தியும் இருக்கும். அப்பொழுது குற்றம் செய்வதை ஒரு தொழிலாகக் கொள்ளாமல் யோக்கியமாகவும் சேர்மையாகவும் உலகத்துக்குப் பிரயோஜனமாகவும் வாழ்க்கை நடத்த அவர்கள் துணிவு கொள்வார்கள்.

தற்பொழுது அமலில் இருந்துவரும் சட்டப்படி குற்றவாளிகளைச் சீர்திருத்தவே முடியாது. ஒரு முறை வந்தவனே மீண்டும் மீண்டும் கோர்ட்டுக்குக் கொண்டு வரப்படுகிறான். அவனுக்கு முதலில் தண்டனையளித்த நீதிபதியே மீண்டும் மீண்டும் அவனுக்கு தண்டனையளிக்கிறார். பழைய சிறைக்கு அவன் மீண்டும் மீண்டும் அனுப்பப்படுகிறான். இயல்பாகவே குரூரசுபாவமுடைய கொலை பாதகர்களுக்கு ஆயுட்கால தண்டனை வழங்கி தீவுகளுக்கு அனுப்பவேண்டும். ஏகாந்தமான இடங்களில் சொந்த முயற்சியினால் வாழ்நாள் கடத்த அவர்களுக்கு வசதியளிக்கவேண்டும். குற்றம் செய்வதையே தொழிலாகக் கொண்ட பழங்குற்றவாளிகளை தனிப்பட்ட தீவுகளுக்கு அனுப்பவேண்டும். பெண் குற்றவாளிகளையும் ஆண் குற்றவாளிகளையும் ஒரே இடத்தில் வைக்கக்கூடாது. அவர்களுடைய சந்ததிகள் பூமியில் பெருகாமல் ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளவேண்டும்.

நோயாளிகளுக்கும் அங்கஹீனர்களுக்கும் சந்ததி உண்டாகாமல் தடுக்கவேண்டும் ஜீவஉற்றுக்கள் அசுத்தப்படவே கூடாது.

V

விவாகம், விவாக விடுதலை.

ஒரு தேசத்துக்கு வீடே அடிப்படை. எவ்வளவுக்கு ஒரு தேசத்தில் வீடுகள் அதிகமாக இருக்கின்றனவோ அவ்வளவு அந்த தேசம் வலிமையுடையதாகவும் அச்சமற்றதாகவுமிருக்கும். எனவே ஒரு தேசத்தார் வாடகைக்காரர் ஆகாமல் இருப்பதற்கு சாத்தியமானவைகளையெல்லாம்

செய்யவேண்டியது மிகவும் முக்கியம். பயிரிடுவோரெல்லாம் நிலத்துக்குச் சொந்தக்காராராயிருக்கவேண்டும். இவ்விஷயத்தில் நம்மவர்கள் ஓரளவு முயற்சியெடுத்து வருகிறார்கள். குடியிருப்புகளுக்குப் பாதுகாப்பளிக்க எல்லா தேசங்களும் முயற்சி செய்யவேண்டும்; அதாவது குடியிருக்கும் வீட்டை கடன்காரர் ஜப்தி செய்யக்கூடாதென்று சட்டமியற்றவேண்டும். அமெரிக்காவில் சில மாகாணங்களில் குடியிருப்புப் பாதுகாப்பு ஏற்பாடு அமலில் இருந்துவருகிறது. இதனால் கடன் கொடுப்பவர்களுக்கு இது காறும் பெரிய தீமை எதுவும் ஏற்படவில்லை. கடன் கொண்டவர்களை நாம் சிறையிலடைத்தபோதும், இப்பொழுது இருப்பது போலவே கடன் கொடுத்தவர்களுக்கு பாதுகாப்பு இல்லாமலே இருந்தது. ஒரு குறிப்பிட்ட விலை அல்லது ஒரு குறிப்பிட்ட விஸ்தீரணமுள்ள குடியிருப்பு ஸ்தலத்தை விற்கவோ ஜப்தி செய்யவோ கூடாதென்று சட்டம் ஏற்பட்ட பிறகு அதிகப்படியான நன்மைகள் ஏற்பட்டிருக்கின்றன. அதனால் தேசத்தில் வீடுகள் மும்மடங்கு பெருகியிருக்கின்றன.

எனக்குப் பிரியமான பிரச்சினை வேறு ஒன்றுமுண்டு. அதில் கருணையுடைய அறிவாளிகள் எல்லாம் கவனம் செலுத்த வேண்டியது அவசியம்.

பன்னூற்றாண்டு காலம் மக்கள் அடிமைகளாகவும் பெண்கள் அடிமைகளுக்கு அடிமையாகவும் இருந்து வந்தது நமக்குத்தெரியும். பெண்கள்—தாய்மார் சுதந்தரராயிருக்க வேண்டியது உலக க்ஷேமத்துக்கு மிகவும் இன்றியமையாததாகும். விவாக ஒப்பந்தம் மிகவும் முக்கியமானது; எல்லா ஒப்பந்தங்களிலும் மிகவும் புனிதமானது. எல்லா ஏற்பாடுகளிலும் விவாக ஏற்பாடு மிகவும் மகத்தானது; பொருளமைதியுடையது. ஆனால் விவாகச் சடங்குமட்டும் உண்மையான விவாகமாகி விடாது. இரண்டு ஹிருதயங்களிலும் ஜொலித்துக் கொண்டிருக்கும் காதலுக்கு விவாகச் சடங்கு ஒரு அறிகுறி. பரஸ்பரக் காதலின்றி உண்மையான கலியாண பந்தம் ஏற்படாது. எனவே கலியாணச் சடங்கை நான் ஆதரிக்கிறேன். அந்தச் சடங்கு பகிரங்கமாக நடைபெறவேண்டும்; அதற்குத் தேவையான தஸ்தாவேஜிகளும் வைத்துக் கொள்ளவேண்டும். ஏனெனில் தம்பதிகள் ஒருவரை யொருவர் நேசிக்கிறார்கள் என்பதற்கு விவாகமே ஒரு அத்தாட்சி.

அப்பால் விவாக விடுதலையைப்பற்றிக் கவனிப்போம். விவாகம் செய்து கொண்டவர்கள் தெய்வீகமாக இணைக்கப் பட்டவர் என்றும், வாழ்நாள் முழுதும் அவர்கள் சேர்ந்தே இருந்து தீரவேண்டும் என்றும் கோடிக்கணக்கானவர்கள் அந்தாங்க சுத்தியுடன் நம்புகிறார்கள். விவாகம் செய்து கொண்டவர்கள் எல்லாம் தெய்வீகமாக இணைக்கப்பட்ட வர்களானால் அவர்களை இணைத்த தெய்வம் பெரிய புத்தி சாலியல்லவென்றே சொல்ல வேண்டும்.

ஆழ்ந்து நோக்கினால் விவாகம் ஒரு ஒப்பந்தமே. ஒப்பந் தம் செய்து கொண்டவர்கள் ஒப்பந்த நிபந்தனைகளின்படி நடக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். சமூகத்துக்கு பாதகம் ஏற்படாதிருக்கும் விவாக ஒப்பந்தம் செய்து கொண்டவர்கள் சேர்ந்து வாழவேண்டியதுதான். விவாக ஒப்பந்த நிபந்தனையை மனைவி மீறி நடந்தால் கணவனுக்கு விவாக விடுதலை செய்ய உரிமையளிக்கும் சட்டம் ஏற்படுத்த வேண்டுமென்று நான் அபிப்பிராயப்படுகிறேன். பெண்விரும்பினால் விவாக விடுதலை பெறவும் சட்டம் அனுமதியளிக்க வேண்டும்.

பெண்ணின் நன்மைக்காக மட்டும் அல்ல, சமூக நன் மைக்காகவும் பெண்களுக்கு விவாக விடுதலை உரிமையளிக்க வேண்டும். குழந்தைகள் எல்லாம் காதலின் குழந்தைகளாக வே இருக்க வேண்டும். பிறக்கும் குழந்தைகளுக்கெல் லாம் அந்தரங்க சுத்தியுடன் வரவேற்பு அளிக்கவேண்டும். கணவன்மாரை விரும்பாத—மதியாத—வெறுக்கும் தாய்மா ரின் குழந்தைகள் எல்லாம் உலகத்தில் பைத்தியத்தையும் குற்றங்களையும் விருத்தி செய்யும். பிரியமில்லாத ஒரு புருஷ னோடு வாழவேண்டுமென்று ஒரு பெண்ணை எந்தச் சட்ட மும் சமூகாசாரமும் கட்டாயப்படுத்தக் கூடாது. விவாக விடுதலையினால் உலகத்துக்கு ஒழுக்கக் கேடு எதுவும் உண் டாகாது. ஆனால் தெய்வீகமான காதலுக்கும் ஆபத்துண் டாகாது. மனித சமூகம் இருக்கும்வரை பெண்களும் ஆண் களும் பரஸ்பரம் காதலிக்கத்தான் செய்வார்கள். ஆண்— பெண்கள் காதலிக்கும் வரை உண்மையான விவாகங்கள் நடந்து கொண்டுமிருக்கும். அடிமை வாழ்க்கையில் ஒழுக்கம் வளரவே செய்யாது.

ஆனால் பெண்களுக்கு விவாக விடுதலை அளிப்பதற்கும் முக்கியமான வித்தியாசத்தை நான் கற்பிக்கிறேன். கார ணம் என்னவெனில், விவாகம் செய்து கொள்ளும் பெண்

இளமையையும் அழகையும் புருஷனுக்கு அர்ப்பணம் செய்கிறாள்; எனவே அவள் கிழவியாகி விட்டாள், விரூபியாகி விட்டாள் என்ற காரணத்துக்காக புருஷன் அவளைக் கைவிடவே கூடாது. வாழ்வுக்கு மூலதனமாயிருந்த அவளது இளமையும் அழகும் ஒழிந்து விட்டன; வாழ்க்கை முன்னேற்றத்துக்குள்ள சந்தர்ப்பங்களும்குறைந்து விட்டன; மாறாக புருஷன் தன் மனைவியைக் கலியாணம் செய்த காலத்தில் இருந்ததை விட நல்ல நிலைமையிலிருக்கிறான். பொதுவாக புருஷனுக்குத் தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்ளமுடியும்; பெண்ணுக்கோ எப்பொழுதும் உதவி தேவையாகவே இருக்கிறது. எனவே விவாக ஒப்பந்த விதிகளைப் பெண்கள் வேண்டுமென்றே மீறினாலன்றி பெண்களை புருஷர்கள் கைவிடவே கூடாது. ஆனால் சமூக க்ஷேமத்தை முன்னிட்டும் குழந்தைகளின் க்ஷேமத்தை முன்னிட்டும் பெண்கள் விரும்பினால் உடன் அவர்களுக்கு விவாக விடுதலையளிக்கவேண்டியது தான். ஒரு தலை முறைக்கு சுதந்தரப் பெண்கள்—தாய்மார் இல்லாவிட்டால் ஒரு தலை முறைக்கு பெரியார்கள்—மேதாவிகள் தோன்றவே மாட்டார்கள்.

நமது பாஷையிலுள்ள வார்த்தைகளில் எல்லாம் மிகவும் கனிவான வார்த்தை பிள்ளைப்பேறு. அந்த வார்த்தையில் பரவசமும் வேதனையும் அன்பும் ஆத்மதியாகமும் தெய்வீகமாகக் கலந்திருக்கின்றன. இந்த வார்த்தை மகா புனிதமானது.

VI.

தொழிலாளர் விஷயம்.

தொழிலாளர் விஷயத்தைப் பற்றி—அதாவது முதலாளி—தொழிலாளி தகராறைப்பற்றி நீண்டகாலமாகவிவாதம் நடைபெற்று வருகிறது. அந்தப் பிரச்சினையை முடிவு செய்யப் பலஉபாயங்கள் கூறப்பட்டிருக்கின்றன; சில ஆராய்ச்சிகளும் நடத்தப்பட்டிருக்கின்றன. இலாபத்தைப் பங்கு போடுவதென்பது முடியாத காரியம் நஷ்டத்தை ஏற்றுக் கொள்ள முடியாதவர்களுடன் இலாபத்தைப் பங்குபோடுவது சாத்தியமானதேயல்ல. இலாபத்தை எல்லாரும் சமமாகப் பங்குபோடும் பொருட்டு சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. ஆனால் அநேகமாக அவை வெற்றி பெற வில்லை.

தொழிலாளர் தகராறுகளை முடிவு செய்ய பஞ்சாயத்தே ஏற்றதென்பது கருத்து. ஆனால் பஞ்சாயத்து முடிவுக்குக் கட்டுப்பட முதலாளிகள் ஒருக்கால் தயாராகஇருக்கலாம்; அம்முடிவை தொழிலாளர் ஒப்புக்கொள்ளும்படி செய்ய ஒரு மார்க்கம் காணவில்லை. எனவே பிரச்சினை முடிவு பெறாமலே இருக்கிறது.

முதலாளிகளும் தொழிலாளிகளும்சீர்திருத்தம் பெறாமல் இந்தப் பிரச்சினை முடிவு பெறுமென்று எனக்குத் தோன்றவில்லை. இந்தப் பிரச்சினை மிகவும் சிக்கலாக இருப்பதினாலும் இத்துடன் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் வேறு பல இருப்பதினாலும் சட்டம் மூலமாகவோ பலாத்காரம் மூலமாகவோ முடிவு செய்வது யுக்தமேயல்ல.

முதலாளிகள் தமக்குக் கிடைக்கும் இலாபத்துக்குத்தக்கபடி தொழிலாளருக்குச் சம்பளம் கொடுப்பதாகச் சொல்லப்படுகிறது. அவர்கள் அவ்வாறு கொடுத்து வரலாம்; அல்லது கொடுக்காமல் இருக்கலாம். போட்டியினால் இலாபத்துக்கு பங்க மேற்படலாம். முதலாளி தொழிலாளி தயவுக்கு ஆளாக இருப்பதுபோல, தொழிலாளியும் முதலாளி தயவுக்கு ஆளாகவே இருக்கிறான். விலை விகிதங்களை முதலாளிகளுக்கு நிர்ணயம் செய்யவோ, கட்டுப்படுத்தவோ முடியாது.சப்ளையையும் அவர்களுக்குக் கட்டுப்படுத்த முடியாது. இப்பொழுது உலகத்தியே கிராக்கியும் (Demand) சாமக்கிரிமைகளும் (Supply) கட்டுப் பாட்டுக்கு அடங்கியே இருந்து வருகின்றன.

மக்களின் மூளை விருத்தியடையாமல் அறிவு பெருகாமல் முதலாளி—தொழிலாளி பிரச்சினை முடிவடையக் கூடிய காலம் எப்பொழுதாவது வருமா? மக்கள் தாம் வாங்கும் சாமான்களுக்கு அவைகளின் மதிப்புக்குரிய விலை கொடுக்கவும், முதலாளி நியாயமான இலாபம் எடுக்கவும் வாங்கும் மூலப்பொருள்களுக்கு நியாயமான விலை கொடுக்கவும் தொழிலாளிக்கு அவன் செய்த வேலைக்குத் தகுந்த கூலிகொடுக்கவும் போதிய அறிவு விளக்கம் மக்களுக்கும் முதலாளிகளுக்கும் எப்பொழுது உண்டாகும்? தேவைக்குத் தக்கபடி "சப்ளை" என்றவிதி தொழிலாளர் விஷயத்தில் முற்றிலும் பொருந்தாதென அறியும் அளவுக்கு முதலாளிகள் அறிவு விளக்கம் பெறுவார்களா? ஏழைகளின் வறுமையைத் தமக்கு அனுகூலப்படுத்தாதிருக்கு

மாறு முதலாளிகள் விசால மனம்படைத்தவர்களாவார்களா? "எனக்காக உழைப்பவனுக்கு அவனது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குப் போதுமான சம்பளம் கொடுப்பேன், அவனது குடும்பத்தைக் காப்பாற்றுவதற்கும் சொற்பம் மீதம் வைத்து கிழவயதில் சுகமாக வாழும்படிக்கு போதுமான கூலி கொடுப்பேன்" என்று கூறும் அளவுக்கு முதலாளிகள் எந்நாளாவது நாகரிகம் அடைவார்களா?

முதலாளி உதவியின்றித் தொழிலாளிக்கு எதுவும் செய்ய முடியாதென்பது மெய்தான். உலகத்தில் மதிப்புக்குரியனவாயிருப்பதெல்லாம் தொழிலாளி உழைப்பினால் ஏற்பட்டவைகளாகும். உலக மக்கள் செலவுக்குள்ள பணமெல்லாம் தொழிலாளியே கொடுக்கிறான். தேவைப் பொருள்கள் மீதும் போகப்பொருள்கள் மீதும் விதிக்கப்படும் வரிகள் எல்லாம் தொழிலாளி உழைப்பினாலேயே கொடுக்கப்படுகின்றன.

எனவே, தொழிலாளர் எல்லாம் நாளுக்கு நாள் அறிவு விளக்கம் பெற்று வருவதை நாம் உணர வேண்டும். எனவே முதலாளிகளும் நாளுக்கு நாள் நாகரிகமடைந்து வருகிறார்கள் என்றே தோன்றுகிறது. தொழிலாளி உழைப்பினால் கோடீசுரர் ஆனவர்கள் தர்மஸ்தாபனங்களுக்கும் கல்விஸ்தாபனங்களுக்கும் இப்பொழுது ஏராளமாகப் பொருளுதவி செய்து வருகிறார்கள். இது ஒரு மாதிரி பிராயச்சித்தமேயாகும். எனெனில் தமது சகோதர மக்களின் மூளை யுழைப்பினாலும் உடலுழைப்பினாலும் தாம் பெற்றிருக்கும் பணம் தமக்குச் சொந்தமல்ல வென்பதை அவர்கள் உணரத் தொடங்கி விட்டார்கள். முதலாளிகளில் பெரும்பாலார் சர்வகலா சங்கங்களுக்கும் நூல் நிலையங்களுக்கும் நீர் ஊற்றுகளுக்கும் பெரியார்கள் ஞாபகச் சின்னங்களுக்கும் பணம் ஒதுக்கி வைத்து வரவு செலவு திட்டம் தயார் செய்வது இப்பொழுது ஒரு வாடிக்கையாக இருந்து வருகிறது. ஆனால் அந்தப்பணத்தை உண்மையாகச் சம்பாதித்தவர்களின் நிலைமையை உயர்த்த அந்தப்பணம் செலவழிக்கப்பட்டிருந்தால் எவ்வளவோ நலமாயிருந்திருக்கு மென்று நினைக்கிறேன்.

எனவே, மக்கள் உண்மையாக நாகரிகம் அடையும் போது, தமது சேவைக்காக உண்மையாக உழைத்தவர்களுக்கு பெரிய ஸ்தாபனங்கள் ஏராளமாகப் பொருளுதவு

மென்று நம்புகிறேன். ரெயில்வே கம்பெனிகள் எல்லாம் தம்மிடம்உழைத்துக்கிழப்பருவம் அடைந்தவர்களுக்கு பென்ஷன் கொடுக்கவேண்டும். முதலாளிதில்தொழிலாளர்களைகம்பெனிகளேகாப்பாற்றவேண்டும். தமது ஊழியர்கள் அங்கம் பழுதுடையவர்களாகி இளைத்துப்போகும்வரை கம்பெனியார் அவர்களிடம் வேலைவாங்கிவிட்டு கடைசியில் அவர்களை வேலையைவிட்டு நீக்கி அநாதச்சாலைகளில் தஞ்சமடையும்படி விடக்கூடாது. கம்பெனியில் வேலை செய்து அங்கப்பழுதடைந்தவர்களை கம்பெனியாரே பூராவாகக் காப்பாற்றவேண்டும். தமக்கு சேவை புரிந்த உயிர்களுக்கு, தமது ஆஸ்திக்கு அடிப்படையாக இருந்த உழைப்பாளிகளுக்கு கம்பெனியார் பூரண ஆதரவு அளிக்கவேண்டியதுதான்.

தொழிலாளர் கடைசியில் அறிவு விளக்கம் பெற்று, ஐக்கியமாகச் செயலாற்றக் கற்றுக் கொள்ளக்கூடும். அவர்கள் அந்த நிலைமையை அடைந்தால், ஒரு நியாயமான பிரதி பலனை அல்லது நஷ்ட ஈட்டை ஏற்படுத்திக் கொள்ளலாம். இப்பொழுது அங்கங்கே அம்முயற்சிகள் கடைபெற்று வருவதனால் அவை அவ்வளவாக வெற்றி பெறவில்லை. ஆனால் எல்லாரும் ஒருமனப்பட்டு உழைத்தால் தமது கோரிக்கைகளைத் தடையின்றி நிறைவேற்றிக் கொள்ளலாம். கோரிக்கை நியாயமானதாயிருந்தால் எல்லோரும் அவர்களுக்கு ஆதரவளிப்பார்கள்.

ஆனால் அவர்கள் இவ்வாறு செயலாற்றத்தொடங்குமுன் நியாயமான கோரிக்கைகள் செய்யவும் அமிதமான கோரிக்கைகளை வற்புறுத்தாதிருக்கவும் போதுமான அறிவைச் சம்பாதித்துக்கொள்ளவேண்டும்.

தொழிலாளர்களுக்காக இதுவரை எவ்வளவோ செய்யப்பட்டிருப்பதினால் அவர்களுடையஎதிர்காலத்தில் எனக்கு மிக்க நம்பிக்கை இருக்கிறது. வேலை நேரம் குறைக்கப்பட்டுவிட்டது. ஒரு காலத்திலே தொழிலாளர் தினம் 15 அல்லது 16 மணி நேரம் வேலைசெய்து வந்தார்கள். இப்பொழுது பொதுவாக 10 மணி நேரமே வேலை செய்கிறார்கள். இதையும் குறைக்க முயற்சி நடந்து வருகிறது.

1860-ல் தொழிலாளியின் சராசரி வருஷ வருமானம் 285 டாலராக இருந்தது. இப்பொழுது 500 டாலராக

இவ்வுலகை யார் படைத்தார்?

(ஜோஸப் மேக்காபி எழுதியதின் மொழிபெயர்ப்பு.)

என் ஜீவியத்தில் பல இடங்களில் மத சம்பந்தமான என்னபிப்பிராயத்தை எழுதியும் பேசியும் வந்திருக்கிறேன். ஒருஇடத்திலாவது என்னபிப்பிராயத்தை பலவந்தமாகயர்தை யும் ஒப்புக்கொள்ளத் தூண்டியதில்லை. ஒருவரையும் புண் படுத்தியதில்லை. அப்படியிருந்தும், கடவுளைப்பற்றியஎன எண்ணம் என்ன என்பது தெரிந்திருந்தும் சிலர் அடிக்கடி மேற்கண்ட விஷயத்தைக் குறித்து என்னோடு வாதஞ் செய் கிறார்கள். அத்தகையவர்கள் இக்கட்டுரையை வாசித்தால் அவர்களுடைய சந்தேகம் தெளிவு பெறும் என நம்புகிறேன். சாதாரணமாக அவர்கள் வாதத்துக்கு எடுத்துக் கொள்ளும் கேள்வியையே நான் இக்கட்டுரைக்கு தலைப்பாகக் கொடுத் திருக்கிறேன். அக்கேள்வி கடவுள் இல்லையானால் இவ் வுலகத்தை உண்டு பண்ணினது யார்? என்பதாகும்.

வாசகர்களுக்கு எவ்வளவோ அனுபவங்கள் இருக்கக் கூடும். ஆனால் அவைகள் பரந்த நோக்கத்தோடு கூடிய வைகளாய் இருக்கும் என்பது சந்தேகமே. ஆண்களும்

இருந்து வருகிறது. 1860-ல் இருந்ததைவிட இப்பொழுது தினம் ஒன்றுக்கு ஒரு டாலர் அதிகப்படியான உணவுப்பொ ருள்களும் உடையும் பெற வசதியேற்பட்டிருக்கிறது.

நமது அநுதாபம் முழுவதும் உழைப்பாளிகளுக்கே செல்லவேண்டும். யாவற்றிற்கும் அடிப் படையாக இருப் பது உழைப்பே. நாகரிகத்துக்கு மூலகாரணமாயிருப்பதும் உழைப்பே.

பெண்களும், யுவர்களும், யுவதிகளும், போதகர்களும், வழக்கறிஞர்களும், மற்றும் எத்துறையாளரும் குறுகிய எண்ணத்தை மனதில் வைத்துக்கொண்டே என்னைக் கேள்வி கேட்கிறார்கள். நானும் ஒரு சாதாரண அறிவோடு கூடியவன் என்பதும் அவர்களுக்குத் தெரியும். ஆனால் என் பதிலைப் பார்த்தவுடன் அவ்ர்கள் ஏமாற்றம் அடைவார்கள்.

நான் சொல்லப் போவது ஒரு வேளை பதிலாகத் தோன்றாமல் இருக்கலாம். வால்தவத்திலே அது அப்படித்தான். ஏன்? அவர்கள் கேட்கும் கேள்வியே முட்டாள் தனமானதும் மடத்தனமானது மாகும். நீங்கள், யார் இந்தப் பூமியை உண்டாக்கியது? என்று கேட்கிறீர்கள்: ஆனால், என்ன காரணம் இந்தப் பூமியை உண்டாக்கச் செய்தது? என்று ஏன் கேட்கக் கூடாது என்பதாக நான் வினவுகின்றேன். இப் பூமியை உண்டு பண்ணியவன் சரீர சம்பந்தமுடையவனா அல்லது அறிவு சம்பந்தமுடையவனா என்ற வாதத்தை பின்னால் பார்த்துக் கொள்ளலாம். முதலாவது எடுத்துக் கொண்ட கேள்வியை முடிவு செய்யலாம். இதற்குப்பதில் சொல்லத் துவக்குவதற்கு முன் பான் ஒன்று கேட்கின்றேன். அதாவது "இவ்வுலகம் உண்டாக்கப் பட்டது என்பது உங்களுக்கு எப்படி தெரிய வந்தது?" என்பதுதான்.

பகுத்தறிவுக்கு பொருத்தமாயிருக்கிறது என்று சொல்லி விடாதீர்கள். ஏனெனில் பகுத்தறிவாளர்கள் என்றுசொல்லப் படுபவர்கள் தத்துவ ஞானிகளும் விஞ்ஞானிகளுமே ஆவார்கள். அவர்களில் எவரும் இவ்வுலகம் உண்டாக்கப் பட்டது என்பதாக நினைக்கவே மாட்டார்கள். அவர்களிடத்தில் ஒரு சமயம் தவறுதல்கள் இருக்கின்றனவென்றால், நீங்கள்ருபகாரப்படுத்துவதில்என்தவறுதல்இருக்கக்கூடாது? என்பதை யோசித்துப் பாருங்கள். உண்மையிலே தவறுதல்கள் உங்களிடையே இருக்கின்றன.

இனி அதைப்பற்றி ஆராய்வோம். நீங்கள் கேள்விகள் கேட்க ஆரம்பிக்கும்போதே இப் பூமி உண்டாக்கப்பட்டது என்ற எண்ணத்தை அடிப்படையாகக்கொண்டே தொடங்குகிறீர்கள். "உலகம்", "உண்டாக்கப்பட்டது" என்ற இரண்டு பதத்தின் கருத்தை நாம் எந்த அளவுக்கு எடுத்துக்கொள்ளுகிறோம் என்பதை விளக்க வேண்டியதில்லை. உலகம் என்பதை விளக்க வேண்டியதில்லை. உலகம் என்றால் இப்பிரபஞ்சம் அல்லது சில வான சாஸ்திரிகள் கூறுவது போல்

னையபிரபஞ்சங்கள் என்றும், "உண்டாக்கப்பட்டது" என் பதில்பணடைப்பு அல்லதுசிருஷ்டி என்பதாகவும் அர்த்தம்கொள் ளலாம். நீங்கள் நினைப்பது போல் ஒரு காலத்தில் பிர பஞ்சங்கள் ஒன்றுமே இல்லாதிருந்ததாகவும், கடவுளின் வார்த்தையால் இப் பிரபஞ்சம் எற்பட்டதாகவும் வைத்துக் கொள்ளுங்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் தான் நீங்கள் தவறியிருக்கிறீர்கள். இவ்வுலகத்திற்கு ஆதி அதாவது ஆரம்ப காலத்தை நிரூபிக்க எந்தவிதமான அத்தாட்சி யும் உங்களுக்கு நியாய பூர்வமாகக் கிடையாது.

ஆகவே பிரபஞ்ச உற்பத்தியை நிரூபிக்கக்கூடிய சரியான ஒரு ஆதாரமுமில்லை யென்ற முடிவுக்கு வருவீர்கள். ஏன்? ஒவ்வொருவரும் ஒரே விதமான கேள்வியை எடுத்துக் கொள் ளுகிறார்கள் என்றால் அவர்கள் சிறு வயது முதல் புராணங் களிலும், மத கிரந்தங்களிலும் பிரபஞ்ச உற்பத்தியைப்பற்றி கூறப்பட்டிருப்பதை கற்பிக்கப்பட்டும் அதையே கம்பும்படி யாக பழக்கப்பட்டும் வந்திருப்பதால் தான். மதகிரந்தங்களில் சொல்லப்பட்ட படைப்பின் லக்ஷணத்தைப்பற்றியும் அதன் கருத்தும் மதிப்பும் எத்தகையது என்பதைப்பற்றியும் பின் னால் எடுத்துக்கொள்ளுவோம். கடவுள் ஒன்று இருக்கிறதா என்று முடிவு செய்வதற்குள் கடவுள் என்ற சொல்லை நீங் கள் உபயோகப்படுத்துவது எப்படிப் பொருந்தும்? புரா ணங்களைத் தவிர வேறெந்த விதமான ஆதாரமும் பூமியின் தோற்றத்திற்கு இல்லாததால், இப் பிரபஞ் சத்தை யார் படைத்தார் என்று சொல்லுவதில் எந்தவிதமான அர்த்தமுமில்லை. இப்பிரபஞ்சம் என்றும் அழியாத தன்மை உடையதென்று யாராவது சொல்ல முன் வருவார்களா? ஒருவேளை அழியாதிருந்தாலும் இருக்க லாம் அல்லது அழிந்தாலும் அழியலாம் என்றுதான் நானும் நீங்களும் சொல்லமுடியும். ஆனால் இப்பிரபஞ்சம் தோற்றுவிக்கப்பட்டது என்று வாதாடுகிறவர்கள் தங்களு டைய வாதத்தை உறுதிப் படுத்துவதற்காக இப்பிரபஞ்ச த்திற்கு முடிவு கற்பிக்க முயன்று வருகிறார்கள்.

இவ்வுலகம், உண்மையாகவே படைக்கப்பட்டதுதான் என்பதை நிரூபிக்காதவரை என்னை "இவ்வுலகத்தை யார் படைத்தார்?" என்று கேட்பது யோக்கியமான கேள்வியா காது. எப்படியோ நாம் இப்பொழுது இப்பூமியைப் பார்க் கிறோம். ஒரு சமயம் இனியும் இப்படியே இருக்கவுங்கூடும். அதேமாதிரி எப்போதும் இருந்திருக்கவுங்கூடும்.

சற்று உற்று நோக்கினால் அறிவாளிகளும் விஞ்ஞானிகளும் தத்துவ ஞானிகளும், இப்பிரபஞ்சமானது அழியாததென்றே கருதிவருகிறார்கள். தத்துவ ஞானிகள் ஏன் இவ்வாறு கருதிவருகிறார்கள் என்றால் ஒன்றுமில்லாமல் அதாவது சூன்யத்திலிருந்து இப்பூமியை கடவுள்படைத்தார்என்று சொல்லுவதை அவர்களால் நம்பமுடியவில்லை. மேலும்2500 வருடங்கட்குமுன் ஆள் அடையாளம்தெரியாத ஒருவரால் ஹீப்ரு பாஷையில் பூமிஉற்பத்தியைப்பற்றிஎழுதப்பட்டிருக்கிறதைத்தவிரவேறு ஆதாரம்ஒன்றுமில்லை.

விஞ்ஞானிகள் இப்பிரபஞ்சம் அழியாத தன்மையுடையது என்று நினைப்பதற்கு மேற்சொன்ன காரணம்பகுதியும், வானசாஸ்திரிகள் கூறி வருகிற விஷயங்கள் பகுதியுமாக இருந்துவருகிறது. சூரிய அஸ்தமனமாகும்பொழுது தான் இக்கட்டுரையை அமெரிக்காவிலுள்ள மெக்ஸிகோ வளைகுடாவில் ஒரு கப்பலின் மேல்தட்டில் இருந்துகொண்டு நான் எழுதுகின்றேன் நக்ஷத்திரங்கள் பல ஆகாயத்தில் பிரகாசிக்கின்றன. அவைகளில் சிவப்பு, மஞ்சள், வெண்மை, நீலம் முதலிய பலவர்ணங்கள் கொண்ட நக்ஷத்திரங்கள் கூரிய பார்வையுடைய கண்களுக்குத் தோன்றும். அவைகளில் பற்பல சீதோஷ்ண நிலைகளையுடையவையாயிருக்கின்றன. சில 3000 டிகிரியுடைய மங்கிய சிவப்பாயும், சில அதிக உஷ்ணமான 30,000 டிகிரி உள்ள நீலநிறத்தோடும் தோன்றுகின்றன. இவ்வுண்மையை, ஒளியையும் நிறத்தையும் காட்டும் கருவி(சோதிவர்ண விமர்சினி)யின் உதவியால் நன்கு அறியக்கூடும்.

சீதோஷ்ணத்தில் வேறுபாடு காணப்படுவது அதன் வயதைக் காட்டுகிறதாகும். ஆகவே நக்ஷத்திரத்தின் வயது அதன் சீதோஷ்ணத்தைப் பொருத்தேயிருக்கிறது. எப்படி உலோகத்தை உலையில்இட்டு காய்ச்சினால் முதல் முதலில் இளஞ் சிவப்பாயும், வரவர மஞ்சளாயும், வெண்மையோடுகூடிய நில நிறமாயும் உயர்ந்து பின்னால் வெளுத்தமஞ்சள் நிறமாய் பழுயபடிசிவந்தநிறத்தையடைவதுபோலவேநாம் பார்க்கும் நக்ஷத்திரங்களின் நிலைமையும் மாறிக்கொண்டே வருகிறது. எந்தெந்த நக்ஷத்திரங்கள் வளருஞ் சிவந்தமேனியோடு கூடியிருக்கிறதோ அவைகளின்வயது அதிகரிக்கஆரம்பத்திருக்கிறதென்றும் தெரிந்து கொள்ளலாம். நிறத்தையும் உஷ்ணத்தையும் அளந்து நக்ஷத்திரத்தின் வயதை கணிக்கக் கூடிய கருவி யொன்றுசமீப காலத்தில் அமரிக்காவில் கண்டு

பிடித்திருக்கிறார்கள். மேலும் இக்கருவி நக்ஷத்திரத்தின் உருவத்தின் அளவையும் காட்டுகிறது. ஆதியிலே நக்ஷத்திரங்கள் பிரமாண்டமான உருவத்தைப் பெற்றிருந்ததாக நாம் அறியலாம். தெற்கேயிருக்கிற நக்ஷத்திரங்களுள் அண்டாரிஸ் (Antares) என்ற நக்ஷத்திரத்தை எடுத்துக்கொள்ளுங்கள். அதன் குறுக்களவு 400 லக்ஷ மைல் நீளமுள்ளது. நமது சூரியனது குறுக்களவு லக்ஷமைலுக்கு குறைவாகவே இருக்கிறது. அண்டாரிஸ் இப்பொழுது சுருங்க ஆரம்பித்திருக்கிறது. சூரியனும் வெகு காலத்தில் இருந்தே சுருங்கிக்கொண்டே வருகிறது அது மறையும் காலமும் நெருங்கிக்கொண்டே வருகிறது.

சுருங்கச் சொல்ல வேண்டுமானால், பெரிய நகரங்களில் உள்ள வீதியில் காணப்படுகின்ற பல உருவமுள்ள மக்களைப் போலவே நக்ஷத்திரங்களின் வயதும் தோற்றமும் காணப்படுகின்றன. இள நக்ஷத்திரங்கள் பெரிய பூதத்தைப்போலவும், முதிர்ந்தவைகள் குள்ளர்களைப் போலவும் தென்படுகின்றன. நக்ஷத்திரங்களின் வயதோ கோடிக்கணக்கானதாகும். ஆயிரக்கணக்கான நக்ஷத்திரங்கள் நமது சூரியன் தோன்றுவதற்கு முன்னமே தோன்றியிருக்கின்றன. லக்ஷக்கணக்கான இந்த நக்ஷத்திரங்கள் அழிந்தாலும் புதிதாக வேறு நக்ஷத்திரங்கள் தோன்றுவதற்கு வேண்டிய மூல வஸ்துக்கள் பிரபஞ்சத்தைச் சுற்றி இருந்து வருவதைநாம் பார்க்கலாம். இப்பிரபஞ்சம் என்பது ஓருசமூகமென்றே சொல்லலாம். எப்படியெனில் மனித வர்க்கமானது தலைமுறை தலைமுறையாகத் தோன்றலும் மறைதலுமாக இருந்து வருவதையே ஒத்திருக்கிறது. ஆகவே ஆரம்பகாலம் எப்பொழுது என்பதைப்பற்றியோ முடிவு காலம் எப்பொழுது என்பது பற்றியோயோசிக்க அவசியமே—தேவையே இல்லையல்லவா?

இறுதியாக, இப்பிரபஞ்சத்திற்கு ஆதியும் அந்தமும் இல்லையென்று நாங்கள் பிடிவாதமாகவோ, மூர்க்கத்தனமாகவோ ஒரு காலும் கூறுவதில்லை. என்னைப் பொறுத்தமட்டில் இவ்வுலகம் நித்தியமானது என்று உறுதியாகச் சொல்ல மாட்டேன். ஏனெனில், 50 வருடமாக நான் எவ்வளவோ படித்தும் இன்னும் என்னால் பூர்ணமாக இப்பிரபஞ்சத்தைபற்றி அறிய முடியவில்லை. ஆனால் ஒன்று மட்டும் என்னால் திட்டமாகச் சொல்லக்கூடும். அஃது

யாதெனில், கோடிக்கணக்கான நக்ஷத்திரங்கள் ஒவ்வொன்றும் வயதில் வித்தியாசப்பட்டிருப்பதைக் காண்கின்றோம். கடவுளே சிருஷ்டித்தது என்று சொல்வதானால் நக்ஷத்திரங்கள் யாவும் ஒரே வயதாயும், ஒளியுடனும் இருக்க வேண்டாமா?

மதத்தையும் விஞ்ஞானத்தையும் இணைக்கப் பாடுபடுகிற ஒரு சிலர், இப்பிரபஞ்சத்தையும் அதில் காணும் சகல ஜடப் பொருள்களையும் கடவுளே படைத்து அவைகள் இயங்குவதற்கான சக்தியையும் வல்லமையையும்கொடுத்திருக்கிறார் என்று அடிக்கடி கூறிவருவதை நாம் கண்டு வருகிறோம். இந்த கியாயம் ஒரு நாளும் பயன் பெறப்போவதில்லை. ஏனெனில் பிரபஞ்சத்தில் காணக்கிடக்கிற ஜடப் பொருட்களுக்கு ஆரம்ப காலம் ஒன்று உண்டு என்பதை எந்த விதமான ஆதாரத்தைக் கொண்டும் நிரூபிக்க முடியவில்லையே? அப்படியிருக்க, காம் ஏன், படைக்கப்பட்டது என்பதைக் குறித்து தர்க்கம் பண்ண வேண்டும்? உங்கள் வாதம் வெறும் நம்பிக்கையை பொருத்ததாகவேயிருக்கிறது. பரீக்ஷைக்கு அல்லது சோதனைக்கு நிலைக்காதது என்று தான் சொல்லித் தீரவேண்டும்.

சிலர் இப் பிரபஞ்சம் அழியும் தன்மையுடைய தென்று சில அர்த்தமற்ற பகுத்தறிவுக்கு பொருந்தாத வாதங்களை எடுத்துக் கொண்டு நிரூபிக்கப் பாடுபடுகின்றனர். அவைகளில் ஒருவாதத்தை கீழே தருகின்றேன். அதாவது பூமியானது நித்தியம் என்று சொல்லப்படுமேயானால் கடந்த நாட்களும், வருஷங்களும் என்றும் அழியாத தாயிருந்திருக்க வேண்டும். அவ்வாறு இல்லாமல் ஒவ்வொரு நாளும் மாதமும், வருஷமும் புதியது புதிதாகக் கணக்கிடப்பட்டும் சேர்க்கப்பட்டும்வந்திருக்கின்றன. ஆதலால்காலம்அழிந்துபோவதால் பூமியும் அநித்தியம் என்றும், தூரத்தைப் பற்றியும் அதேமாதிரியாக வாதாடுகிறார்கள். அதாவது "நாம் இப் பூமியில் எத்திசையை நோக்கிச் சென்றாலும் முடிவில்லாமல் இருக்கவேண்டும், அந்தப்படி பார்த்தால் இல்லை, ஆதலால் இப் பிரபஞ்சம் அழியக்கூடியது" என்று கூறி விடுகிறார்கள்.

வாசகர்களே! இவர்கள் கூறும் கூற்றுக்கு யான் — ஒன்றும் வியாக்கியானம் சொல்லத் தேவை இல்லை யென்றே கம்புகிறேன். ஏனெனில் காலத்தின் அளவும் தூரத்தின்

அளவும் இயற்கையிலேயே உண்டானவைகள் அல்ல என்று சகலரும் ஒப்புக்கொள்ளுவார்கள். நம்மவர்கள் நமது செளகரியத்திற்காக ஒரு அளவு ஏற்படுத்தி அதற்கு எண் ணிக்கைகள் கொடுத்து வைத்தார்கள். முடிவுள்ள வஸ் துக்கள் என்றோ அழிவுள்ள வஸ்துக்கள் என்றோ ஒன்று உண்டு என்று சொல்வதற்கில்லை. ஆகவே மேலே கூறப் பட்ட வாதங்கள் யாவும் அறிவற்றவர்களுடைய தென்றே சொல்லவேண்டும்.

அடுத்தாற்போல் கத்தோலிக்கர்கள் ஒரு விநோதமான வாதத்தைக் கொடுப்புகிறார்கள். அதாவது இப்பிரபஞ்சத்தில் பார்க்கும் யாவற்றிற்கும் தோன்றல், அழிதல் என்ற இரு செய்கைகள் இருந்து வருவதால், நாம் பார்க்கும் இவ்வுலகிற்கும் கர்த்தா ஒன்று இருக்கவேண்டும் என்றும், நாம் பார்க்கும் தோற்றங்களின் அசைவுகளுக்கு சூத்திர தாரி ஒருவர் இருக்கவேண்டும் என்றும் ஆகவே அச்சூத்திர தாரிதான் கர்த்தா அல்லது கடவுள் என்றும் அவர்கள் பெரு மையடித்து கொள்ளுகிறார்கள். இந்த வாதம் மத்திய காலத்தில் கத்தோலிக்கர்கள் கற்ற கல்வியின் பொக்கிஷம் என்பதாக நினைத்து வருகிறார்கள். புராட்டஸ்டண்டு கிறி ஸ்தவர்கள் நல்ல வேளையாக இந்த வாதத்தை மறந்து விட்டார்கள். இந்த வாதத்தில்லாத விதமான நம்பிக்கையும் வைக்கக் கூடாது என்பதாகக் கடந்த 100 வருடங்கட்கு மேலாகவே அறிவுள்ள மக்களால் வருவது இவர்களுக்கு இன்னும் தெரியவில்லை போலும்.

சரி, இப்பொழுது இவர்கள் கூறுகிற முதலாவது வாத மாகிய கர்த்தா அல்லது மூலகாரணமும் பரமும் என்பதை எடுத்துக் கொள்ளலாம். பொதுவாக இக்காலத்தில் விஞ் ஞானிகளும் தத்துவ ஞானிகளும் எல்லாவற்றிற்கும் இவ்விரு செய்கைகளும் உண்டு என்பதாக ஒப்புக்கொள்ளுவதில்லை. ஆனால் நாம் ஒன்று மட்டும் சொல்லலாம். அதாவது இந்த வாதம் நாம் பார்க்கும் இயற்கைத் தோற்றங்களின் நடக்கை யிலிருந்து கண்ட உண்மை என்று தான் சொல்ல வேண்டும். எப்படியெனில் நீராவியையுண்டு பண்ணக்கூடியது உஷ்ணம். அதுபோலவே மேகங்களில் இடியை உண்டு பண்ணக்கூடியது மின்சாரம். இவை போலவே ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு காரணம் இருக்கிறது. ஆகவே எல்லாக் காரணத்திற்கும் ஒரு மூலகாரணம் இருக்க வேண்டும் என்பதற்கு என்ன

நியாயம் இருக்கிறதுஎன்றுபகுத்தறிவுள்ளஎவன்தான் சொல்ல முடியும்? அறிஞர் டயிட்டன் ஹில்லர் நிரூபித்து காட்டியபடி இப்பிரபஞ்சம் இயங்கி வருவதற்கு மூலகாரணமாக இருந்து வருவது நுண்ணிய அணு (Etner) என்பது தான் உண்மை யென்று நம்பலாம். சோதனை மூலமாக ஈதருக்கு ஆரம்பம் அல்லது மூலகாரணம் ஒன்று இருக்கிறது என்று நிரூபிக் காதவரை அதற்கு மேல் ஒரு சக்தியோ கர்த்தாவோ இருப் பதாக எப்படி நம்ப முடியும்?

ஆனால் இச்சமயத்தில், அநுபமான சிந்தை, உணர்ச்சி, முதலியனவற்றிற்கு நுண்ணிய அணுக்கள் எப்படிக்காரண மாயிருக்கக் கூடும்எனக் கேட்கப்படுகிறது. நாம் இக்கட்டுரை யில் வேதாந்தத்தைப்பற்றியும் லௌகிகத்தைப்பற்றியும் தர்க் கிக்கவில்லை யென்பதை மனதில் வைத்துக்கொள்ள வேண் டும். இவைகளைக்குறித்து மறு சமயம் பேசிக்கொள்ளலாம். இது தவிர மனம் ஆத்மீகத் தன்மையானது என்பதை இதுவரை யாரும் சரியான ஆதாரத்தோடு நிரூபிக்கவில்லை. இதற்காக மூலசக்தியையோ மூல கர்த்தாவையோ கற் பிக்க வேண்டியதில்லை.

சாரமற்ற இவ்வாதத்திற்கு அதிகமான காலத்தை நான் வீணாக்கப் பிரியப்பட வில்லை ஏனெனில் பகுத்தறிவுள்ள எவனும் இவ்வாதத்தில் நம்பிக்கை வைக்கமாட்டான். நான் பார்த்தவரையில் கடவுளை நம்புகிறவர்களுக்குள் ஒரு மதக்காரன் வேறு மதக்காரனை நம்புவதில் லை. ஒருவன் மற்றொருவனைப் போலி பக்தன் என்றும் நினைத்தும் வருகிறான். ஆனால் அவ் விருவர்களும் கடவுள் இருப்பது உண்மை அல்லவென்று மறுக்கிறவனை நாஸ்திகன் என்றும் மூடன் என்றும் சொல்லுவதற்கு முனைந்து வருவ தைப் பார்க்கும்போது ஆச்சரியமாயிருக்கிறது.

இன்னும் ஓர்விதமான தீவிரபக்தர்கள் இருக்கிறார்கள். இவர்கள் கடவுள் உண்டு என்பதை விஞ்ஞானத்தோடு நிரூ பித்துவிடலாம் என்று நினைக்கிறார்கள். விஞ்ஞானத்தில் இயற்கை யென்ற கொள்கை அல்லது எண்ணம் இருந்து வருகிறது. அதை எல்லாச் சந்தர்ப்பங்களிலும் விஞ்ஞானி கள் கையாண்டு வருகிறார்கள். அந்த இயற்கை விதிக்கு ஒரு கர்த்தா இருக்கவேண்டும் அல்லவா? அந்தக் கர்த்தர் தான் இந்த உலகிலுள்ள எல்லாவற்றையும் ஆட்சி செய்து

வருகிறார் என்றும் அதுதான் கடவுள் என்றும் இக் கூட்டத்தார் கூறி வருகிறார்கள்.

இதற்கு முன் கூறப்பட்ட வாதங்களில் இது மிகவும் பிற்போக்கானதும் அர்த்தமற்றதுமாகும். மனனில் கடவுளைக் குறிக்கும் கிரந்தங்கள் விஞ்ஞானத்துக்கும் தத்துவ சாஸ்திரத்திற்கும்புறம்பானவைகளாதலால்அதிக காலத்திற்கு நிற்க முடியாது என்றஉண்மையை அறிந்தேதானிவர்கள் இனிஎப்படியாவது விஞ்ஞானத்தோடு இணைத்து விட வேண்டுமென்று நினைக்கிறார்கள். கத்தோலிக்கர்கள் மூலகாரணம், மூல சக்தி, அவசியம் என்ற காரணங்களைக் கொண்டும் மத்திய கால அறிவோடும் உளறலடிக் கொண்டிருக்கிறார்கள். புராடஸ்டண்டுகள் இயற்கையென்ற காரணத்தை வைத்துக் கொண்டு 19-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இருந்து வாதித்துக்கொண்டு வருகிறார்கள்.

விஞ்ஞானத்தில் இயற்கைவிதி யென்று சொல்லப்பட்ட தொடர் மொழி சாதாரணமாக மனிதன் நினைக்கிறபடியும் அல்லது கற்பிக்கிற சட்டத்தின் அளவின் படியும் கருத்தைக் கொடுக்கக் கூடியதல்ல. உதாரணம் வேண்டுமானால் பூமியின் ஆகர்ஷண சக்தியின் விதியை எடுத்துக்கொள்ளுவோம். அந்தச் சக்திக்கு ஒரு அளவு முன்னதாகவே குறிப்பிடப்பட்டு அதன்படி இயங்கி வருகிறதென்று சொல்லி விடமுடியாது. ஏனெனில் அந்தச் சக்தி சிலகாலமாக ஒரே விதமான காரியங்களைச் செய்து கொண்டு வருவதால் அதற்கு ஒரு விதிபைக் கற்பித்தோம். ஆகவே விஞ்ஞானத்தில் கூறப்பட்டு வருகிற விதியென்று சொல்லப்படுபவை யெல்லாம் ஓவ்வொன்றின் செய்கையை விளக்கிக் காட்டக் கூடியவையேயாகும்.

நாவன்மை படைத்த சில பேச்சாளர்களும் எழுத்தாளர்களும் விஞ்ஞானத்தோடு பிரபஞ்ச உற்பத்தியை நிரூபிக்கப் பாடுபடுவது எவ்வளவு மதியீனம்! நமது விஞ்ஞானசாஸ்திரிகள் தமது ஆயுட்கால முழுவதும் இயற்கை விதியைப்

பற்றி அறிவதற்கு எவ்வளவோ அரும்பாடுபட்டு முயற்சி செய்து வந்திருக்கிறார்கள். அவர்கள் ஒரு சமயத்திலாவது ஒரு வஸ்து உலகிலுள்ள எல்லாவற்றையும் இயக்கி வருகிறது என்பதாக நம்பவே இல்லை. அப்படி இருக்க, மேலே சொன்ன கூட்டத்தாரின் வாதம் எவ்வளவு விநோதமானது என்பதை மறுபடியும் சிந்தித்துப்பார்க்கும்படி கேட்டுக்கொள்கிறேன். தவிர, உண்மையாகவே மதகிரந்த கர்த்தாக்களுக்கும் இக்குயுக்தி வாதிகளுக்கும் அபிப்பிராய பேதமோ சச்சரவோ இருந்து வருகிறது என்பதாக நாம் நினைக்கவேண்டியிருக்கிறது

இது மிகவும் அற்பமான விஷயம். எனெனில் ஒருவன் தான் பேசும் விஷயத்தைப்பற்றி விஞ்ஞானம் என்ன சொல்லுகிறது என்பதைப் பூரணமாக அறிய ஆசைப்படுவதேயில்லை. உதாரணமாக மேலே எறியப்பட்ட ஒருகல் யாதொரு தடையும் இல்லாதிருந்தால் பூமியில் வந்து விழுகிறது. இதற்கு சாதாரணமாக ஒரு ஞானம் விதியில்லாதிருந்தால் எப்படி அது கீழே விழும்? ஆகவே இயற்கை தன் காரியங்களை ஒரே நிதானமாக ஆற்றிக்கொண்டு வருகிறது. ஆனால் அவ்வியற்கையின் சக்தி குன்றியிருந்தால் அதனால் எற்படும் பலாபலன் ஒழுங்கற்றவையாகவே இருக்கவேண்டும் அல்லவா?

எந்த வழிகளினாலும் கடவுள் இருப்பதை நிரூபிக்க முடியவில்லை என்பதை நாம் கண்டு கொண்டோம். உலகம் யாரால் படைக்கப்பட்டது? என்பதைப் பற்றியோ, அல்லது அதன் மூலகாரணம் என்ன? என்பதைப் பற்றியோ, மூல சக்தி என்பதைப் பற்றியோ பேசுவதில் எவ்விதபயனும் சித்தியாகாது என்பதை பெரிய வேதாந்திகள்---ஆனமீகவாதிகள் உணர்ந்து இவைகளை நம்புவதையே ஒழித்து விட்டார்கள். ஆனால் அவர்கள் இப்பொழுது இயற்கையில் காணப்படுகிற ஒழுங்கு, அழகு, தோற்றம் முதலியவைகளை எடுத்துக்கொண்டு கடவுள் இருப்பதை நிரூபிக்க பாடுபட்டு வருகிறார்கள். இவர்களின் இந்தக் கூற்றிலும் எவ்வளவு உண்மையிருக்கிறது என்பதைப் பின்னால் எடுத்துக் கொள்ளுவோம்.

மதம் என் ஒழியவேண்டும்?

(ஈ. வெ. ரா.)

மதம் என்பதைப்பற்றி இதற்குமுன் "குடி அரசு" "புரட்சி" முதலிய பத்திரிகைகளில் அநேக விபாசங்கள் பல தலைப்புகளின் கீழ் எழுதப்பட்டிருப்பது யாவருக்கும் தெரியும்.

மதமானது இன்று உலகில் மனித சமூகத்தின் வாழ்வைத் துக்க மயமாக்கி, ஜீவராசிகளில் மனிதனுக்கென்று உள்ள பகுத்தறிவை அடிமைப்படுத்தி, ஒற்றுமையைக் குலைத்து மனிதனுக்கு மனிதன் வெவ்வேறு இனம் என்று எண்ணும்படி செய்து வருகின்றது என்பதற்கு உதாரணம் தேவையில்லை என்றே கருதுகின்றோம்.

"தேசிய சிங்கங்"களான அனி சகோதரர்கள் ஒரு காலத்தில் "நாங்கள் முஸல்மான்மதியர்கள், பிறகுதான் இந்தியர்கள்" அதாவது முதலாவது மதம், பிறகுதான் தேசம் என்றும், "உலகம் போற்றும் உத்தமர் மகாத்மா" என்றுமகாத்மா "நானே இந்துமதத்தின் உருவம்! நான் மூச்சுவிடுவதும், வாங்குவதும் இந்து மதத்திற்காகவே!! நான் உண்பதும், உயிர் வாழ்வதும் இந்து மதத்திற்காகவே!!! மதத்தைக்காக்கவே நான் சுயராஜ்யம் கேட்கிறேன்!!!" அதாவது இந்து மதம்தான் எனக்கு முதலும் கடைசியும் என்றும், "பழுத்த காங்கிரஸ்வாதி, மாசற்ற தேசாபிமானி, ஒப்பற்ற தியாகி" என்று சொல்லப்பட்ட பண்டித மதன் மோகன மாளவியா "எனது மதத்தையும், எனது ஜாதியையும் காப்பதே எனது முதல் வேலை" என்றும், அதாவது வருணாச்சிரமத்தைக் காக்கத்தான் நான் தேசியவாதி என்றும் சொல்லும்படி செய்துவிட்டது என்றால் மதத்தின் ஆதிக்கத்திற்கு வேறு என்ன உதாரணம் வேண்டும் என்று கேட்கின்றோம்.

பெருத்த தேசாபிமானிகள், தேசத்துக்காகச் சகலத்தையும் தியாகம் செய்தவர்கள் என்று சொல்லும்படியான இவர்களே அவரவர்களின் மதத் தத்துவத்தை உள் எண்ணமாக வைத்து அவற்றின் கொள்கைகளைக் காப்பதற்காகவே அவர்

களது தேசாபிமானமும், உயிர் வாழ்வும் இருந்து வருகின்றன என்றால் மற்ற சாதாரணமான அதாவது மதத்தைத்தவிர மற்றொன்றும் அறியாத மதவெறி கொண்ட பாமர மக்களின் போக்கியதைகளைப்பற்றி நாம் விளக்கவேண்டுமா என்று கேட்கின்றோம்.

வட்டமேஜை மகாநாடு உடைந்து போனதும், அரசியல் சீர்திருத்தத்தில் இந்திய மக்கள் ஒன்றுபடாமல் போனதும், இந்து முஸ்லீம்கள் ஒருவரை ஒருவர் நம்பாமல் அரசியலில் தனித்தொகுதி வேண்டுவதற்கும், காங்கிரசும் முஸ்லீம் லீக்கும் ஒன்றுக்கொன்று வேறுபட்டிருப்பதற்கும், தீண்டப்படாத மக்கள் தனித்தொகுதி கேட்பதற்கும் கூட்டுத்தொகுதியில் தனிப்பிரதிநிதித்துவம் ஒதுக்கப்படவேண்டும் என்று கேட்பதற்கும், பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார்என்கின்ற ஜென்மப்பகைக்கும் மக்களை மக்கள் தீண்டப்படாதவராய் கீழ்மேல் ஜாதியாராய் கருதப்பட்டு வருவதற்கும் மதமே காரணமாயிருந்து வருகின்றது என்பதையும் எவராவது மறுக்க முடியுமா என்று கேட்கின்றோம்.

மற்றும் மனித சமூக வாழ்வுக்கு எற்ற சீர்திருத்தங்கள், முன்னேற்றங்கள் என்பவைகளில் பெரும்பான்மையான மக்களால் அவசியம் என்றும், அறிவுக்கு எற்றது என்றும் கருதப்படும் அநேக விஷயங்களைப்பற்றி சட்டங்கள் செய்யமேவா, சட்டங்கள் செய்தாலும் அமுலுக்குக் கொண்டுவரமேவா தடையாய் இருந்து வருவதற்கும் இன்று மதங்களே காரணமாகச் சொல்லப்படுகின்றதா இல்லையா என்றும் கேட்கின்றோம். ஆகவே மனித வாழ்க்கைக்கு மதங்கள் என்பவைகளால் இதைவிட வேறு என்ன கொடுமைகள் செய்யப்படவேண்டுமென்பது நமக்கு விளங்கவில்லை.

இப்படிப்பட்ட இந்த மதம் ஒன்று இரண்டு என்று இல்லாமல் நூற்றுக்கணக்காய் இருந்து கொண்டு பலவித கடவுள்களை சிருஷ்டித்து பல வேதங்களை உண்டாக்கி பலவித மேல் உலகங்களையும் மோக்ஷ நரகங்களையும் கற்பித்து அவரவர்கள் கடவுளுக்குத் தனிப்பட்ட குணங்களும், அவரவர்கள் வேதங்களுக்கு தனிப்பட்ட தெய்வீகமும் அவரவர்கள் மேல் உலகங்களுக்கு தனிப்பட்ட பூகோளங்களும், அவரவர்கள் மோக்ஷ நரகங்களுக்குத்தனிப்பட்ட வருணனைகளும் கற்பித்து மக்களை மயக்கி வருவதோடு வாழ்க்கை, ஒழுக்கம், நடத்தை

என்பவைகளும் ஒவ்வொரு மதத்துக்கு ஒவ்வொருவித மாய் கற்பிக்கப்பட்டு நடந்து வருவதும் அறிஞர்கள் அறியாத தா?

இப்படிப்பட்ட மதத்தை மக்களுக்குள் பிரசாரம் செய்வதற்காக ஒரு சில நபர்கள் பாதிரி என்றும், முல்லாஎன்றும், தம்பிரான் என்றும் சங்கராச்சாரி என்றும், ஜீயர் என்றும், சாமியார் என்றும், புரோகிதர் என்றும், குருமார் என்றும் பெயர்கள் வைத்துக்கொண்டு, உலக செல்வத்தில் தனிப்பெரும் பாகத்தை வீணாக்கி மக்களுக்குப்போதை ஊட்டி வருவதான து எவ்வளவு அவிவேகமான காரியம் என்பது சுய அறிவோடு பரிசுத்த தன்மையில் இருந்து யோசிப்பவர்களுக்கு விளங்காமல் போகாது.

இவைகளைப்பற்றி இன்னமும் விவரிக்குமுன் மதம் என் றால் என்ன என்று நாம் கருதிக்கொண்டு அதைப்பற்றி இவ் வளவு எழுதுகின்றோம் என்பதை வாசகர்களுக்கு விளக்க ஆசைப்படுகிறோம்.

1. மதம் என்பது இவ்வுலக மானிட வாழ்வுக்கு ஏற்ற சட்ட திட்டங்கள் என்று சொல்லப்படுமானாலும்,

2. அல்லது மதம் என்பது இவ்வுலகில் மக்கள் கூடி வாழ்வதற்கு ஏற்ற "ஒழுங்கு முறைகளை" கொண்டது என்று சொல்லப்படுமானாலும்,

3. அல்லது (ஒருவர் கூறியபடி) மதம் என்பது மனிதனுக்கும் மற்ற ஜீவராசிகளுக்கும் உள்ள வித்தியாசங்களை காட்டுவது என்று சொல்லப்படுமானாலும் அவைகளைப்பற்றியெல் லாம் நாம் அதிகக்கவலை கொண்டு மதங்களைப்பற்றி இவ் வ்ளவு தூரம் கவனம் செலுத்த ஆசைப்படுவதில்லை.

அப்படிக்கில்லாம் அல்லாமல்,

1. மதமானது மனிதனுடைய ஜட சம்பந்தத்தை விட்டு விட்டு ஜடம் நீங்கின "ஆத்மா" வைப்பொறுத்ததென்றும்,

2. மதமானது இவ்வுலக வாழ்வையும் இன்ப துன்பத் தையும் துச்சமாக மதித்துவிட்டு மேலுலக வாழ்வையே முக்கிய மாகப்பொறுத்ததென்றும்,

3. மதமானது "கடவுளு"க்கும் மனிதனுக்குமுள்ள சம்பந்தத்தை விளக்குவதைப் பொறுத்தமின்றும்,

4. மதமானது பஞ்சேந்திரியங்களுக்கு விளங்கக்கூடிய வஸ்து என்ற தத்துவத்தை விட்டு பஞ்சேந்திரியங்களாலும் அறியமுடியாத "ஆத்மார்த்தம்" ஆகி தத்துவத்தை—அசரீரியை அடிப்படையாகக்கொண்டது என்றும்,

5. மதமானது இந்த ஜன்மத்தில் அடையத்தக்க உலக போகபோக்கியம், இன்ப துன்பம் ஆகியவைகளை அலட்சியம் செய்து "கடவுளின்" பாதாரவிந்தத்தை அடையவும், "மோக்ஷ" சாம்ராஜ்யத்தைப்பெறவும் அடுத்த ஜன்மத்தில் மேன்மை பெறுவதற்கு ஏற்ற மார்க்கம் என்றும் சொல்லப்படும் எல்லா மதங்களையும், சகல மத தத்துவங்களையும் பற்றியே நாம் பேசுகின்றோம்.

ஆயினும் முதலில் கூறப்பட்ட அதாவது, மதம் மானிட வாழ்க்கைக்கு ஏற்ற சட்ட திட்டங்களுக்கோ மக்களின் கூட்டுறவு வாழ்க்கைக்கு ஏற்ற ஒழுங்கு முறைக்கோ ஏற்பட்டது என்கின்ற விஷயங்களிலும் கூட நமது ஆலோசனையை சொல்லாமல் இருக்க முடியவில்லை. அதாவது இன்று நாம் மதங்கள் என்று சொல்லிக்கொள்ளப் படுபவைகளில் மேற்கண்ட சட்ட திட்ட ஒழுங்குமுறை குணங்கள் இருக்கின்றனவா இல்லையா என்பது ஒருபுறமிருந்தாலும் மேல் கண்ட காரியங்களுக்காக அதாவது மனித சமூக கூட்டுவாழ்வு சட்ட திட்ட ஒழுங்கு முறைக்கு ஆக மக்கள் செலவில் நடைபெறும் அரசாங்க நிருவாகமும், சிவில்கிரிமினல் சட்ட திட்டங்களும், அவைகளை நிறைவேற்ற நியாயஸ்தலம், தண்டனை, சன்மானம் ஆகிய முறைகளும் பிரத்தியக்ஷ முறையில் கல்வி அறிவு ஒழுக்கம் ஆகியவைகளை கற்பிக்கும் போதனா சாலைகளும் இருந்துவரும்போது இவைகள் அல்லாத ஒரு சாதனம் அதாவது மதம் என்கின்ற ஒரு விஷயம் எதற்காக இருக்கவேண்டும்? என்பது நமக்கு விளங்கவில்லை.

அரசாங்கம், சட்டதிட்டம், நீதிநிர்வாகம், தண்டனை, கண்டனை இல்லாமல் மனித சமூகம் எப்படிப்பட்ட மதத்தினாலாவதுகூடி ஒழுங்கு முறையுடன் வாழ முடியுமா? என்பதை யோசித்தால் மதம் மேல்கண்ட காரியங்களுக்கு உண்மையாய் பயன்படுகிறதா என்பது விளங்கும். இன்று எந்த தேசத்திலும், எந்த மதத்திலும் எந்தச்சமூகத்திலும் உள்ள மக்களின் சொத்

தும், சரீரமும் சுமாதானமும்காப்பாற்றப்படுவது மதத்தினாலா அரசாங்க சட்டதிட்டங்களினாலா என்பதை யோசித்துப் பார்த்தாலே மதத்தின் காப்பும், நடப்பும் எப்படிப்பட்டது எவ்வளவு பயன்படக்கூடியது என்பவை சுலபத்தில் விளங்கி விடும்.

மதம் "எல்லா ஜீவராசிகளிடமும் அன்பாயும்காருண்யத்துடனும் இருக்கவேண்டும் என்று கற்பிக்கின்றது" என்று மதக்காரர்கள் சொல்லக்கூடும். ஆனால் மனிதன், மனிதனைத்தவிர மற்ற எல்லா ஜீவராசிகளையும்பற்றி கவலைப்படாமல் மற்ற ஜீவராசிகளைக்கொல்லவும், தின்னவும், இம்சிக்கவும் தனக்கு இடையூறு என்று கருதினால் அழிக்கவும் செய்கிறான். ஆனால் மனிதனை மாத்திரம் அந்தப்படி செய்வதில்லை. இதற்குக்காரணம் மதமா? அல்லது அரசாங்க சட்டதிட்டமா? என்று கேட்கின்றோம். மனிதனை அந்தப்படி. எங்கேயோ ஒன்று இரண்டு சமயம் செய்வதாக வைத்துக்கொண்டாலும் அதற்காகத் தன் உணர்ச்சியை அடைகிறான்.

இதனால் மதம் எங்கே பொதுவான ஒழுங்கு முறையை—ஒழுக்கத்தைக் காப்பாற்றுகின்றது? என்று கேட்கின்றோம்.

மதம் மனிதனுக்கும், மற்ற ஜீவராசிகளுக்கும் உள்ள வித்தியாசங்களைக் காட்டுவது என்று சொல்லப்படுவதும் மிகுதியும் பொருத்தமற்றது என்றே கருதுகின்றோம்.

மனிதனுக்கும், மற்ற ஜீவவர்க்கத்துக்கும் உள்ள வித்தியாசம் எந்தத்துறையிலானாலும், அறிய வேண்டுமானால் பிராணிவர்க்கத்தத்துவம் கொண்ட நூல்களைப் பார்த்தால் தாராளமாக மதசம்பந்தம் இல்லாமலே அவைகளைத் தெரிந்துகொள்ளலாம். அப்படிக்கில்லாமல் மதத்தின் மூலம் அறிந்த ஜீவதத்துவங்கள் இன்று சிரிப்புக்கிடமாகத்தான் இருந்து வருகின்றன.

மதம் ஒரு மனிதனுக்கும் மற்றொரு மனிதனுக்கும் வித்தியாசம் கற்பிக்கின்றது. மிருகங்களை, பக்ஷிகளை, பூச்சிகளை, புல் பூண்டுகளை மனிதனைவிட உயர்வாய் மதிக்கின்றது. ஒரு மிருகத்தைத் தாழ்வாய் கற்பிக்கின்றது. இந்த விஷயங்களுக்கு பிராணி சாஸ்திரமே முக்கியமானதும், சரியானதுமே தவிர மதத்தின் மூலம் அறியக்கூடியதாய் இருக்கும் தன்மை மிகவும் மோசமானதும், மூர்க்கத்தனமானதும், மூட்டாள்தனமானதுமென்றே சொல்லுவோம்.

மேல்கண்ட 1, 2, 3 விஷயங்களைப்பற்றியவரையிலாவது மதத்தை ஒப்புக்கொள்ளச் செய்யலாமா என்று பார்த்தாலுங் கூட அதுவும் அறிவுக்குப் பொருத்தமற்றதும், மூர்க்கத்தனம் கொண்டதுமான கருத்துக்களால் பாதகமடைகின்றது. அதாவது எந்த மதக்காரனும் தன் தன் மதத்தைப்பற்றிய ஆதாரங்களும், கொள்கைகளுமே எந்த தேசத்துக்கும், எந்தக் காலத்திற்கும் பொருத்தமானது என்றும், அவைகளில் ஒரு முற்றுப்புள்ளி குறிப்புக்கோடுகூட மாற்றக்கூடாது என்றும், தன் தன் மதத்துக்கு தலைவன் என்பவன் எவனோ அவனே உலக மதத்தலைவனாக இருக்கவேண்டும் என்றும் செய்யப்படும் பிடிவாதங்களும், முரட்டுத்தனங்களும் எந்த மதத்தையும் மனித சமூக வாழ்வுக்கு வழிகாட்டி என்று ஒப்புக்கொள்ள முடியாமல் செய்கின்றது.

ஆகவே மனித சமூக கூட்டுவாழ்வுக்கும், ஒழுக்க முறைக்கும் மதங்களைவிட அரசாங்க சட்ட திட்டங்களையே ஆதாரமாகக்கொள்வதுதான் அறிவுடமை என்று கூறுவோம். அதுதான் இன்று உலகமெங்கும் அனுபவத்தில் இருக்கின்றது என்றும் சொல்லுவோம். எனெனில் அவைகளில் காலத்துக்கும், தேசத்துக்கும் ஒத்தபடியும் அனுபவத்துக்கும் அறிவுக்கும் ஏற்றபடியும் மாற்றிக்கொள்ளவும், திருத்திக்கொள்ளவும் உரிமை இருக்கின்றது மதங்களில் அவை காணவே முடியாது. அப்படி எதாவது முயற்சித்தாலும் கலகம், கொள்ளை, கொலை முதலியவைகளை உண்டாக்கி விடுகின்றன.

எனவே இந்த விஷயங்களே அதாவது இந்த உலக பிரத்தியக்ஷ மனித வாழ்வு சம்பந்தப்பட்ட இந்த விஷயங்களே மதத்தின் பயனாக இப்படி இருந்தால் இனி "மேலுலக" மனிதனுடைய கண்ணுக்கும், மனதுக்கும் பஞ்சேந்திரியங்களுக்கும் எட்டாத விஷயங்களைப் பற்றிய மதபோதனைகள் என்னபயனைக் கொடுக்கக்கூடியவையாக இருக்கும்? எப்படிப்பட்டவையாக இருக்கும்? என்பதைப்பற்றி நாம் விளக்க வேண்டுமா என்று கேட்கின்றோம்.

மற்றபடி "மதம் சட சம்பந்தத்தை விட்டுவிட்டு ஆத்மாவைப் பொறுத்தது" என்று சொல்லப்படுவதைப்பற்றியதென்றால் இந்தக் காரணத்துக்காகவே மதங்களை எல்லாம் அடியோடு ஒழிக்க வேண்டும் என்று சொல்லவேண்டிய நிலையில் இருக்கின்றோம்.

ஆத்மா என்பதை இதுவரை ஒரு மனிதனும் அருத்தத் தோடு உறுதிப்படுத்தவேயில்லை.

"4+3=10" என்று சொல்லிவிட்டு அந்தப் பத்தைப்பற் றியே விவகரித்துக் கொண்டிருக்கின்றதுபோலவே அதாவது "10-ஐ யார் யாருக்கு எப்படி எப்படிப் பங்கிடுவது, எங்கு எங்கு வைப்பது என்று வேண்டுமானால் பேசு. அதற்குமேல் 4+3 எப்படி 10 என்று மாத்திரம் கேட்கக்கூடாது என்கின்ற நிலை யில் தான் இன்று ஆத்ம தத்துவம் இருந்துவருகின்றது.

அதாவது ஆத்மா என்றால் என்ன? அது எப்படி சரீரம் பெற்றது? அதற்கு எப்படி கருமம் ஒட்டிற்று? அதன் கடத் தைக்குக் காரணம் என்ன? அது எப்படி "மோக்ஷம்" போகி றது? அது எப்படி சரீரம் பெற்று எழுகின்றது? மனித ஆத் மா, மிருக ஆத்மா, பக்ஷி ஆத்மா, புழு பூச்சி ஆத்மா ஆகியவை களில் உள்ள வித்தியாசம் என்ன? என்பவைகளைப்பற்றி எல்லாம் பேசலாம், விவகரிக்கலாம், வால்யம் வால்யமாக புஸ்தகம் எழுதலாம். ஆனால் ஆத்மா என்றால் என்ன? அது எப்படிப்பட்டது? அப்படி ஒன்று இருக்க விஞ்ஞான சாஸ்திரம் (சைன்ஸ்) அல்லது ஜீவதத்துவ சாஸ்திரம் இடம் கொடுக்கின் றதா? என்பதைப்பற்றி யாரும் எவ்வித கேள்வியையும் கேட்கக் கூடாது. ஆத்மா இருப்பதாக அவர் சொன்னார், இவர் சொன்னார், மகாது சொன்னார், கிறிஸ்து சொன்னார், கிருஷ் ணன் சொன்னார் புத்தர் சொன்னார்.....என்று சொல்லி விடுவதும், "ஆத்மாவை நம்பாதவன் கடவுளை நம்பாத நாஸ்திக னைவிட, கேடானவன், மடையன், மட்டி" என்றும், "கடவுளை நம்பாவிட்டாலும் ஆத்மாவை நம்பித்தான் ஆக வேண்டும்" என்றும் சொல்லிவிடுகிறார்களே ஒழிய, காரண காரியங்களுடன் அறிவு அனுபவங்களுடன் பேசுகின்றவர்களே காணக்கிடைப் பதில்லை.

இது ஒருபுறமிருந்தாலும் ரூபம் இல்லாத-வஸ்து தத்துவமில் லாத—மனதுக்குப்புரியாத விஷயத்துக்காக இவ்வுலக பிரத்தி யக்ஷ வாழ்க்கையையும், அடையும் இன்ப துன்பங்களையும் பற்றிய கவலை கூடாது என்றோ அல்லது இக்கவலையை விட "ஆத்மா" கவலையே பிரதானமென்றோ, பெரியதென்றோ சொல்லப்படுமானால் அப்படிப்பட்ட மதத்திற்கு உலகில் மனித ஜீவன்கள் இடம் கொடுக்கலாமா என்று தான் கேட்கின்றோம்.

நிற்க, "மதமானது மேல்உலக வாழ்வுக்கு ஆதாரமானது" என்று சொல்லப்படுமானால் முதலாவதாக மேல் உலகம் என்பது என்ன என்பதைப்பற்றி இதுவரை யாராவது, எங்காவது விளக்கி இருக்கிறார்களா என்று கேட்கின்றோம்.

பூகோள சாஸ்திர நிபுணர்கள் பூமியின் கீழ் மனிதற்கு எட்டக்கூடிய அளவுவரையும், பூமியின் மேல் ஆகாய மார்க்கமாக மனிதற்கு எட்டக்கூடிய அளவு வரையிலும் ஆராய்ந்து பார்த்து லக்ஷக்கணக்கான மைல்—என்? கோடிக்கணக்கான மைல் தூரம் வரையில் ஆராய்ச்சி செய்து மேல் கீழ் நிலைமையை விளக்கி இருக்கிறார்கள். இவர்கள் எல்லோரும் ஓரு நிபுணத்துவர்கள் என்கின்ற நிலைமையிலும் அனேக வருஷ காலம் அதற்காகப் பாடுபட்டு உழைத்து அனேக கருவிகளின் உதவியைக்கொண்டு கண்டு பிடித்துச்சொன்ன பிரத்தியக்ஷ—அனுபவ—ருஜுப்பிக்கக் கூடிய உண்மைகளை ஓழிய "ஞான திருஷ்டி" அதாவது ஓரு மனிதனுடைய புத்திக்குத் திடீரென்று தோன்றிய விஷயம் என்று சொல்லப்படுவதுபோல் சொல்லப்பட்டதல்ல. அன்றியும் பள்ளிக்கூடங்களில், அல்லது பூகோள புஸ்தகங்களில் முறையே கற்பிக்கப்படாததும் காணப்படாததுமான விஷயங்களுமல்ல.

அப்படியிருக்கும்போது இந்த பிரத்தியக்ஷ உலக விஷயத்தை விட்டுவிட்டு மேல் உலக விஷயத்தைப் பற்றிப்பேசுவது என்றால் அதில் அடங்கியிருக்கும் மௌடீகத்தன்மைக்கு எதை ஒப்பிடுவது என்பது நமக்கு விளங்கவில்லை.

இதுவரையில் மனிதன் மேல் உலகத்தை எப்படிக்கண்டு பிடித்தான்? அதன் விஸ்தீரணம், தன்மை என்ன? என்பவைகளைப்பற்றிய உண்மை எதுவும் சொல்லப்படாமல் "முதலில் மேல் உலகத்தை நம்பு, பிறகு எப்படி வேண்டுமானாலும் அதாவது மோக்ஷம் எப்படிப்பட்டது? நரகம் எப்படிப்பட்டது? கண்டனை எப்படிப்பட்டது? அது யாருக்குச் சொந்தம்? பரம பிதாவா, அல்லாவா, வைகுண்ட நாதரா, கைலாச வாசரா? யார் அதற்கு எஜமான்? என்பதைப்பற்றி எவ்வளவு வேண்டுமானாலும் வாதம் செய்" என்று கற்பிப்பதாய் இருப்பதைத்தவிர வேறு என்ன உண்மை, அல்லது அறிவுடமை மேல் உலக விஷயத்தில் இருக்கிறது என்று கேட்கின்றோம்.

அதுபோலவே மதம் "கடவுளுக்கும், மனிதனுக்கும் உள்ள சம்பந்தத்தை விளக்குவது" என்று சொல்லப்படும் வார்த்தையும், அர்த்தமற்றதாகவே இருக்கிறது.

கடவுளைப்பற்றி அதாவது, கடவுள் என்றால் என்ன என்பதைப்பற்றி இதுவரை ஒரு ஆஸ்திகனாவது, அல்லது கடவுள் தன்மைகள் பெற்ற பெரியார்களாவது விளக்கினவர்களே அல்ல. அல்லது எந்தக்கடவுளாவது மக்களுக்கு விளங்கும்படியோ தெரியும்படியோ இருப்பதாகவும் காணப்படவில்லை.

கடவுள் என்றால் "கண்ணுக்கும், மனதுக்கும் எட்டாதது, ரூபமும் குணமும் இல்லாதது, சர்வசக்தி சர்வவல்லமை சர்வ வியாபகம் உள்ளது" என்று சொல்லிவிடுவதும், அதைச் சொல்லுகின்றவர்களே கடவுளைக் கண்டு பிடிக்கப்பாடுபடுவதும் அந்த சர்வசக்திக் கருத்தை நம்பாமல் இருப்பதும் பிறகு அதற்கு மூலாகப் பேசுவதுமான காரியங்களே இதுவரை கடவுளைப்பற்றிய வாதங்களின் முடிவாய் இருந்துவந்திருக்கின்றன.

மனதுக்குப்படாத கடவுளைப்பற்றி மனிதன் எப்படி எந்த இந்திரியத்தினால் உணர்ந்தான் என்று கேட்டால் அதற்கு பதிலே இல்லை. குணமும் ரூபமும் இல்லாத வஸ்துக்கு செய்கை எது என்றுகேட்டால் அதற்கும் பதிலே இல்லை. சர்வசக்தி, சர்வவியாபகம் உள்ளகடவுள் செயலில் நன்மை தீமை, துன்பம் -இன்பம், மேல்-கீழ், சுகம்-துக்கம், மோக்ஷம்-நரகம், எப்படி உண்டாயிற்று? ஏன் உண்டாயிற்று என்று கேட்டால் அதற்கும் பதிலில்லை. "அதைப்பற்றியெல்லாம் யாரும் கேட்கக் கூடாது. கடவுளை நம்பித்தான் ஆகவேண்டும். நம்பாதவன் நாஸ்திகன், நம்பாவிட்டால் நரகம், அரச தண்டனை, ஆஸ்திகர்கள் தண்டனை கிடைக்கும்" என்று பிரட்டுவதும் உருட்டுலதும் தவிர கடவுளைப்பற்றி வேறு விளக்கமே இல்லை.

சர்வ சக்தியுள்ள சர்வ வியாபகமுள்ள கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட கடவுளை நான் ஏன் அறிய முடியவில்லை? நான் என்கடவுளே இல்லை என்று சொல்லுகிறேன்? என்று ஒருவன் கேட்டால் அது உன்னுடைய அகம்பாவம், உன்னுடைய மடமை, உன்னுடைய பாவச்செய்கை என்று சொல்லி கடவுளை

விட அவனைப் பெரியவனாக மதித்து இகழ்வதாயிருக்கின்றதே தவிர வேறு சமாதானமில்லை.

ஆகவே இப்படிப்பட்ட தத்துவங்கள் கொண்ட மதங்களைப்பற்றி மக்கள் வேற்றுமை உணர்ச்சிகொண்டு ஒருவரை ஒருவர் வெறுத்து பலாத்காரச் செய்கைகள் செய்து மக்களைதுன்புறுத்துவதென்றால் மதத்தை ஒழிக்காமல் இருக்க யாருக்குத்தான் மனம் வரும் என்று கேட்கின்றோம்.

மதத்தின் பயனாக நமது வாழ்வில் எவ்வளவு துன்பங்கள், தொல்லைகள் அடைய நேரிடுகின்றது என்பதை உணர்ந்தால் மேலும் மேலும் மதங்களிடம் வெறுப்புத் தோன்ற இடமேற்படுகின்றதே ஒழிய சிறிதாவது அதைச் சகிக்க இடமே இல்லாமல் இருக்கின்றது.

கிறிஸ்துவ மதத்தைப்பற்றி எழுதினோம் என்பதற்கு "குடி அரசு" பத்திரிகை ஜாமீன் கேட்கப்பட்டுப் போயிற்று. மகமதிய மதத்தைப்பற்றி எழுதினதற்காக "புரட்சி"ப் பத்திரிகை ஜாமீன் கேட்கப்பட்டுப் போயிற்று.

இந்து மதத்தைப்பற்றி எழுதுகிறோம் என்பதற்காகதினம் தோறும், நிமிஷம் தோறும் அடைந்து வரும் தொல்லையும் நசுக்குச் சேஷ்டை உபத்திரவங்களும் கணக்கு வழக்கில் அடங்காது. பார்ப்பனர்களை உத்தியோகஸ்தர்களாகக் கொண்ட போலீஸ் இலாக்கா, போஸ்டல் இலாக்கா, ரயில்வே இலாகா, நீதி இலாக்கா, நிர்வாகம், மற்றும் அநேக துறைகளில் கீழே இருந்து ஹைகோர்ட்டு நிர்வாக சபைவரையில் ஆங்காங்குள்ள மதக் காப்பாளர்களான பார்ப்பனர்களால் நாம் அடைந்துவரும் கஷ்டம், சித்திரவதைக்கொப்பாக இருந்துவருகின்றது.

நாம் மாத்திரமல்லாமல் நம்மைப்போல் கஷ்டப்படும் மக்கள் கோடிக்கணக்காக எல்லா மதங்களிலும் இருந்து வருகின்றார்கள் என்பதும் நமக்குத் தெரியும்.

மதமானது பணக்காரத் தன்மையை பிரதிபலித்துக்கொண்டும், அதை ஆதரித்துக்கொண்டும் இருந்து வருகின்ற சாதனமாய் இருப்பதால் அதற்கு இவ்வளவு ஆதிக்கம் இருந்து வருவதில் அதிசயமில்லை.

ஆதலாலேயேதான் மதங்கள் ஒழிக்கப்படுவதாலேயே மனித சமூகத்துக்கு ஒற்றுமையும், சாந்தியும் ஏற்படும் என்று கருதுவதோடு ஜாதிக்கொடுமையும் பணக்காரத் தன்மையின் கொடுமையும் ஒழியுமென்று கருதுகின்றோம்.

சில நாளைக்குமுன் சென்னை கடற்கரையில் நடந்த மத சம்பந்தமான ஒரு முஸ்லிம் கூட்டத்தில் கலகம் ஏற்பட்டு ஒரு முஸ்லீமை ஒரு இந்து குத்திவிட்டானாம். முஸ்லீமும் அதனால் செத்து விட்டான். நாளையதினம் "ஒரு கிறிஸ்துவன் அதை விசாரித்துஉண்மையைக்கண்டு இந்துவைதண்டிக்கப்போகிறான்." என்றாலோ அதில் அதிசயமில்லை. ஒரு கிறிஸ்துவன் முகமது நபியைப்பற்றி ஏதோ எழுதிவிட்டால் முகமதியர்களுக்கு ஆத்திரம் வருகின்றதும், ஒரு முகமதியன் கிறிஸ்துவைப்பற்றி எழுதிவிட்டால் கிறிஸ்தவனுக்கு ஆத்திரம் வருவதும் இதுபோலவே இந்துக்களுக்கும், கிறிஸ்து முகமதியர்களுக்கும் நேருவதும், அதற்காக கொலை, கொள்ளை, கொடுமைகள் நடப்பதுமான காரியங்கள் அதுவும் இன்று நேற்றல்லாமல் ஆயிரக்கணக்கான வருஷங்களாக, அதுவும் இந்தியாவில் மாத்திரம் அல்லாமல் ஐரோப்பா, அரேபியா, ஆப்பிரிக்கா முதலிய எல்லா தேசங்களிலும் நடந்து வருகின்றன என்றால் மதம் மக்களுக்கு கூட்டு வாழ்க்கையையும், ஒற்றுமையையும், சகிப்புத்தன்மையையும், வாழ்க்கை ஒழுங்குகளையும் ஒழுக்கங்களையும் போதித்து வருகின்றதா? அல்லது அதற்கு மாறான தன்மைகள் ஏற்பட்டு வருகிறதா? என்று கேட்கின்றோம்.

மதங்களில் உள்ள ஒழுக்கங்கள்.

இந்து மதமும், இஸ்லாம் மதமும் ஒழுக்கத்தைப் பற்றி போதிப்பதில் ஒன்றுக்கொன்று நானே சிறந்தது, நானே ஒழுக்கத்தையுடையதுஎன்று போட்டி போடுகின்றன. ஒழுக்கயீனங்களில் எல்லாம் மிகக்கேடானதாகவும் குற்றங்களில் எல்லாம் மிக இழிவான குற்றமாகவும் பெரும்பான்மையான மக்களால் கருதப்படும் குற்றமாகிய பெண்களைப் பலாத்காரம் செய்து கற்பழித்தல், மானபங்கம் செய்தல் என்னும் குற்ற விஷயத்தில்

இரு மதஸ்தர்களும் வங்காள மாகாணத்தில் எப்படி நடந்து இருக்கின்றார்கள் என்பதைக்காட்ட "மாடன் ரிவியூ" பத்திரிகையில் சமீபத்தில் வெளியாகி உள்ள ஒரு புள்ளிவிபரத்தை இங்கு குறிப்பிட்டு விட்டு இதை முடிக்கின்றோம்.

"இஸ்லாம் மத நம்பிக்கைக்காரர்களால் செய்யப்பட்ட பலாத்கார விபரம்.

வருஷம்.	இந்து பெண்கள்	முஸ்லீம் பெண்கள்	மொத்தம்
1926	113	481	594
1927	122	576	698
1928	104	460	564
1929	114	676	790
1930	104	531	635
1931	125	573	698

இந்து மதநம்பிக்கைக்காரர்களால் செய்யப்பட்ட பலாத்கார விபரம்.

வருஷம்.	இந்து பெண்கள்	முஸ்லீம் பெண்கள்	மொத்தம்
1926	194	9	203
1927	201	3	204
1928	198	10	208
1929	236	8	244
1930	234	6	240
1931	197	3	200"

மதம் ஒழுக்கத்தை, கூட்டு வாழ்க்கை ஒழுங்கு முறையை மனிதர்களிடத்தில் மனிதன் நடந்து கொள்ளவேண்டிய தன்மையை எங்கே எப்படி கற்பித்து இருக்கின்றது என்று மதவிஸ்வாசிகளை மறுபடியும் கேட்கிறோம்.

———

நவீன வாழ்க்கை.

(M. S.)

நமது இந்த உலகத்தைப் போன்று, பிரபஞ்சத்தில் வேறு உலகங்கள் இருக்கின்றனவோ, இல்லையோ என்பது வெறும் உத்தேசமேயொழிய, தெரிந்த விஷயமல்ல. வானநூலோர், கோடானகோடி நட்சத்திரங்கள், ஆவிமேகங்கள், ஒன்பது கிரகங்கள், பல சந்திரர்கள் பிரபஞ்சத்தில் நிறைந்திருப்பதாகத் தெரிவிக்கிறார்கள். கணக்கிடக்கூடாத பிரபஞ்சப் பொருள்களில், யாதேனும் ஒன்றாகிலும், நமது பூமியைப் போன்று இருப்பதாகச் சொல்லமுடியவில்லை. நமது பூமியிலுள்ள பூதபௌதிக குணங்கள் வாய்ந்த உலகம் ஒன்றாகிலும் எந்த பிரபஞ்ச மூலையிலாகிலும் இருப்பதாக விளங்கவில்லை. இத்தியாதி காரணங்களை நோக்கியே, பிரபல விஞ்ஞானிகள், இந்த ஓர் உலகில்தான் மனிதன் தோன்றியுள்ளான் என்று யூகிக்கின்றார்கள். பிரபஞ்சத்தில் இது ஓர் அற்புத நிகழ்ச்சி என்று? எண்ணலாம் போலும்! இந்த அரிய சம்பவம் நடந்து, பத்து லட்சம் வருஷம் இருக்கலாமென்று கணக்கெடுத்துரைக்கிறார்கள். அதற்கு முன், பலகோடி வருஷம், மனிதன் நீங்கலாக, அவனுடைய மிருக மூதாதைகளும், அவைகளுக்கு முந்தியபுராதன மூதாதைக்களும் வாழ்ந்து வந்தனர்.

கடந்த பத்து லட்சம் வருஷங்களாக இம்மனிதனுடைய வாழ்க்கை இவனது மூதாதையர் வாழ்ந்துவந்த வாழ்க்கையைவிட, விசேடமொன்றுமில்லை. பேசத் தெரிந்து கொண்ட விசேடமொன்றைத்தவிர, மற்ற வேறெந்த விசேடமும் உண்மையில் காண்பதரிது. உலகில் பூமியும் விளைவும் உணவும் மிகுந்திருந்தும், கோடானகோடி மக்களுக்குப் போதுமான உணவு கிடைப்பதில்லை. மனித வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்கள் நிறைந்திருந்தும், பெரும்பான்மை மாந்தருக்கு வேண்டிய பொருள்கள் கிடைப்பதில்லை. உலக மக்கள், பேசத் தெரிந்து கொண்டும், பேசத் தெரியாத மனிதர் தற்போது இல்லையாயினும், பேச்சால்

அறிந்து கொள்ளக்கூடிய உலக விஷயங்களைத் தெரியாத மக்கள், கோடான கோடிப்பேர் இருந்து வருகின்றனர். உலகில் வசிக்கப் போதுமான இடமிருந்தும், ஒரு நாட்டார், அயல் நாடுகளைக் கைப்பற்றப்போர் புரிகின்றனர். உணவுக் கும் இருக்குமிடத்திற்கும் போர் புரியும் கொடிய மிருக சீவன்களைப்போல், மனிதனும், போரும் சண்டையும் போடு கிறான்! இந்த பண்டைக்கால மிருக வாழ்க்கையை இரண் டொரு திருஷ்டாந்தங்களால் நிரூபிப்பாம். நேற்று நிகழ்ந்த உலக நெருக்கடியில், மாந்தருக்குப் போதுமான உணவு கிடைக்கவில்லையென்று கோடான கோடிமக்கள் வாடி வதங்கி னர். வேலையில்லாமல் இன்னும் பலகோடிமக்கள், தெருவில் அலைந்தனர். மக்கள் உலகமெங்கும் வளைந்து வந்தும், நிலத்திற்கும், நீருக்கும் சொந்தக்காரர் என்று வழங்குஞ் சில வகுப்பார், உணவுப் பொருள்களை நிக்கிரையாக்கியது போதா மல், கடலிலும் கொட்டி அழித்தனர்! ஏன் இப்படிச் செய்தார்களெனில், தங்களுக்குப் போதுமான லாபம் கிடைக்கவில்லையாம்! 2000 (Waggons) வாகன்கள் நிறைந்த மொலாம்பழங்களைமலைச்சிகரத்திலிருந்து கடலில் கொட்டி இறைத்தனர்!! ஏனெனில், பழவர்க்கங்கள் அதிக மாக விளைந்து, விலைபடாமல் இருந்தனவாம்! இது மிருக வாழ்க்கையிலும் கொடியதன்றோ? இந்த மனித மடத்தைக் குச் சமமான வாழ்க்கை, மிருகங்களில் பார்க்கவேண்டுமா னால், சிலகொடிய மிருகங்களாகிய சிங்கம், புலிகள், கொன்ற ஆட்டையோ, மாட்டையோ சின்னாபின்னமாய் சண்டை யிட்டுக் கிழித்தெறிவது போலாகும். ஏகாதிபத்திய அரசுக ளில்தத்தம் பிரஜைகளுக்கு தத்தம்நாடுகளில்வசிக்கவும், வாழ வும்போதுமான இடமும், நிலமும் இருக்க, அயல் நாடுகளைக் கைப்பற்றபோர்புரிந்து மாந்தரைமடியச்செய்கின்றன. 1914-ம் வருஷத்தில் மகாயுத்தத்தின் காரணங்களை, வல்லரசுகள் செ ய்துகொண்ட ரகசிய உடன்படிக்கைகளைப் படித்தவர்களுக்கு வல்லரசுகளின் போராசை நன்கு விளங்கும். ஒரு வல்ல ரசுக்கு, துருக்கருடைய நாட்டையும், மற்றோர் வல்லரசுக்கு இன்னோர் வல்லாசின் நாட்டையும், மற்றுமோர் வல்லரசுக்கு சில கடலோர தேசங்களையும் பங்கிட்டுக் கொள்வதற்காகப் புரிந்த மாபெரும் சண்டை எனத்தெரிந்து கொள்ளலாம்.

கடந்த பத்து லட்சம் வருஷங்களாக, மனித வாழ்க்கை, மிருக வாழ்க்கையிலிருந்து மாறியதாக எண்ண இடமில்லை. ஒன்றை யொன்று பிடுங்கித்தின்னும் நடவடிக்கை, நாகரீக

காலமென்று வழங்கிவரும் நமது காலம் வரை நிகழ்ந்து கொண்டே வருகின்றது. உலகில் நடந்து வரும் போர்கள், காடு, வனாந்திரங்களில் மிருகங்கள் போடும் சண்டைக் கொப்பாகும். வர்த்தகத்தில் மக்கள் போட்டியிட்டு ஒரு வரை யொருவர் வஞ்சிப்பதும், ஒரு மிருகம் மற்றோர் மிருகத்தை வஞ்சித்து, தான் வாழச் செய்துகொள்ளும் உபாயங்களைப் போன்றதே!! தனவந்தர் வீடுகளென்று அழைக்கப் படும் இருப்பிடங்களிலிருந்து, எலியோரை அப்புறப்படுத்துவதும், புலி, சிங்கங்கள், குகைகளிலிருந்து மற்ற வலிய மிருகங்களை வெளிப்படுத்துவதே!!! வல்லரசுகள் புரியும் போர்களும் ஒரு குரங்கு கூட்டம், மற்றோர் குரங்குக் கூட்டத்தைக் கொன்று வெற்றி கொள்வதைப் போலாகும். கல்வி கேள்வி இல்லாத மக்கள் கோடிக்கணக்காக இன்றைக்கும் வாழ்ந்து வரும் வாழ்க்கை, ஒன்றிரண்டு என்று எண்ணத் தெரியாத பல கோடி புழுப்பூச்சி வாழ்க்கையேயாகும். எந்த விதத்தில் மனித வாழ்க்கை, மிருக வாழ்க்கையை விட உயர்ந்தது என்று சொல்லத் துணியக்கூடும்? பேசும் திறமையால், உயர்ந்ததென்று சொல்லலாமா? பேசும் தன்மை, மக்களுக்கு ஓரளவாறு உபயோகமாயினும் பதின்மடங்கு கெடுதியை விளைவிக்க எதுவாக விருப்பதாகச் சொல்லலாம். கோடானகோடி வருஷமாக இவ்வுலகில் தோன்றாத கற்பனைகள், மனிதன் பேசத்தெரிந்த பிறகே முளைத்தன. "கடவுள்," "நரகம்" "மோட்சம்", "மறுபிறப்பு", "தேவன்", "ஆன்மா", "பரமாத்மா" முதலிய சமயங்களின் கற்பனைகளும், ஜாதி, வர்ணம் முதலிய சமூக கற்பனைகளும், மனிதன் பேசத் தெரிந்த பிறகே கற்பித்துக்கொண்டான். தேளுக்குக் கொடுக்கும், பாம்புக்கு விஷமும் தோன்றியது போல். மனித வர்க்கத்தில், சமயக்கற்பனைகளும், சாதி கற்பனைகளும்தோன்றியுள்ளன. ஆனால், ஒரு வித்தியாசமுண்டு. அது யாதெனில், தேளுக்கொடுக்கும், பாம்பின் விஷமும், தன் இனங்களைக் காப்பாற்றிக்கொள்ள வந்த உபாயங்களாகும். ஆனால் மனித வர்க்கத்தில் முளைத்த கற்பனைகளோ வெனில், மனித குலத்தையே நாசமாக்கவும், உபத்திரவம் செய்யவும் வந்த கற்பனைகளே! "உலகில் உதித்த பொருள்களில், மனிதன் ஒருவனே கொடுமையானவன்" என்று கவிஞன் சொன்னது ஓர் விதத்தில் உண்மையே. மனிதனுடைய வாழ்க்கை, லோகாயத வாழ்க்கை யாயினும் (Materialistic) அல்லது மானச வாழ்க்கையாயினும் (Idealistic) அதாவது, கற்பித வாழ்க்கையாயினும், இவனது வாழ்க்கை மிருக வாழ்க்கையே

இதுவே, அவனது பண்டைக்கால வாழ்க்கையாகும். இந்தப் பழமை வாழ்க்கை மாறி, புதிய வாழ்க்கையை அடையுங்காலம் எக்காலம்? அல்லது, இந்தப்பழமை வாழ்க்கையிலேயே மக்கள் இனம் மடியும் வரை இருந்துவரப்போகின்றனா? இந்த ஆழ்ந்த வினாவிற்கு அறிஞர் கூறும் விடை யாதென வினவுவோம்.

மனிதன், தனது வாழ்க்கையில் எந்த விதத்தில் உயர்ந்தவன் என்று சொல்லக்கூடும்? அதிக விரைவில் செல்வதற்கு ரயிலும், ஆகாய விமானங்களும் கண்டுபிடித்தான் என்று சொல்லலாமா? பட்சிகள், மணிக்கு 60, 70 மைல்பறக்கின்றன. மான், குதிரை முதலியன மணிக்கு 30, 40 மைல் ஓடும் சக்தியைப் பெற்றுள்ளன. மனிதன் பங்களாக்களிலும் மாளிகைகளிலும்வசிக்கின்றானாம்! ஆனால், பட்சிகள், வெகு நேர்த்தியான கூண்டுகளில் வசிக்கின்றன.பனி நிறைந்த வடமுனையில் (North Pole) பீவர் என்ற சீவன், கட்டும் அறைகள், மனிதனால் கட்ட முடியாது. தேன் ஈக்கள் கட்டும் அறைகள், என்ன விசித்திரமானவை! ஆயுதங்களை உபயோகிப்பது, மனிதன் ஒருவனுக்குத்தான் தெரியும்? கட்டைகளையும், தழைகளையும், குரங்குகள், தங்கள் எதிரிகள் மேல் எறிகின்றன. பேசத் தெரிந்துகொண்ட வன்மையால், மனிதன், மிருகங்களை விட அதிகமாக, தன் கைகளுக்கு அகப்படும் பொருள்களை உபயோகித்துக்கொண்டானே யொழிய, வேறுவித விசேடமொன்றுமில்லை. கல்வி கற்பதால், எதாகிலும் விசேஷமுண்டோவெனின், சிறு குட்டிக் குரங்குகளுக்கு அதன் தாய்மார்கள், இதைச் செய்யாதே, அதைச் செய் என்று கற்றுக்கொடுக்கின்றன. பட்சிகள், பறக்க, தங்கள் குஞ்சுகளுக்கு தாங்கள் பறந்து காட்டுகின்றன. எலிக் குட்டிகளைப் பிடிக்க பூனைகள், பூனைக்குட்டிகளுக்கு கற்றுக்கொடுக்கின்றன. மிருகத்திலிருந்து பெறப்பெற்ற மனிதன், தனது வாழ்க்கைக்கு வேண்டிய கல்வி கேள்விகளுக்கு ஆதாரம் மிருகங்களின் வாழ்க்கையிலிருந்தே சிறு பான்மையாகப் பெற்றிருக்கிறான். இந்த ஆதாரத்தை விருத்தி செய்து பெற்றுக்கொண்டதுதான் இவனுடைய சிறப்பு. ஆதலின், இவனது வாழ்க்கைக்கு ஆதாரம் மிருக வாழ்க்கையே. இந்த வாழ்க்கையை சில விஷயங்களில் அபிவிருத்தி செய்துகொண்டான். சில விஷயங்களில் தீங்கையும் விளைவித்துக்கொண்டான். மனித வாழ்க்கையில் தீங்கை விளைவித்துக்கொண்ட விஷயங்கள் மூன்று. அவையாவன:—

முதலாவது பொதுவாக உபயோகிக்க வேண்டிய உணவு, உடை, இருப்பிடம் ஆகிய மூன்றையும் தனி உடமை ஆக்கியது.

இரண்டாவது, உபயோகித்து வரவேண்டிய பொருள்களின் மேல் லாபம் (Profit) என்ற திட்டத்தை ஏற்றி, இதனை நிலவரி என்றும், குடிவரி என்றும் வழங்கி, பெரும்பான்மையோருக்கு வாழ்வுக்கு வேண்டிய அத்தியாவசியப் பொருள்களைப் போதுமானவரை கிட்டாமல் செய்து வருவது.

மூன்றாவது, மக்கள் வாழ்வுக்கு வேண்டிய பொருள்களை, பொதுவாக வினியோகித்து வரவொட்டாமல், சிலரே அப்பொருள்களைக் கையாண்டு வருதல். இம்மூன்று திட்டங்களால் (System) உயிர்கள் போதுமானபொருள்களின்றி, குன்றிக்கொண்டு வருகிறது. இம்மூன்று திட்டங்களை மாற்றி, உண்டாகும் பொருள்கள் யாவற்றையும் யாவருக்கும் சரிசமத்துவமாக உதவும்படி செய்வது தான் சோஷியலிஸ்ட் மார்க்கமென்பார். நவீன வாழ்வு உலகில் பரவ வேண்டுமானால், பஞ்சம், வறுமை, நோய், இல்லாமை, போர், மார்ச்சரியம் உலகினின்று அகற்றப்பட வேண்டுமானால், சோஷியலிஸ்ட் மார்க்க மொன்றே உளது. இந்த மார்க்கத்தை விட்டு வேறு எந்த வழியிலும் உலக சுக போகத்துக்கு இடமில்லை. முதலாவது, லாபத்திற்காகவே, எந்த உலகப் பொருள்கள் யாவும் சொந்தமாக்கப்பட்டு வருகின்றன. உபயோகத்திற்கென்றால், எந்தப் பொருளையும், எவனும் சொந்தமாக்க மாட்டான். உலகில் விளையும் புல்லை எடுத்துக் கொள்வோம். மிருகங்கள், எந்த உலகிலும் விளையும் புல்லையாகிலும், அல்லது, நிலங்களையாகிலும் சொந்தமாகக் கருதி விற்பனை செய்வதில்லை. விளைந்த புல்லை, புல்லைத் தின்னும் சீவனை யாவும் போதுமானவரை தின்கின்றன. போதாமற்போனால் எல்லாம் பட்டினி கிடக்கின்றன. ஒரு மிருகம், விளையும் புற்களைத்தானே தின்பதில்லை. இம் மாதிரியாக எல்லா உலகப் பொருள்களும் மிருகங்களில் உபயோகப்பட்டு வருகின்றன. முக்கியமாகக் கூட்டுறவு மிருகங்களில் இந்த பொது உபயோகத் திட்டத்தைப் பார்க்கலாம். அது போலவே, மக்கள் யாவரும் பொதுவுடமைத் திட்டத்தைக் கையாடினால், உயர்வு தாழ்வென்றும், உடையவன்-இல்லாதவன் என்றும், முதலாளி-தொழிலாளி என்றும் இந்த இன வேற்றுமை உலகில் இருக்காது.

லாபத்தை வைத்துக்கொண்டு, எந்தப் பொருளையும் சரி சமத்துவமாக அனுபவிக்க முடியாது. நிலத்தைப் பொதுவாக உழுது, பொதுவாக விதைத்து, பொதுவாகப் பயிர் செய்து. அதன் பலனைப் பொதுவாக அனுபவித்தால் தான், இல்லாமை (Want) பலகோடி மக்களுக்கு இல்லாமலிருக்கும். "சொந்தம்" என்ற கற்பனையால், நிலத்தின் பலனை கைப்பற்றி வருவதால், சிலருக்கு அதிகமும், பலருக்குக் குறைவும் உண்டாகின்றது. பலனின் உழைப்பு, சொந்தமென்ற கற்பனையைச் சொல்லால் உழைத்தவனுக்கு உதவாமற் போகின்றது. இந்த "சொந்தம்" என்ற சொல்லை மாற்றி, "உபயோகம்" என்ற சொல்லை வழக்கத்தில் கொண்டு வந்தால் தான் உலக வறுமை நீங்கும். "சொந்தம்" உலகில் வழங்கும் வரை அல்லது சொந்தமென்ற பழக்க திட்டம், உலகில் நிலவும் வரை, ஜன நாயகத்தாலும் சரி, முதலாளித் திட்டத்திலாகிலும் சரி, பாசிசம் ஆனாலும் சரி, அல்லது அமெரிக்கர் சீர்திருத்தமானாலும் சரி, எந்தவித மார்க்கத்தாலும், உலகம் பசிப்பிணி, தள்ளாமையால் வருந்தியே கிடக்குமென அறிக.

ஒரு வருஷ காலமாக, அமெரிக்க நாட்டில் பசிப்பிணியை ஒழிக்க சில மார்க்கங்களைத் தேடி வருகின்றனர். Recovery Drive, அதாவது சீர்திருத்த முயற்சி என்று வழங்குவார்கள். இதன் முக்கிய அம்சங்கள் என்னவெனில் முதலாக வேலை இல்லாதாருக்கு வேலை கொடுக்க வேண்டும், ஜீவனத்திற்கு போதுமான வருமானம் கொடுக்கும்படி செய்ய வேண்டும், நின்ற வேலைகளை துவக்க வேண்டும், செலவிடாத பணத்திற்குச்செலவு தேட வேண்டும், விலைபடாத சாமான்களை விலைபடச் செய்ய வேண்டும். இந்த சீர்திருத்தங்களைச் செய்யவேண்டி வந்த காரணம் என்னவெனில், மகாயுத்தத்தில் அமெரிக்கா முதலாளிகள் திரண்ட செல்வத்தைக் குவித்துவைத்துக்கொண்டார்கள். இவ்வளவு பணமும் அயல் தேசங்களிலிருந்து பலவிதங்களில் அமெரிக்காவுக்கு வந்துகுவிந்தது. வெளி ஊர்களில் பணமில்லாத தோஷத்தால், அமெரிக்க சரக்குகளை வாங்கவோ, அல்லது அந்தஊர்களில் கடன் வாங்கவோ முடியாமற்போயிற்று. சாக்குகள் விலைபடாமையால், விற்கப்படாமல், தொழிற்சாலைகளில் குவிந்தன. சரக்கு இருப்பில் இருந்து வந்தபடியால், புதிய சாக்குகள் செய்ய முடியவில்லை. சாமான்கள் செய்ய முடியாதபடியால், சாலைகள் மூடப்பட்டன. சாலைகள் மூடப்படவும், பாங்கியில் குவிந்துகிடக்கும் பணத்திற்குச்செலவு இல்லா

மற் போயிற்று. உழைப்போருக்கு வேலை இல்லாமற் போயிற்று வாங்குவார் அற்று சரக்குக்கு விலை குறைவு சேரிட்டது. ஆனால், வாங்குவதற்கு, உழைப்பாளிகளுக்குப் பணமில்லை. பணமிருந்தும் பாக்கியமிருந்தும் அமெரிக்கருக்கு உண்ண உணவு இல்லாமற் போயிற்று! பத்துப் பதினைது கோடி மக்கள், திரிசங்கு சொர்க்கத்தில் ஆழ்ந்தனர்!! ஒரு கோடி பன்னிருலட்ச உழைப்பாளிகளுக்கு வேலையில்லாமல், தெருக்களில் திரிய வெளிப்பட்டனர். விளைந்த விளைவு, வயல்களில் அம்பாரம் அம்பாரமாகக்குவிந்தது. விவசாயிகளுக்கு லாபமின்றி, நிலங்களை கரம்பில் வைத்துவிடநேரிட்டது. கோடிக்கணக்கான விவசாயத் தொழிலாளருக்கு வேலை இல்லாமல் போயிற்று. இது என்ன விபரீதம்! இந்த விபரீதத்திற்கு வழி என்னவென்று யோசித்தார்கள். குவிந்து கிடக்கும் சரக்கை அழித்து விட்டால், விலை ஏறுமென்று பார்த்தார்கள். சரக்கு அழிந்ததே யொழிய, மீதி சரக்கை வாங்குவார் இல்லை. வாங்கும்படியாகத் தொழிற்சாலைகளில் உழைப்பவர்களுக்கு சம்பளங்களை உயர்த்த, காகித செலாமணியை அதிகப்படுத்தினார்கள். சம்பளம் உயரவும், சரக்குகளுக்கு விலை ஏறியது. விலை ஏறவும், மூடப்பட்ட சாலைகள் திறக்கப்பட்டன. ரயில்களுக்கும், கப்பல் வர்த்தகங்களுக்கும் அதிக வருமானம் கிடைக்க ஆரம்பித்தது. ஆனால், முதலாளி எவ்வளவு நாள் காகித நோட்டுகளை நம்பி இருக்க முடியும்? எத்தனை நாள் குறைந்த லாபத்துடன் இருக்க முடியும்?

விளைவு விலைபடாத விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு செய்ய ஆரம்பித்தனர். அவர்களைக் குறைவாகப்பயிர் செய்யச் செய்தனர். ஆனால், கோடிக்கணக்கான விவசாயத் தொழிலாளருக்கு வேலை இல்லாமற் போயிற்று. நஷ்டஈடு நிலச் சுவான்கள் சேபியில் விழுந்தது! உழைப்பவர் வயிற்றில் மண் வந்து விழுந்தது!! சரக்குகள் இல்லாமையால், அதன் விலை உயர்ந்தது. ஆனால், விலை உயர்ந்த சாமான்களை வாங்குவதற்குப் போதிய சம்பள உயர்வு இல்லை. இந்த Vicious Circle என்ற கோஷத்தில், முதலாளி திட்டத்தை சீர்படச் செய்யும் முயற்சி அமெரிக்கருக்கு வந்து விட்டது. திரும்பத் திரும்ப, இருந்த நிலைக்கே வருங்கேட்டை, Vicious Circle தோஷமென்று ஆங்கிலத்தில் கூறுவர். இந்தக் கேட்டைக் கவனித்துவரும் ஒரு அறிஞர், "அமெரிக்கர் நிலைமை உண்மையில் சீர்படவேண்டுமானால், பொதுவாக

மதமும் மதமும்.

[மதங்கள் பெண்களை எவ்வாறு மதித்து வருகின்றன என்பதைக் குறித்து எப். ஜே. கௌல்டு என்பவரால் எழுதப் பட்ட கட்டுரையின் மொழிபெயர்ப்பு.]

கிறிஸ்தவ மதம் பெண்களை எவ்வாறு மதித்து வருகி றது என்பதை இன்று எடுத்து காட்டுகிறேன். பைபிள் என்று சொல்லப்பட்ட கிறிஸ்தவமத நூல் பெண்களைக் குறித்து எதாவது நீதிநெறியையோ அல்லது அரசியல் நெறியையோ கற்பிக்கிறதென்று சொல்லுவதற்கில்லை. அப் புத்தகம், மனித சமூகத்தில் ஓரு பகுதியினராகிய ஆண்க ளாலேயே உற்பத்தி செய்யப்பட்டதாகும். ஏனெனில் அவ் விவிலிய நூலில் எந்த ஓரு பகுதியாவது ஓரு பெண்ணால் எழுதப்பட்டதென்று சொல்ல யார் முன் வரக்கூடும்? அறி வுள்ள அதாவது பகுத்தறிவோடு கல்விகற்ற எவனும் முதல் ஐந்து புஸ்தகங்களும் மோஸசால் எழுதப்பட்டன என்று துணிந்துகூறமாட்டான்; ஆனால் ஏதோ காலதேச வர்த்த மானத்திற்கிணங்க கட்டுக்கதையைப்போல் சில வீரச்செயல் களைக் கற்பனை செய்து எழுதப்பட்ட ஓரு பழங்கதை யென்றுதான் நினைக்க முடியும். நல்ல வேளையாக யூதப் பெண் ஓருத்தி சீன மலையிலிருந்து பத்துக் கற்பனைகளைக் கொண்டு வந்தாள் என்று சொல்லாமல் போய்விட்டார்கள். ஏனெனில் இதனினும் அதிசயம் வேறொன்றுமிருக்க முடி

சகலருக்கும் உதவும்படி ஓரு திட்டத்தை உண்டாக்கவேண் டும். அந்த திட்டத்தை சொந்தம் என்ற சொத்தைக்கொண் டும், அல்லது லாபம் என்ற நோக்கத்தைக் கொண்டும், நிறைவேற்ற முடியாது'' செய்பொருளும், விளைபொருளும் எல்லோருக்கும், சரிசமத்துவமாக வினியோகிக்கப்படும் திட்ட மெதுவோ, அந்தத் திட்டத்தின் மேல்தான் மனித புதிய வாழ்க் கையைக் கட்டப்படவேண்டும்.

யாதல்லவா? நாகரீகம் ஆரம்பித்த காலத்தில் பெண்களை அரசியல் வாழ்வில் அதிக சம்பந்தப்படுத்தாமலே இருப்பதில் அதிக ஜாக்கிரதையாயிருந்தார்கள். ஹீப்ரூ பாஷையின் கலை ஞானம் எவ்வளவு உன்னத நிலையை அடைந்திருந்தது என்பதை இப்பத்துக்கற்பனைகள் காட்டுகின்றன என்றுதான் நிச்சயமாகச் சொல்லலாம். இரண்டு கற்பாளங்களில் செதுக்கப்பட்டிருந்த பத்துக்கட்டளை அல்லது விதிகளில் புதிய தத்துவங்களையும், புதிய கோட்பாடுகளையும், புதிய எண்ணத்தையும் சேர்க்கப்பட்டிருக்கிறது என்றுதான் சொல்ல முடியும். இப்பத்து கற்பனையும் சமூகத்தை ஒழுங்கு படுத்தவும், ஆசையை மட்டுப்படுத்தவும், ஒழுக்கத்தை நிலைக்கச் செய்யவும் தோன்றிய ஒரு பொது விதியெனலாம். மேலும் கல்வி கற்பதில் முழுக் கவனத்தைச் செலுத்த மக்களைத்தூண்டிய தூண்டுகோல் என்றும் சொல்லலாம். பத்துக் கட்டளையை உருவாக்கினதில் பெண்களும் உதவி செய்திருக்கக்கூடும். ஏனெனில் அந்நாளிலும் இப்பொழுது பெண்கள் எவ்வளவு திறமையடைந்திருக்கிறார்களோ அவ்வளவு திறமையுடையவர்களாக இருந்திருக்கக்கூடும். சகஜமாக ஒரு காட்டின் பெண்களின் விருப்பு வெறுப்புக்கிசைந்தாற்போல் தான் அந்நாட்டின் சட்டங்களும் அமைதல் இயல்பு. இந்த காரணத்தினால் தான் அன்று மிருந்திருக்கக்கூடும் எனநான் நினைக்கிறேன். ஆனால் அக்காலத்தில் (என்? இன்றுகூட சில இடங்களில்) பெண்களுக்கு அரசியல் விவகாரங்களில் பங்கு கிடையாது என்பதை நாம் பல உதாரணங்களால் காட்டலாம். அப்படியிருப்பதால் இப்பத்துக் கட்டளையும் பெண்களின் சம்மதமில்லாமலே ஆண்களின் யதேச்சதிகாரத்தால் தான் தோன்றித் தனமாக இயற்றப்பட்டனவென்றே சொல்லுவேன். ஏனெனில் சட்டங்கள் இயற்றுகிற கூட்டத்தார் தங்களைவிட தேவையிலே அதிகமாகத் துன்புறுபவர்களின் நிலையை தங்களுக்கு அனுகூலமாக வைத்துக்கொண்டு தங்கள் கூட்டத்துக்கு அதிகமான நன்மை கிடைக்கும் வண்ணம் சட்டதிட்டங்களை அமைப்பார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். இத்தகைய வழக்கத்தை நாம் இன்று உலகமெங்கும் பார்த்தும் வருகிறோம். இப்பத்துக் கற்பனையில் இருந்து ஹீப்ரு பெண்களை பொதுவாழ்க்கையிலேயே எவ்வாறு மதித்து வந்திருக்கிறார்கள் என்பதும் ஏன் அக்கட்டளைகள் முழுவதும் ஆண்களாலே எழுதப்பட்ட தென்று சொல்லுகிறேன் என்பதும் கீழே தருகிற உதாரணத்தால் நன்குபுலனாகும். ஒரு

பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல் அப்பத்துக் கட்டளைகளுக்குள் பத்தாவது கற்பனையே போதிய சான்றாகும். அது வருமாறு:— ''உன் அயலானுடைய வீட்டையாவது, அயலானுடைய மனைவியையாவது, அல்லது அவனுடைய வேலைக்காரனையாவது, வேலைக்காரியையாவது, எருதையாவது, கழுதையையாவது அல்லது அவனுக்குச் சொந்தமான எப்பொருளையாவது இச்சியாதிருப்பாயாக'' என்று கூறுகிறது.

சீனாய் மலையிலிருந்து மோசையாவிற்கு அருளப்பெற்றது என்று சொல்லப்படும்படியான பத்துக் கற்பனைகளில் தலை சிறந்த இப்பத்தாவது கற்பனையைக் கண்ணுற்ற எவனும் தன் மனைவியை கேவலம் அறிவற்ற—உயிரற்ற அசேதனப் பொருளோடு ஒத்திட்டிருப்பதை அறியாமலிருக்க முடியுமா? என்பதை நீங்களே யோசித்துப்பாருங்கள். இதனால் யாரும் மதத்தை அவமதித்ததாக நினைத்து விடாதீர்கள். நான் இங்கு எடுத்துக்காட்டுவதெல்லாம் பெண்களைக்கொண்டு ஒரு மதநூலும் எழுதப்படவில்லையென்பதும், எல்லாம் ஆண்களால் எழுதப்பட்டிருக்கின்றனவென்பதோடு பெண்களை இழிவுபடுத்தியும் எழுதப்பட்டிருக்கின்றன வென்பதுமேயாகும்.

நிற்க, தற்காலத்தில் (சிலர்) பெண்களுக்குக் காட்டிவரும் மரியாதையின் அளவு அக்காலத்தில் இல்லாதிருந்திருக்கிறது. தவிரவும் பெண்களுக்கு மத புத்தகங்களில் ஆதிக்கம் வைக்கக்கூடாது என்று அக்காலத்தில் கருதி வந்திருக்கிறார்கள் என்பது நிச்சயமாகத் தெரிகிறது. புதிய ஏற்பாட்டை விட பழய ஏற்பாட்டில் பெண்களைக் குறித்து மிக கண்டிப்பான முறைகளே எடுத்துக் கையாளப்பட்டு வந்திருக்கின்றன. ஒரு கிறிஸ்தவ சுவிசேஷமாவது அல்லது ஒரு நிருபமாவது ஒரு பெண்ணால் எழுதப்பட்டதென்று யாராலாவது எடுத்துக்காட்ட முடியுமா? புதிய ஏற்பாட்டில் சேர்க்கப்பட்டிருக்கிற 4 சுவிசேஷங்களின் ஆசிரியரைப்பற்றியோ அதுதோன்றியவிதத்தைப்பற்றியோ நாளது வரை சரியாக யாராலும் மெய்ப்பிக்க முடியவில்லை. சொல்லவேண்டுமானால் அறியாமை யென்ற அந்த காரத்தில் வழங்கி வந்த கதைகள் எப்படியோ கிறிஸ்தவ கலையில் இடம் பெற்று மத சிரந்தத்தில் தோன்றி வரலாயிற்று. ஏனெனில் அச்சுவிசேஷங்களை எழுதியவர்கள் எந்த காலத்தில்,

எந்த இடத்தில், யார் வீட்டில் எப்போனாவால் அதை எழு தினார்கள் என்று சொல்லத்தகுந்த சரியான ஆதாரம் ஒன் றுமே கிடையாது. எவ்வாறோ அப்புத்தகங்களின் முக வேட்டில் முறையே மத்தேயு, மார்க்கு, லூக்கா, ஜான் என்கின்ற பெயர்களைப் பொறித்து விட்டார்கள். போதகரா கிய ஏசுவிற்கு வழியருந் செய்ததாக சில பெண்களின் ஜீவிய சரிதைகள் இப்புத்தகங்களில் காணக்கிடக்கின்றன. இதனால் ஒருவரும் ஏமாந்து விடாதீர்கள். ஏனெனில், பெண்கள் சக ஜமாகவே சபலபுத்தியை உடையவர்கள் என்பதையும் மேலும் அவர்கள் கட்டுக்கதைகளில் அதிகப்பிரியமுள்ளவர்கள் என்பதையும் மனதில் வைத்துக்கொள்ளுங்கள். ஆதியிலே கிறிஸ்தவ மதத்திலோ அல்லது கிறிஸ்துவின் காலத்திலோ பெண்கள் மத விஷயங்களிலே பிரசாரங்களிலோ ஈடுபட்டிருந் தார்கள் என்பதற்கு ஒரு திட்டுபோன எந்த வகையான தோல்சான்னமாவது இருப்பதாக இதுவரை ஒருவராலும் கண்டு பிடிக்கப்படவே இல்லை. இனியொரு பொருட்டாக எண்ணி கான்குற்றஞ்சொல்லவரவில்லை இது இயற்கை தானே, ஆண் களால்எழுதப்பட்டபுத்தகத்தில் எப்படிபெண்களை சமப்படு த்தினெழுத முடியும்? ஆனால், பைபிள் யூதபெண்கவிகளாலும், ஆசிரியைகளாலும் பாடப்பட்டும் எழுதப்பட்டும் இருக்கிற தென்றும்மேலும் யூதபெண்களிடையால் தொகுக்கப்பட்ட தென்றும் சொல்லக்கூடியபுழுகுபுழுகை எப்படிப்பொறுத்துக் கொண்டிருப்பது? ஆண்களால் தங்களது ஆதிக்கத்தைநிலை நிறுத்துவதற்காக எற்படுத்தப்பட்டதே பைபிள்என்றுசொன் னால் அதில் ஒன்றும் தப்புஇருக்க முடியாதென்றே நினைக் கின்றேன். பெண்கள் இயக்கங்களில் அதிக பற்றுள்ளவர்கள் கூறுவதென்னவென்றால் பெண்கள் ஆண்களைப் போலல்லா மல் இருவிதமான நோக்கத்தை மனதில் வைக்க கடமைப்பட்டி ருக்கின்றார்கள். ஏனெனில் சமூக வாழ்வி லும் பொது வாழ்வி லும் பெண்கள் பிற்போக்கான நிலைமையிலேயே இருந்துவரு கிறார்கள். ஆதலால் இவ்விரு துறைகளிலும் ஆண்க ளைப்போல முன்னேறுவதற்காக நித்திய வாழ்க்கையில் இரு வித பிரச்சினைகளோடும் போராடித் தீரவேண்டியவர்களாய் இருக்கிறார்கள். இவ்விரு துறைகளிலும் உதவுவதற்கு பைபிள் பொருத்தமானதென்று நினைப்பதற்கில்லை. அப்படி இருந்தும் பைபிளை போற்றுபவர்களில்பெரும்பான்மையோர் பெண்களாக இருக்கிறார்கள் என்பதையும் அப்புத்தகத்திற்கு தெய்வீகத்தன்மையையும், அதிகாரத்தையும் கற்பிப்பதில்

பெண்கள் ஆண்களைவிட முன்னணியில் நிற்கிறார்கள் என் பதையும் பார்க்க எனக்கு மிக ஆச்சரியமாயிருக்கிறது.

சகோதரிகளே! மனித சமூக முன்னேற்றத்தில் ஆண் களோடு உங்களுக்கும் சமத்துவம் உண்டு என்பதைஓத்துக் கொண்டு எழுதப்படாத ஓரு நூலை நீங்கள் வெகு மரியாதை யாகவும் வெகு பக்தியோடும் பூஜித்து வருவதை நோக்க உங் களுக்கு அதாவது உங்கள் இனத்தாருக்கு சுயமரியாதை உண் டென்று எப்படி என்னால் நினைக்க முடியும் என்பதை வெகு வணக்கத்தோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

சமய சாஸ்திரங்களில் கடவுள் எப்பொழுதும் ஆண்உரு வத்தோடு தான் இருந்து வருகிறார் என்பதாக எதாவது சொல்லப்படுகிறதா? கடவுள் ஆவிரூபம் என்பதாக கிறிஸ்தவ சித்தாந்திகள் கூறி வந்திருக்கிறார்கள். அதில் அவர்கள் தவறவில்லை. வெகு ஜாக்கிரதையாக இருந்து வந்திருக்கிறார்கள். இங்கிலாந்து சர்ச்சால் வெளியிடப்பட்ட முதல் முப்பத்து ஒன்பது வெளியீட்டிலும் "கடவுளுக்குரூபம் இல்லை, அங்கமுமில்லை, குணமுமில்லை" யென்று எழுதப் பட்டிருக்கிறது. இப்படியிருந்தும் கடவுளுக்கு ஏன் இவர்கள் பால் வேற்றுமை கற்பித்தார்கள் என்பது விளங்கவில்லை. கடவுள் ஆணாம். அவரே எல்லாருக்கும் பிதாவாம். என்னே விந்தை!

இவ்வாறு இவர்கள் கடவுளை ஆணாக உருவகப்படுத்தி யெழுதியிருப்பதால் பெண் உலகத்தை எவ்வளவு இழிவு படுத்தி இருக்கிறார்கள் என்பது விளங்காமற்போகாது. பிதா தன்மையை மிகைபடுத்தி கூறியிருப்பதால் மாதாவின் தன்மையை மறந்து விட்டார்கள் என்றால் மிகையாகாது அதனினும் விசேஷம் பெண்கள் தெய்வீகத் தன்மையிலும் பெருந்தன்மையிலும் ஆண்களைவிட குறைந்தவர்கள் என்று மதித்து வந்திருக்கிறார்கள். ஆனால் காலச் சக்கரத்தின் வேகத்தால் 19-வது நூற்றாண்டில் இருந்து பெண்ணுலகத்தை சிறிது மதித்து வரலாயினர். அதிலும் 20-ம் நூற்றாண்டில் சமூகத் துறை யிலும் நீதித்துறையிலும் அதிகமாகவே மதித்து வருகிறார்கள். ஆகவே ஒருவன் கடவுளை நினைக்கும்போது ஆணாகவும் பெண்ணாகவும் நினைக்க வேண்டிய சங்கடத் திற்கு இலக்காகிறான். ஓரு சமயம், யூதர்கள் காலத்தில்

ஆண் உருவச்சிலைக்குத்தான் அதிக மரியாதை இருந்து வந்த தென்று யாரேனும் எதிர்க்கலாம். உண்மை அது தான். எனென்றால் ஆதியில் மக்கள் காட்டு மிராண்டிகளாய் வாழ்ந்து வந்த காலத்தில் ஆண்கள் தங்களுக்கிருந்த புஜபலத் தால் இளைத்தவர்களை வெரட்டியும் எதிர்த்தவர்களை முறியடித்தும், பகைவர்களைக் கொன்றும் வாழ்க்கையை நடத்துவதற்குத் தேவையான வாசஸ்தலங்கள் கட்டி அதில் குடும்பங்களை காப்பாற்றி வந்ததால் ஆண் ஞுடைய புஜபலத்தால் தான் மனித சமூகமே நிலைத்திருக்கி றதாக அக்காளில் நம்பி வந்தார்கள். இந்த நம்பிக்கை யால் தான் கடவுளையும் புஜபலபராக்கிரம சாலியான ஓரு ஆணாக மதித்து அதற்கு ஏற்றாற்போல் கற்பனா அலங் காரத்தை உண்டுபண்ணி விட்டார்கள். எப்படினில் அவரே இப்பூமியைப் படைத்தார் என்றும், வானத்தைக்கண் டார் என்றும், அதிலே ஆகாச விளக்குகளை ஏற்றினார் என்றும், இப்பாரின் கண் மரஞ்செடி கொடிகளைத் தோற்று வித்தார் என்றும், ஊர்வன, தவழ்வன, நடப்பன, நீர்வாழ் வன, பறப்பன முதலிய ஜீவராசிகளை அமைத்தார் என்றும் கற்பனா சக்தியினால் கதைகட்டி விட்டார்கள். ஓரு காலத் தில் இக்கடவுள் தனது கட்டுக்கடங்காத மக்களை வெள்ளத் தாலும் வெந்தணலாலும் அழித்து வருவதாகவும் ஓரு சிலரை எல்லாரையும் ஆளக்கூடியத் தலைவராக்கி வருவதாகவும் சிலரை அடிமையாக்கி வருவதாகவும், ஓருவனை (ஆபிர காம்) தனக்கு பிரியமுள்ளவனாகக் கருதி வருவதாகவும் நினைத்து வந்தார்கள். கடவுளுடைய லட்சணமாக சேனைத் தலைவனுக்குரியதையே கற்பித்து, அனேக சங்கீதக் காரர்கள் பாடியும் எழுதியும் வந்திருக்கிறார்கள். 'சேனைத் தலைவனுடைய யுத்தங்களைக் குறிக்கும் புத்தகம்' என்ற தலைப்போடு கூடிய கதையொன்று இப்பொழுது மறைந்து விட்டது. அதில் தேவனின் வீரப் பிரதாபங்கள் மலிந்து கிடந்தன. ஏன்? இன்று கூட பள்ளிச் சிறுவர்களுக்கு தினந்தோறும் தெய்வீகத்தன்மை பொருந் திய சேனை வீரனின் வெற்றிகளை அதாவது எகிப்தை அழித்ததைக்குறித்தும் ஆமல் கைட்டையும் காண கைட்டை யும் ஜயங்கொண்ட வீரத்தைக் குறித்தும்; சேனக்கரீப் என்ற ஊரை பாழாக்கின தீரச் செயலைக் குறித்தும், ஓரு சமூகத் தையே அடியோடு கொலை செய்த வீரதீர பராக்கிரமத்தைக் குறித்தும் போதிக்கப்பட்டு வருவதில்லையா? ஏன் அவ் வளவு தூரம் போகவேண்டும்? ஜிதோ அவர்கள் (கிறிஸ்த

வர்கள்) பெரிய பொக்கிஷமாக கருதி வருகிற பைபிளின் கடைசிப்புத்தகமாகிய 'வெளிப்படுத்தினவிசேஷம்' என்றதலைப்புடைய புத்தகத்தின் 19-வது அத்தியாயத்தில் 11 முதல் 16 வரை உள்ள வாக்கியங்களை கீழே கூறுகின்றேன். அதில் மேசையாவாகிய கடவுளை எத்தகைய சூராதிசூரன் என்றும் சேனைத்தலைவன் என்றும் வர்ணித்திருக்கிறார்கள் என்பது விளங்கும்.

"பின்பு, பரலோகம் திறந்திருக்கக் கண்டேன்; இதோ ஒரு வெள்ளைக்குதிரை காணப்பட்டது; அதன்மேல் ஏறியிருந்தவர் உண்மையும் சத்தியமு முள்ளவரென்னப்பட்டவர்; அவர் நீதியாய் நியாயந்தீர்த்து யுத்தம் பண்ணுகிறார். அவருடைய கண்கள் அக்கினிஜ்வாலையைப் போலிருந்தன. அவருடைய சிரசின் மேல் அநேக கிரீடங்கள் இருந்தன; அவருக்கேயன்றி வேறொருவருக்குந் தெரியாத ஒரு நாமமும் எழுதியிருந்தது. இரத்தத்தில் தோய்க்கப்பட்ட வஸ்திரத்தை தரித்திருந்தார். அவருடைய நாமம் தேவனுடைய வார்த்தை என்பதே. பரலோகத்திலுள்ள சேனைகள் வெண்மையும் சுத்தமுமான மெல்லிய வஸ்திரந்தரித்தவர்களாய், வெள்ளைக் குதிரைகளின் மேல் ஏறி அவருக்கு பின் சென்றார்கள். பிற ஜாதிகளை வெட்டும்படிக்கு அவருடைய வாயிலிருந்து கூர்மையான பட்டயம் புறப்படுகிறது; இரும்புக்கோலால் அவர்களை அரசாளுவார்; அவர் சர்வ வல்லமையுள்ள தேவனுடைய உக்கிரகோபமாகியமதுவுள்ள ஆலையை மிதிக்கிறார். ராஜாதி ராஜா, கர்த்தாதி கர்த்தா என்னும் நாமம் அவருடைய வஸ்திரத்தின் மேலும் அவருடைய தொடையின் மேலும் எழுதப்பட்டிருந்தது."

சகோதரிகளே! மேலே கூறிய வர்ணனைகளிலிருந்து அவரிடத்தில் நீங்கள் கண்டு மகிழக்கூடிய குணம் என்ன என்பதை நீங்களே யோசித்துப்பாருங்கள். ஒரு பெரிய போரிற்கு தயாராயிருக்கிற சுத்த வீரனுக்குரிய லட்சணமும் மூஸ்தீப்பும் என்பதைத் தவிர, இவரிடத்தில் வேறு என்ன காக்கும் தன்மையோ அல்லது படைக்கும் தன்மையோ இருக்கிறது என்பதைச் சிந்தித்துப்பாருங்கள். அது அவ்வாறே இருக்கட்டும். எனெனில் உங்களில் சிலர் வீரச்செயல்களைக் காணப் பிரியமுள்ளவராயிருக்கலாம். இருந்தாலும், உண்மையிலே காத்தல் தொழிலையும் மீட்புத்தொழிலையும் உடைய ஒருவன், மேலே சொல்லப்பட்ட போர்க்குணத்தைத்

பெற்றிருந்தால் எப்படி இரு குணங்களும் ஒரே சமயத்தில் பொருந்தும்? இரண்டாவது படைத்தலுக்கும் காத்தலுக்கும் இவ்வீரத்தனத்தைத் தவிர வேறு மார்க்கமில்லையா? எல்லா இராஜ்ஜியங்களின் சக்திகள் ஒன்றாகத்திரண்டு வந்தாலும் வெல்லமுடியாத ஒரு தாயின் அருளை கடவுளின் லட்சணமாகக் கற்பிக்கக்கூடாதா? பெண்ணைருத்தி ஆளுவதைப் போல் எவராலும் ஆளமுடியாது. இவ்வுலக வாழ்க்கையில் இருந்து மாதர்களை ஒரு நாள் மட்டும் அழித்துவிடுவதென்று வைத்துக்கொள்ளுங்கள். அப்பொழுது எந்த ஜீவராசியாவது பிழைத்திருக்குமா என்பதை நினைத்துப் பாருங்கள். இப்படியிருக்க, ஏன்! கடவுளுக்கு ஆண் குணத்தை நீக்கி பெண் குணத்தைக் கற்பித்திருக்கக் கூடாது? அல்லது தற்காலத்தில் பெண்களில் சிலர் இவ்வுலகமானது பெண்களால் தான் இயங்கி வருகிறதென்றும் அவர்களுடைய சக்தியில்லாதிருக்குமேயானால் எல்லாம் சீர்குலைந்து போகும் என்றும் நினைத்து வருவது போல் எண்ணுவதும் பொருந்துமா என்பது நீங்களே முடிவு செய்ய வேண்டியதாகும்.

பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்ட சிப்பாய் கடவுளின் குண லட்சணம் தற்கால மக்களை திருப்தி படுத்தக்கூடியன வாயில்லாதிருக்கையில் புதிய ஏற்பாட்டில் காணப்படுகிற முக்கிய போதனைகளில்அது இன்றும் மலிந்து இருப்பதைகாம் பார்க்கலாம். ஒரு குடும்பத்தை உற்பத்தி செய்ய தாயும் தந்தையும் இன்றியமையாதவர்களாயிருக்கிறார்கள். தளர்ந்த குடும்பங்களையும் நசித்த குடும்பங்களையும் சீர்படுத்தி தழைத்தோங்கச் செய்ய தாய் தந்தையர்கள் எவ்வளவு அவசியம் என்பதும் உங்களுக்குத் தெரியும். இவ்வாறு இருந்தும், கிறிஸ்தவ மதம் இவ்வளவு முக்கியமான விஷயத்தில் கவலையீனமாகவும் சிரத்தையற்ற தனமாகவும் இருந்து வருகிறது. இந்த மதத்தில் கூறப்படுகிற இரக்ஷகர் தமது வாழ்க்கையில் பெண்ணின் உதவியில்லாமலும், உதவியை நாடாமலும், பெண்களிடத்தில் அன்பு இல்லாமலும்— என் பெற்ற தாயிடத்தில் கூட அன்பைக் காட்டாமலும் இருந்து வந்தவராகக் காணப்படுகிறார். இன்று உலக வாழ்க்கையில் எந்தத்துறையைஎடுத்துக்கொண்டாலும்பெண்களின் உதவியில்லாமல் எக்காரியமும் முற்றுப்பெறாது என்றும் சாத்தியமாகாதென்றும் உலகமே ஒப்புக்கொண்டாய்விட்டது.

இதை உணர்ந்துதான், தற்காலத்தில் ஆலைகளை தணிக்கை செய்வதிலும், எளியோர்களைப் பராமரிப்பதிலும், கல்வி போதிப்பதிலும், தர்ம பரிபாலனத்திலும், அரசியல் நிர்வாகத்திலும் பெண்களைச் சேர்த்து வருகிறார்கள் போலும். இம் மாறுதல், அழிவின் முற்போக்கா அல்லது 19-வது நூற்றாண்டின் அதிசயங்களில் ஒன்றுளன்று எண்ணுவதா? மனித சமூகம் கடைத்தேறுவதற்கு இருபாலர்களுடைய சக்தியும் ஒன்று சேர்ந்தால்தான் முடியும் என்று உணர்ந்து இவ்வாறு செய்கிறார்கள் என்பது விளங்கவில்லையா? இராணியில்லாத இராஜனைப் போலவும், துணைவியில்லாத வீரனைப் போலவும், தேவதையில்லாத தேவனைப்போலவும் ஏசுவைப் பற்றிய கிறிஸ்தவ கதை கூறுகிறது. உலகத்தில் காண்கின்ற அறியாமையையும் பாவத்தையும் போராடி வெல்லும் சக்தி ஆண்களுக்குத்தான் இருக்கிறது என்று உலக வழக்கில் சொல்லுவது உண்டு. ஒரு வேளை அக்கூற்றின்படி ஆணுக்குப் போராடும் வல்லமை வேண்டுமானால் இருக்கக்கூடுமேயொழிய நாடாளும் வல்லமை உண்டு என்று சொல்லுவதற்கில்லை. அதற்குஅவர்கள் தகுதியுமல்ல. பெண்ணின் உதவியில்லாமல் உக்கிரமாகச் சண்டை செய்யலாம், காட்டுமிராண்டித்தனமாக தாக்கலாம். ஆனால் பெண்ணில்லாமல் அதன் பயன் பயனற்றதும், அறிவற்றதும் சாரமற்றதுமாய் விடும் என்பதில் என்ன சந்தேகம்? ஏசுவைப் போன்ற துர்அதிர்ஷ்டசாலியை பெண்ணொருத்தியால் சந்தோஷப்படுத்த முடியாதா? குருடர்களையும் பசித்தவர்களையும் போஷிக்க முடியாதா? அவர் (பெண்)களால் சிறுவர்களை நேசிக்கவும் பரலோக இராஜ்ஜியத்திற்கு அழைத்துச் செல்லவும் முடியாதா? இரட்சகர் என்று சொல்லும்படியான ஏசுவின் பாதங்களை கழுவுதலையும், உடம்பில் எண்ணெய் தேய்த்தலையும் தவிர, வேறு கைங்கரியம் அவருக்கு செய்ய பெண்கள் யோக்கியதையற்றா போய்விட்டார்கள்? ஏசு நாதர் 12 சீடர்களை தெரிந்தெடுத்தாரே, அவர்களில் ஒரு பெண்ணாவது உண்டா? ஏன், பெண் ஒருத்தி அந் நாட்டில் இல்லாமலா அற்றுப் போய்விட்டது? அவரைக் காட்டிகொடுத்த யூதாஸ் எஸ்கரியத்தை விட நன்றிவிசுவாசமுள்ள, ஞானமுள்ள, ஒழுக்க

முள்ள கன்னிப் பெண் ஒருத்திகூட கலிலேயா நாட்டில் அவரது திர்ஷ்டியில் படாமலா போய் விட்டாள்? ஏசு வேசி களின் கட்பாளன். அப்படி இருந்தும் அவருடைய பொது வான ஒழுக்கத்தில் எவ்வளவோபரிசுத்தத்தன்மையடைந்ததா கக் காட்டப்பட்டிருக்கிறது. இத்தகையவர் தொடர்துகிடக்கின்ற சகோதரியின் மனதை எப்படி சரிவர அறிந்திருக்கக்கூடு மென்று நினைக்கிறீர்கள்? மேலும் அச்சகோதரிகளின் தாணத்தின் ஆழத்தையும் துக்கத்தின் அளவையும் அவர் அறிந்திருந்தார் என்று நீங்கள் எண்ணுகிறீர்களா? தாய்க்குரிய அந்தஸ்தையும் வீட்டையும் இழந்து ஆற்றொ ணாத் துயரத்தில் ஆழ்ந்து புலம்பித் தவித்த அச்சகோதரி களின் உள்ளக் கருத்தை எங்ஙனம் கண்டிருப்பார்? வேத னையுற்ற மனதையறிவதற்குப் பரந்தமனதையுடைய பெண் ணால்முடியுமேயன்றி இவ்வேஷுவால் முடியுமா என்பதை போ சியுங்கள், எனெனில் பெண்கள் தான்பெண்ணுள்ளத்தைஉணர் தல்கூடும் அல்லவா? ஆண்களும் பெண்களும் சரிநிகராக இருவரும் ஐக்கியப்பட்டு இவ்வுலக காரியங்களை நடத் துவதற்கு உலகம் பக்குவமடையவில்லை என்றும், தரு ணம் இதுவல்லவென்றும் நீங்கள் ஒரு வேளை பதில் சொல்ல வருவீர்கள். அவ்விதம் கூறினாலுங்கூட இப்பொழுதிருக்கிற (19-வது நூற்றாண்டில்) பெண்கள் இபக்கத்தைவிட மிகமிக பிற்போக்கான—நீதியற்ற—ஒரு தலை பக்ஷமான நியாயத்தையே கிறிஸ்தவ மதம் கொண்டிருக்கிறது. ஆகவே பெண்ணுலகம் முன்னேற வேண்டுமானால், பெண்கள் ஆண்க ளோடு சரி நிகராய் இருக்கவேண்டுமானால், எல்லாத்துறை களிலும் பிரகாசிக்கவேண்டுமானால் மதத்தை கம்பினால் முடி யாது. அதனிலும் பெண்களின் ஒழுக்கத்தைக் குறித்தோ, பூர்ண லக்ஷணத்தைக் குறித்தோ, கிறிஸ்தவ சுவிசேஷங்களி லோ மதபுத்தகங்களிலோ சரியான நீதி கிடைக்கும் என்று எதிர்பார்த்தால் நீங்கள் ஏமாந்து போவீர்கள் என்பது நிச்ச யம்.

மானங்கெட்டதன்மை போனால்
மனிதத்தன்மை தானே வரும்.

(கைவல்யம்.)

கடவுள் எல்லாருக்குமுண்டு. கடவுள் எதற்காக? சுகத்தைக் கொடுக்க. சுகமெங்கிருக்கிறது? அறிவிலிருக்கிறது. அறிவெங்கிருக்கிறது? ஆலோசனையிலிருக்கிறது. ஆலோசனை எங்கிருந்துவரும்? புத்தியிலிருந்துவரும். ஆகவே சுகம் வேண்டுமானால் விசாரிக்கறியும் புத்தியை வளர்க்கவேண்டும்.

"அறிவினைக்கறிவாகி யானெக்காமமான ஆதியே" என்றும், "அறிவிற்கறிவாபறிவிப்பா" என்றும், "விண்ணிருந்த வெளியா யென் மனவெளியில் கலந்தறிவாய்" என்றுமே நம் பெரியவர்களும் கடவுளைச் சொல்லிப்போனார்கள்.

சுயமரியாதை இயக்கமென்றால், கடவுளை இல்லை என்று சொல்வது என்று பலர் சொல்லுகிறார்கள். கடவுளென்றால் என்ன? எப்படி இருக்கவேண்டும்? எப்படி இருந்தால் கடவுள் என்கின்ற பெயருண்டு என்பதைவகளைப்பற்றி ஆலோசித்துப் பார்க்காதவர்களும், கடவுள் பேரைச் சொல்லி காலட்சேபம் செய்கிறவர்களும், கடவுளைக் காட்டி ஜாதியாலும், மதிப்பாலும், பொருளாலும் லாபமடைகிறவர்களும், தாங்கள் செய்யும் பாவத்திற்குக் கைக்கூலி வாங்கக் கடவுளை ஏற்படுத்திக் கொள்ளுகிறவர்களும், தாங்கள் செய்த அக்கிரமங்களுக்குக் கடைசி காலத்தில் கடவுளைக் காணப் புறப்படுகிறவர்களும் "சுயமரியாதைக்காரர்கள் கடவுள் இல்லையென்று சொல்லுகிறார்கள்" என்று சொல்லுவது விவேகத்துடன் ஒட்டினதல்ல.

ஓட்டுகளைப்பற்றியும், ஓட்டர்களைப்பற்றியும், மெம்பர்களைப்பற்றியும், பிரசிடெண்டுகளைப்பற்றியும், நமது கடவுளுக்கு முன்னுக்கிரியாதது, பின்னுக்கிரியாதது தெரிந்துகொள்ள அவருக்குச் சொல்லுவாருமில்லை. என்றாலும் திருப்பதி பெருமாளும், பழனி முருகனும் தங்களை மெம்பர்களாகவும் பிரசி

டைந்துகளாகவும் ஆக்கியதற்கு அருள்புரிந்தவர்களென்று ஆராதனை அபிஷேகம் செய்யப்போகிறார்களேயல்லாமல் ஜன சமூகத்திற்கு நன்மை செய்வதில் கவனம்பற்றவர்களாகவே யிருக்கிறார்கள். எனெனில் தெய்வத்திற்குச் செய்வதே விசேடமெனப் பழக்கப்பட்டிருக்கிறார்கள்.

இப்பொழுது உலகத்தில் சொல்லப்பட்டுள்ளாராலும் அங்கீகரிக்கும்படியான நியாயம், உண்மை, வீடுகளை என்ற ஆதார சங்கதிக்காக நம்பும்படியாய் மனிதர்களுடைய ஜீவன், இலக்கியம், சாஸ்திரம் கலை, வர்க்குடிக்கனம் இவைகளெல்லாம் முழு வெள்ளமாகப் பாய்ந்து, மனுஷ ஜாதியை அவமானப்படுத்தி அதற்கதிகமே பொய் மதாபிமானம், பொய்பக்தி, பொய் தேசாபிமானம் இவைகளின் கர்வத்தை மெல்லாம் பாழ்படுத்தும் ஜனநாயகத்துவம் கடவுள் என்னும் பொருளுக்குள்ளிருக்கவாம்; என்றாலும் நாம் கும்பிடும் தெய்வங்களில் எந்தத் தெய்வத்திற்கும் தெரியாது. அவை அவைகளின் அலுவலாகத்தில்லை. அந்தத் தெய்வங்கள் சொன்ன சாஸ்திரங்களிலுமில்லை. தெய்வ அவதாரங்களான ஆசாரிகள், தெய்வங்களாகிப் போன பக்தர்கள், தெய்வ அருள்பெற்ற பண்டிதர்கள் இவர்கள் செய்த விபரங்களிலுமில்லை. ஜாதிக்குரவர், சந்தானக்குரவர், சமயக்குரவர், சாத்திரக்குரவர், சர்வ வல்லபக்குரவர், சற்சங்கக்குரவர் முதலிய குரவர்கள் சொன்ன தனித்தனி சாத்திரங்களிலுமில்லை. இப்பொழுது நமது தெய்வங்களின் பிரதிநிதிகளான லௌக குருக்கள், மகுந்துக்கள், மடாதிபதிகள் இவர்களுக்கு இப்பொழுது சொல்லப்படும் ஜனநாயகத்துவம் அர்த்தமாவதேயில்லை. அவர்கள் மண்டையில் பதிவதுமில்லை.

நமக்கு தெய்வம், ஆச்சாரி, குரு, புரோகிதன் இவர்களை விட்டால் மோட்சத்திற்கு வழியில்லை, தெய்வத்தை விட்டால் நரகம், ஆச்சாரியை விட்டால் பாவம், குரு உபதேசத்தை விட்டால் தீமை, புரோகித கர்மத்தை விட்டால் புண்ணியமில்லை. இந்த நிர்ப்பந்தமான நிலையிலிருக்கும் நாம் உலகப்பொது விதியாலும், உலகப் பொதுக் கடவுளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஜனநாயகத்துவத்தை விரும்பி நிற்கிறோம். இனி அதை வளர்க்க முடியாது. கடவுள் கட்டளை என்றும், சமயசாஸ்திரத்தியமென்றும், முன்னோர் நடந்த பழக்க வழக்க வழியென்றும் ஏய்க்கவுமாகாது. வாய்ச்சாமர்த்தியத்தினால் வழக்கிட்டு ஒரு மூலையில் ஒதுக்கி விடவும் சாத்தியமில்லை. எனெனில்

இந்த உலகத்தில் இப்பொழுது ஜனத்தின் ஜீவசக்திக்கும், ஜாதியின் நிபந்தனைகளுக்கும் போர் நடக்கிறது. அப்போரில் பார்வைக்குப் பல்முள்ளன போல் தோன்றும் காரணத்தால் அழிவதற்கு அசாத்தியமாகிய பழங்காலத்து மத நம்பிக்கைகள் தம் தம் கொள்கைளை உண்மையெனச் சாற்றிவந்த சமப்வாதிகளின் கட்சி வாதங்கள் எல்லாம் தற்கால பௌதீக விஞ்ஞான சாஸ்திரப் பிரகாசத்தின் வன்மையால் நிர்த்தூளிபாய் வருகின்றது போல மனுஷிய பொதுஜன உத்தம லட்சியங்களைத் தடுக்கும் ஜாதியின் திறமையாகிய கல்நெஞ்ச சம்பிரதாயமும் மொத்துண்டு படுசூரணமாய் மறைந்து வருகின்றது.

இந்நிலைமையிலிருக்கும் உலகத்தில் நமக்கு ஜனநாயகத்துவத்தின் பொறுப்பும் வந்துவிடும். நாம் அதை தெரிந்து பேசி சபையில் ஒப்புக்கொள்வதுபோலவே அனுபோகத்தில் நடந்துகொள்ள தேர்ச்சியடையவும் வேண்டும். அப்படியல்லாவிட்டால் ஜனநாயகத்தும் வந்தும் உபயோகமில்லை; வருவதும் கஷ்டம். நம்முடைய விஸ்வாசம், பக்தி, எண்ணம், செய்கை, நம்பிக்கை முதலியவைகளெல்லாம் தெய்வம், ஆச்சாரி, குரு புரோகிதன், பழைய பழக்க வழக்கம் இவைகளிலேயே பற்றுடையவைகளாக விருக்கின்றன. அவர்களுக்கு இந்த ஜனநாயகத்துவத்தைப் பற்றித் தெரியாது. அவர்களுடைய எண்ணம், கொள்கை, அனுபோகம் முதலியவைகளுக்கு அவை நேர்விரோதம். அவர்களை விட்டால் நமக்கு கதிமோட்சமில்லையென்று நினைத்துக் கொண்டுமிருக்கிறோம். இந்நிலைமையை உடைய நாம் ஜனநாயகத்துவத்தின் பொறுப்பை வைத்து நடத்துவது எப்படி? நடத்த முடியுமா? நடத்துவதாயிருந்தால் ஒன்றோ நமது தெய்வம், ஆசாரி, குரு, புரோகிதன் இவர்களுக்கு இப்பொழுது ஜனநாயகத்துவத்தைக் கற்றுக்கொடுத்து அதன்வழி நடக்கச் செய்யவேண்டும். அல்லது அவர்களை விட்டு விலகவேண்டும். இந்த இரண்டில் ஒன்றைச் செய்யாவிட்டால் ஜனநாயத்துவத்தை எப்படி நடத்த முடியும்? என்பதை உலகத்து அறிஞர்களே சொல்லுங்கள். கோயிற் கட்டுக்குக் குருட்டுத்தனமாகக் கீழ்ப்பட்டிருந்த தலையை வெட்டித் தன் மதிப்பைக் காக்கக் கற்ற ஜாதியாரே உலகில் தலை தூக்கி ஜனநாயகத்துவத்தை நிலை நிறுத்தினார்கள் என்பதை உலக சரித்திரம் படித்தவர்கள் உணர்வார்களே.

வட்டமேஜை மகாநாட்டில் தோழர் அம்பேத்கார், தோழர் மாளவியாவைப்பார்த்து "உங்களைப்போல் நானும் படித்த

வன்கான், என்னைவிட்டுத் தீண்டாமை மட்டும் போகவில்லை யே" என்றுகேட்டார். தோழர்மாளவியா கான்கொண்டுபோன களிமண்ணையும், தண்ணியையும் நினைத்து மயங்கினார். தோழர் காந்திஜி முன்னமே நமது ஜனங்களுக்குச் சொன்னோ மே, பாவிகள் கேட்கவில்லையே என்று அயர்ந்தார். தோழர் சீனிவாச சாஸ்திரி அந்தப் படலத்தில் திக்குமுக்காடி ஆடித்த படலத்தில் ஆனரபினாய் வந்தார். தோழர் எ. ரெங்கசாமி அய் யங்கார் காந்திஜி மடியிலிருந்திறங்கி கட்டுரை எழுதும் வேலை யில் கவனத்தைத் திருப்பிக்கொண்டார். தோழர் ராமசாமி முதலியார், தோழர் பாத்ரோ மற்றுமுள்ள இந்து சமூகப் பிர முகர்களெல்லாம் அடங்கி ஒடுங்கி அங்குமிங்கும் பார்த்தார்கள். இவர்களெல்லாம் நமது தேசத்தில் படித்தவர்கள், பிரமுகர்கள், தலைவர்கள், பிரசங்கிகள், ஏகாதிபத்தியத்தில் நமது தேசத்துப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளுகிறவர்கள். இவர்களெல்லாம் அந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல கடவுளை நினைத்தார்கள்; கையைப் பிசைந்தார்கள்; சாஸ்திரத்தை எண்ணினார்கள்; ஆங்கிலேயர் முகத்தைப் பார்த்தார்கள்; தங்கள் முகத்தைத் தரைக்குக் காட்டினார்கள்; தாங்கள் வந்த காரியத்தை நினைத் தார்கள்; வாயை மூடி முகம் சோர்ந்து மூக்கைச் சிந்தினார் கள். என்றால் அந்தக் கேள்வியின் உண்மையான ஜனநாய கத்துவத்தின் சத்தியம் எவ்வளவு மேன்மையுடைய தாயிருக்க வேண்டுமென்பதை ஆலோசித்துப் பாருங்கள். தெய்வங்களை த்தனை, சாஸ்திரங்களைத்தனை, சமயவாத தர்க்கங்களைத் தனை, மந்திரங்கள், மார்மங்கள், ஆசாரங்கள், அனுஷ்டானங் கள், பூசைகள் எத்தனை? அத்தனையும் ஓடுகிறவனைத் துரத் தவும், ஒன்றுமறியாத ஏழைகளைத் துன்புறுத்தவும், புண்ணிய லோகமென்று சொல்லிப் பொருள் பறித்து வயிறு வளர்க்கவும், வந்தவர்களுக்கெல்லாம் அடிமையாக ஆளாக்கவும் இங்கு உபயோகப்பட்டு வந்தேயல்லாமல், மனிதரும் மனிதத் தன் மையுடையவரும் இருந்த அந்த சபையின் ஒரு கேள்விக்கு உபயோகப்படவில்லை. இனியும் அந்தக் கேள்விக்கு இட மளித்துக்கொண்டிருந்தால் மானங்கெட்டு மதிகெட்டுப் போவ தேயல்லாமல் வேறு என்ன நன்மை உண்டாகும்?

"அந்தத் தீண்டாமை என்னும் கொடுமையின் பாவத்தி னால்தான் நாங்கள் இந்த சபையில் வாய் பேசமுடியாமலும் உலக சபையில் எங்கள் பெருமை, சிறுமையடையவும் ஏது வாயிருக்கின்றது. அதை நாங்கள் உணர்ந்துகொண்டோம். அதைப்போக்கப் பிரயத்தனமும் செய்கிறோம்" என்று தோழர் காந்தி ஒருவாறு சமாதானம் சொல்லிவிட்டு அதோடு அவர்

திருப்தியடையாமல் ஐரோப்பாவைவிட்டு பம்பாய் வந்திறங்கின உடனே மானங் கெட்ட தன்மையான தீண்டாமையை காம் விட்டுவிடவேண்டும் என்று நமக்குச் சொன்னார். மானங்கெட்ட தன்மையை விட்டுவிட்டால் தான் மனிதத் தன்மைவரு மென்றார். தோழர் காந்தியைப் போற்றுகிறார்கள், பூசிக்கிறார் கள். அவர் சொன்னதை நினைத்து ஒங்கிகரித்து அதற்கு வேண்டிய காரியங்களில் கவனம் செலுத்துகிறவர்கள் சொற்ப மே.

வட்டமேஜை மகாநாட்டிற்குப்போன நமது பிரதிநிதிகள் தீண்டாமையென்னும் கொடுமையை நம் வைத்துக்கொண்டி ருந்ததினால் மானம்கெட்டுப் போனார்கள் என்பதைக்கொண்டு தோழர் காந்திஜி பம்பாய்வந்து இறங்கியவுடனே தீண்டாமை யென்னும் மானங்கெட்டதனத்தைவிட்டு விடுங்களென்று நமது ஜனங்களுக்குச் சொன்னார். வட்டமேஜை மகாநாட்டில் மானங்கெட்டால் சைவத்திற்கு, வைஷ்ணவத்திற்கு, சங்கராச்சா ரிக்கு, மகந்திற்கு மற்றுமுள்ள, ஆச்சாரி, குருக்கள், புரோகிதர் பக்தர்கள் இவர்களுக்கென்ன? இவர்கள் சிஷியர்களுக்குத்தா னென்ன? "மானாபிமானத்தை விட்டுவிடு, மானாபிமானத்தை வைத்துக்கொண்டு வாழாதே" என்றல்லவோ இவர்கள் உபதே சங்களிருக்கின்றன. மானாபிமானமில்லாதவைகளைக் கட்டி அழுது அவர்கள் கடாட்சமும் பெறக் காத்துக்கொண்டிருக்கும் நாம் மானாபிமானத்தோடு வாழுவதெப்படி? மனிதத் தன்மை வருவதுதானெப்படி? மானங்கெடாமலிருக்க தோழர் காந்திஜி மார்க்கம் சொல்லுகிறார். மானம் கெட்டுப்போக நமதுகுரு வும் ஆசாரிகளும் பண்டிதர்களும் உபதேசம் செய்கிறார்கள். இதனால்தானோ தோழர் காந்திஜிக்கு இந்த சமய சாஸ்திரம் தெரியாதென்று ரூம்பகோணத்துப் பார்ப்பனர்கள் சொன் னார்கள்.

நம்முடைய நாட்டை நாமே ஆண்டுகொள்வது நம்முடைய பிறப்புரிமை என்று ஆங்கிலேயர்களிடம் சொல்லக் கற்றுக் கொண்டதுபோல தாழ்த்தப்பட்டிருக்கும் ஜாதியார்களும் அவ ரவர்கள் நாட்டிலுள்ள எல்லா உரிமைகளும் அவர்களின் பிறப் புரிமை என்று நாமேன் தெரிந்துகொள்ளவில்லை? ஆங்கிலேயர் களிடம் நமது பிறப்புரிமையைக் கேட்கிறோம். நம்மவர்களின் பிறப்புரிமையை மறுக்கிறோம். சுதந்திரத்தைக் கொடுப்பதற் குத் தயாராகஇல்லாதவனும் சுதந்திரத்துக்கு அருகனல்லன் என்கிற நியாயம் நமக்குப் புலப்படவில்லை. மற்றநாடுகளில்

உலகப் பொதுக்கடவுளின் தன்மையையும், உலகப் பொதுவிதி யின் நியாயத்தையும் உணர்ந்து அங்கீகரித்து நடக்கும் ஏற்பாட் டில் அந்நாட்டுச் சமயப் புரோகிதர்கள், தெய்வம், உலக விவ காரஅறிஞர்கள் குறுக்கிடுவதில்லை. நமது நாட்டிற்கோ உலகப் பொதுத் தெய்வத்தன்மைகளைக் கற்றுக்கொடுக்கவில்லை. உலகப் பொதுவிதியின் விவகாரங்களைச் சொல்லிவைக்கவு மில்லை. ஆனதால் உலகப்பொது விதியும், உலகப் பொதுக் கடவுள் தன்மையும் உணராத நமதுநாட்டு சமயவாதப் புரோகி தக் குருக்களும் விவகாரப் பொறுப்புள்ள ஜனங்களும்குறுக்கிட்டு உண்மையையும் நியாயத்தையும் தடைப்படுத்துகிறார்கள். இதற்கு ஆதாரங்களான கடவுள் சாஸ்திரங்களெல்லாம் ஒழிந்து போக வேண்டுமென்று சுயமரியாதை இயக்கம் சொல்லு கின்றது. அதைக் கேட்டு "சுயமரியாதை இயக்கம் கடவு ளில்லை என்கிறது, சமயத்தைக் குற்றம் சொல்லுகிறது" என்று சமயவாதிகள் சொல்லுகிறார்கள். எந்த சமயவாதிகள் ஸ்பென்சர் சோடா குடிக்க ஆசைப்படாதவர்கள்? அதற்கு எதாவது தடைகளுண்டா? இல்லையே. அப்படியிருக்க மற்றவர்களை சோற்றுக்கடையிலும் தண்ணீர் கிணற்றிலுமேன் தடைப்படுத்த வேண்டும்? எந்த சமயவாதிகள் தங்கள் பிள்ளை களை ஆங்கிலேய நாட்டிற்கு அனுப்பி ஆங்கிலப் பட்டம் பெற் றுவர ஆசைப்படாதவர்கள். மற்றவர்கள் பிள்ளைகளை போர்டு பொதுப்பள்ளியில் படிக்க ஏன் தடைசெய்யவேண்டும்? ஆங்கி லேய சயன்ஸ் படிக்க ஆசைப்படாத சமயவாதிகளுண்டா? அதற்குத் தடையுண்டா? நமது ஞானசாஸ்திரத்தைப் படிக்க மற்றவர்களை ஏன் தடைப்படுத்தி வைத்திருக்கவேண்டும், இந் தத் தடைகளெல்லாம் விலகவேண்டுவது நியாயமானால், இது ஜனநாயகத்துவத்திற்கு விரோதமென்றால் அதற்குக் குறுக்கே நிற்கும் சமயங்களும், சாஸ்திரங்களும் அதற்கு ஆதாரமான குறு கிய மானோபாவத்தை உடைய கடவுளும் ஒழியவேண்டுவது நியாயந்தானே?

"சாதிகுலம் பிறப் பிறப்புப்பந்தமுத்தி யருவுருவத்தன்மை நாமமேது மின்றியெப் பொருட்குமெவ்விடத்தும் பிரிவறநின்றி

யக்கம் செய்யும் சோதியாம்" கடவுளைச்சுயமரியாதையியக்கம் குற்றம் சொன்னதில்லை; சொல்லவந்ததுமன்று.

"விஞ்ஞானறந்த வெளியாய்ம னவெளியிற் கலந்தறிவாம்" கடவுளைக் குற்றம் சொன்னவர்கள் யார்? இல்லை யென்று சொன்னவர்கள் தான் யார்? "பகர்வன வெல்லாமாகியல்ல வாகிப்பரமாகிச் சொல்லரிய பான்மைபாகித் துகளறு சங்கற்ப விகற்பங்களெல்லாம்தாயாத வறிவாகிச்சுத்தமாகி நிற்கும்" கடவுளைச் சுயமரியாதை இயக்கம் இல்லை என்று சொன்னதேயில்லை.

பூணூல்கலியாணம் செய்து பூணூலணிந்து பார்ப்பார ஜாதியாக்கி வெளியில் வந்தால் தீட்டென்று அதற்குச்சுத்தியுமிசெய்து பெண்சாதி பிள்ளைகளோடிருந்து தாசி வீட்டிற்குப்போய் பெண்டாட்டி கோபித்து மறுநாளும் தாசி வீட்டிற்குப்போய் மட்டையடிபட்டு மறுநாள் பக்கர்களுக்குக் காட்சிகொடுத்து பதிவிரதைகளின் கற்பை அழிக்கப் பலவேஷமெடுத்து தான் செய்த வேதத்தில் கொலை, களவுகளை எற்படுத்தி அதை மறுத்தவர்களை கழுவில்போட உதவிசெய்து, தான் சொன்ன வேதத்தைப் பார்ப்பார்கள் தவிர மற்றவர்கள் கேட்டால் காதில் ஈயத்தைக்காச்சி ஊற்று, வாயில் சொன்னால் ஒன்பதங்குலம் இரும்பைக் காச்சித் தொண்டையில் செலுத்து, சூத்திரன் என்கிற அடிமைகளுக்குப் பிராமணன் தெய்வம், பிராமணர்களுக்கு நான் தெய்வம், அவர்கள் பாதம் என் சிரசில், அந்தணர்களை வணங்குவதும் அவர்களுக்கு ஊழியம் செய்வதுமே மற்றவர்கள் தொழில், அந்தணர்களுக்கு நானடிமை. அவர்கள் வயற்றைப் பெரிதாக்கி இரண்டில் பெருக்கி நிறைத்து வப்படம், வற்றல், வாழைப்பழம், வடை, லட்டு இவைகளைத்துண்டில் கட்டி எவன்கொடுத்துக்கொண்டே யிருக்கிறானோ அவன் குடும்பம் குட்டிச்சுவராகப் போனாலும் மோக்ஷத்திற்கனுப்பிக்கொண்டே யிருப்பேன், என்னண்டை பறையர் வந்தால் அக்கினியில் குழித்துத்தான் வரச் சொல்லுவேன், அல்லாதவர்களை அந்நிய கடவுளிடம் போகச்சொல்லி அவர்களாலே நானும் என் பக்கர்களும் அடியும் உதையும்பட்டு, அது பொறுக்காமல் ஆங்

கிலேயரிடம் அடைக்கலம் புகுந்து, அவர்கள் ஆதரவும் பெற்று பின்கோவிலில் எழுந்தருளி பக்தகோடிகளுக் கெல்லாம் காட்சி தந்துகொண்டிருப்பதாகச் சொல்லப்படும் அந்த கடவுள் இல்லை என்று சுயமரியாதை இயக்கம் சொன்னதுண்டு; இன்னும் சொல்லிவருகிறது.

"நீதிபெருங் குருவாகி மனவாக்கெட்டி நிச்சயமாய்ச்சொச் சமதாய் நிமலமாகி, வாதமிடும் சமயநெறிக்கு அறியாமல் மௌனத்தோர்பால் நின்று சோதியை"ப்பற்றி நமக்குக் கவலை வேண்டாமென்று சொன்னதுமுண்டு.

நமக்கு வேண்டிய காரியங்களை நம் அறிவைக் கொண்டு செய்து கொள்ளுவோம். கடவுள் அதன் குறுக்கே வந்து விழ வேண்டியதில்லை. கடவுள் வந்து குறுக்கே விழுந்து விடுவதி னால் நமது தப்பையும், நம்வேலையையும் அவர்தலையில் போட்டுவிடுகிறோம். அவரோ, பழயகாலத்துக் கடவுள். நமது வேலையோ இந்தக்காலத்து வேலை. பரம்பவதானவர் அநேக வேலையை உடையவர், விஞ்ஞானவாதி பௌதீகவாதி, சமயவாதி, வானசாஸ்திரவாதி, வடதுருவ வாதி, இமயமலை உச்சிஏறினவாதி ராஜீய வாதி, சீர்திருத்தவாதி இத்தனைவாதி களையும் கண்டு, அவரவர் திறமையைக் கண்டு அதற்கு சாக்ஷி யாயிருப்பதால் நமது வேலையை அவர் ஏற்றுக்கொள்ளாமல் நம்தலையிலேயே போட்டு விடுகிறார். நமக்கு காரியமும் கெட்டு கைப்பொருளும் போய்விடுகிறது. குற்றமும் நமக்குப் படுவ தில்லை. ஒரு தொழிலிலும் தேர்ச்சியடைய முடியவுமில்லை.

"அரசியல் வாழ்வு என்பது அயோக்கியர்கள் வயிற்றுப் பிழைப்பு. அரசியல் சீர்திருத்தம் என்பது அயோக்கியர்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை."

ஈ. வெ. ரா.

முக்கிய கவனிப்பு.

"குடி அரசு" (வாரப்பதிப்பு)

"பகுத்தறிவு" (மாதப்பதிப்பு)

அரசியல் புரட்டு,
மத இயல் புரட்டு,
பொருளியல் புரட்டு,
சமுதாய இயல் புரட்டு,
தேசீய இயல் புரட்டு

முதலாகிய பல புரட்டுகளையும், அவற்றைத் தங்கள் சுயநலங்களுக்குப் பயன்படுத்திக் கொண்டு மக்களை ஏமாற்றி வாழும் பல "தலைவர்கள்", மதாச்சாரியார்கள், மடாதிபதிகள், சீர்திருத்தக்காரர்கள், தேசபக்தர்கள், அரசாங்கத்தார் என்பவர்களின் யோக்கியதைகளையும் பச்சையாய் வெளியாக்கி மக்களுக்கு தைரியமாய் உண்மையை எடுத்துக்கூறும் புரட்சிப் பத்திரிகைகள் தென்னாட்டில் என்? இந்தியாவிலேயே இவற்றைத்தவிர வேறு கிடையாது என்று சொல்லலாம்

குடி அரசுக்கு வருட சந்தா ரூ. 3-0-0
பகுத்தறிவுக்கு ,, ரூ. 1-0-0
இரண்டு பத்திரிகைக்கும் சேர்த்து

வருட சந்தா ரூ 3—8—0

விலாசம்:—மானேஜர்,

குடி அரசு ஆபீஸ், ஈரோடு

பகுத்தறிவு வெளியீடுகள்.

தோழர் ஈ. வெ. ரா. எழுதியவை.

பெண் ஏன் அடிமையானாள்?	...	...	ரூ. 0 5 0
பிரகிருதிவாதம்	...	...	,, 0 3 0

அறிஞர் சார்ல்ஸ் T கோர்ஹாம் எழுதியது.

முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை	...	,,	0 5 0

Hon. பேர்ட்டிரண்ட் ரசல் எழுதியவை.

நான் ஏன் கிறிஸ்தவனல்ல?	...	,,	0 3 0
மதம் மக்களுக்குச் செய்த நன்மையென்ன?	...	,,	0 3 0

அறிஞர் இங்கர்சால் எழுதியவை.

மதம் என்றால் என்ன?	...	...	
கடவுள்	...	...	
நான் சமூகவாதியானதேன்?	...	...	,,
வால்டேர்	...	...	,,
பேய்-பூதம்-பிசாசு	...	...	,,

அறிஞர் பிரமச்சாரி M. A., L. T., எழுதியவை.

மதமும் விஞ்ஞானமும்	...	...	,, 0 3
பிரபஞ்ச உற்பத்தி ...	...	...	,, 0 3 0

அறிஞர் ஜோஸப் மெக்கேபி எழுதியது.

மதப்புரட்சி	...	...	,, 0 4 0

தோழர் M. சிங்காரவேலு B. A., B. L., எழுதியவை.

மெய்ஞ்ஞான முறையும் மூடநம்பிக்கையும்	1-ம் பாகம்	0 6 0
ஷ	2-ம் பாகம்	0 5 0

அறிஞர் ஜீன் மெஸ்லியர் எழுதியவை.

பகுத்தறிவு ஏகத்தோலிக்க குருவின் மரணசாசனம்		0 4 0
ஷ	2-ம் பாகம்	0 4 0

தோழர் அ. இராகவன் எழுதியது.

பெண்ணுரிமையும் மதமும்	...	...	,, 0 3 0

அறிஞர் சிவானந்த சரஸ்வதி எழுதியது.

ஞானசூரியன் (“நான்காம் பதிப்பு”)		...	,, 0 5 0
ஷ	காலிக்கோ பயிண்டு	...	,, 0 8 0
மரணத்திற்குப் பின் ஜீவனுண்டா? (ல. ப. நூ. பி.)			0 4 0

கிடைக்குமிடம்:—

குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

1.	இந்தியாவின் குறைபாடுகள் (160 பக்கம்)	0	8	0
2.	லெனினும், மதமும்	0	4	0
3.	பொதுவுடமைத் தத்துவங்கள்	0	3	0
4.	கடவுளும், பிரபஞ்சமும்	0	4	0
5.	உலைப்பாளிகளுக்குலம் இவ்வுலகமில்லை	0	1	0
6.	இராமாயண ஆராய்ச்சி பாலகாண்டம்	0	4	0
7.	,, அயோத்தியாகாண்டம் (200 பக்கம்)	0	8	0
8.	,, ஆரண்ய காண்டம்	0	4	0
9.	,, கிட்கிந்தா காண்டம்	0	4	0
[illegible]	[illegible]சியன் (காஞ்சிபதிப்பு) 200பக்கம்	0	5	0
[illegible]	[illegible]கதி அல்லது புராண ஆபாசம்	0	3	0
[illegible]	[illegible]கூற்று மெய்யா? பொய்யா?	0	3	0
[illegible]	[illegible]ம் அல்லது பார்ப்பனக் கொடுமை	0	4	0
[illegible]	[illegible]வ. ரா. சித்திரித்த மகாகாட்டி உபன்யாசம்	0	2	0
	அகத்தியர் ஆராய்ச்சி	0	2	0
	இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு	0	2	0
	சுயமரியாதைப் பாடல்	0	2	0
18	கதர் முடக்கிக்கை (இங்கிலீஷ்)	0	2	0
19.	பர்னார்ட்ஷா உபன்யாசம்	0	1	0
20.	சோஷியலிசம்	0	2	0
21.	போல்ஷிவிக் முறை	0	1	0
22.	ச. வெ. ரா இலங்கை உபன்யாசம்	0	0	9
23.	சமதர்ம உபன்யாசம்	0	0	6
24.	சோதிட ஆராய்ச்சி	0	4	0
25.	மனுதர்ம விளக்கம்	0	2	0
26.	மனுவும் மனுவும்	0	3	0
27.	பாரத ஆராய்ச்சி (ஆதிபருவம்)	0	4	0
28.	புதுச்சுயமரியாதை (200 பக்கம்)	0	8	0
29.	புராண ஆராய்ச்சி தக்க ஆதாரங்களுடன்	0	8	0
30.	கர்ப்ப ஆட்சி	0	6	0
31	ராவணப் பெரியார்	0	5	0
32	இங்கர்சால் பொன்மொழிகள்	0	4	0
33.	சுகம் எங்கே?	0	2	0
34.	ஜாதியை ஒழிக்க வழி	0	4	0
35.	கலைக்கியானம் அல்லது கைவல்யங்கட்டுரை	0	5	0

கிடைக்குமிடம்:— குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

Edited Printed & Published by E. V. Krishnasamy at the Unmai vilakam Press, Erode.